Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

விலை: ரூபா 8.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஐப்பசி- 18 ஹிஜ்ரி 1428 ஷவ்வால் 01 (04.11.2005) வெள்ளிக்கிழமை இதழ் 35

அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

UNIVERSITY OF JAFFNA LIBRARY PERIODICALS DIVISION

# போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலமே இராணுவத்தைப் பலப்படுத்த முடிந்தது!

## பலாலியில் படையினர் மத்தியில் ரணில் பெருமிதம்





கொழும்பு —

போர்நிறுத்த உடன்பாட்டின் மூலமே இராணுவத்தைப் பலப்படுத்த முடிந்துள்ளதுடன் பல்வேறு நாடுகளுடனும் இணைந்து இராணுவத்துக்கு தேவையான ஆயுததளபாட உதவிகளையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று பலாலி படைத்தளத்துக்கு விஜயம் செய்து படை அதிகாரிகள் மற்றும் படையினர் மத்தியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட வேளையே இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து இராணுவ ஹெலி மூலம் பலாலி (12 ஆம் பக்கம் பார்க்க)

## முப்படைகளின் தலைமைப்பொறுப்பில் ஜனாதிபதி சந்திரிகா தோற்றுவிட்டார்

### ஹெல உறுமய கண்டனம்

கொழும்பு —

இராணுவ உயரதிகாரிகள் பெருமளவில் கொல்லப்படுவதைத் தடுக்க முடியாத ஜனாதிபதி சந்திரிகா - முப்படைகளின் தலைவர் என்ற பொறுப்பில் தோல்வியடைந்துவிட்டதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் இது குறித்து கூறியுள்ளதாவது -

போர்நிறுத்த ஒப்பந்தத்தால் நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் தொடர்பாக பகிரங்க விவாதத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி முன்வரவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கைகளே மேற்கொள்ளப்பட்டன.

மிலேனியம் சிற்றி நடவடிக்கையை வெளிப்படுத்தியதன் மூலம் 17 இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட 64 புலனாய்வுத் துறையினர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். ஆண்டுக்கு 5 ஆயிரம் பேர் இராணுவத்திலிருந்து ஓடிக்கொண்டிருந்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துடன் இயங்கும் குழுக்கள் ஜனாதிபதி தேர்தலை சீர்குலைக்கலாம்!

### – பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை –

கொழும்பு —

இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக்குழுக்கள் கிழக்குப் பிரதேசத்தில் ஜனாதிபதித் தேர்தலை சீர்குலைக்கக்கூடும் என்று பவ்ரல் அமைப்பு எச்சரித்துள்ளது.

இது குறித்து பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசுகையில்–

கிழக்குப் பிரதேசத்தில் நாளாந்தம் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களினால் தேர்தல் சீர்குலைக்கப்படலாம். இதைத் தடுப்பதற்கான கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. உள்ளூர் தலைவர்கள் அதில் இணைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தலின்போது தம்மால் எதுவித இடையூறும் ஏற்படாது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே உறுதியளித்துள்ளனர். தென்னிலங்கையில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி, அனுராதபுரம், குருனாகல் மற்றும் புத்தளம் பகுதிகள் பதற்றப் பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகளை வெளிப்படுத்துவதைத் தடைசெய்வது என்று தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது வரவேற்கத்தக்கது. பெரும்பாலான தேர்தல் முறைப்பாடுகள் கட்சிகளிடையேயான (12 ஆம் பக்கம் பார்க்க)



## மகிந்த ஜனாதிபதியாக தெரிவானதும் நாடாளுமன்றத்தை கலைக்க திட்டம்!

### ஜே.வி.பியுடன் இரகசிய உடன்பாடு கைச்சாத்து

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றிபெற்றால் ஜனாதிபதியாகப் பதவியேற்றவுடன் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தும் திட்டம் அவரிடம் இருப்பதாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்களால் தகவல்கள் கசிந்துள்ளன.

இது தொடர்பாக ஜே.வி.பியுடன் மகிந்த ராஜபக்ஷ இரகசிய உடன்பாடு ஒன்றையும் செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

வெளிப்படையாகக் கையொப்பமிடப்பட்ட நிபந்தனைகளுடன் கூடிய உடன்படிக்கையை விட, மஹிந்த - ஜே.வி.பி கூட்டணியில் மேற்படி விடயம் முக்கியத்துவம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றி குறித்த பிரசார நடவடிக்கை களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியை விட, ஜே.வி.பி அதிகளவில் மேற்கொண்டு அதன் மூலம் மக்களின் ஆதரவைப் பெற்று, பொதுத்தேர்தலில் தற்போதுள்ளதைவிட, அதிகளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் மஹிந்தவும் இன்று யாழ்.வருகிறார்


யாழ்ப்பாணம் —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், படையினர் மத்தியில் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று காலை பலாலிக்கு விஜயம் செய்யவுள்ளதாக பலாலி படைத் தலைமையகம் தெரிவித்தது.

இன்று காலை பலாலிக்கு விஜயம் செய்யும் பிரதமர், பின்னர் எங்கு செல்வார் என்ற விபரம் தமக்கு அறிவிக்கப்படவில்லையெனவும், அவர் வந்த பின்னரேயே அந்த விபரம் தெரியவருமெனவும் படைத்தலைமையகம் நேற்றிரவு தெரிவித்தது.

## புலிகள் மீது போர்ப் பிரகடனம் செய்ய மகிந்த, ஜே.வி.பி தயாரா?

### - ரவூப் ஹக்கீம் கேள்வி -



கொழும்பு —

விடுதலைப்புலிகளை யுத்தத்தின் மூலம் தோற்கடிப்போம் என்றோ - அல்லது புலிகள் மீது யுத்தப் பிரகடனம் செய்யவோ மகிந்த ராஜபக்ஷ அல்லது ஜே.வி.பியினரால் முடியுமா என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார்.

திருகோணமலை - தோப்பூரில் ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் தாக்குதல் ஈ.பி.டி.பி. உறுப்பினர் பலி!

### 4 பொலிஸார், ஓட்டோ சாரதி காயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு - தாண்டவன் வெளியில் தினமுரசு பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பியினர் மீதும், பொலிஸார் பயணம் செய்த ஓட்டோ மீதும் நடத்தப்பட்ட தாக்குதலில் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு பொலிஸாரும், ஓட்டோ சாரதியும் படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் ஓட்டோ மீது துப்பாக்கிச் சூடு மற்றும் கைக்குண்டுத் (12 ஆம் பக்கம் பார்க்க)

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
EXPOAIR
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
Your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதினவெளியீடு
விக்ரம், அசின்
மணிவண்ணன் மற்றும் பலர் நடித்த


**மஜா**

ரிக்கும் மற்றும்பல
செய்துகொள்ளலாம்

காட்சிகள்:-10.30,2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் முதன்முறையாக




DIGITAL dts SOUND
ஒலிநயத்துடன்
இளைய தளபதி
விஜய் வெடிக்கும்

**சிவகாசி**

விசேட காட்சி
காலை 8.30 மணிக்கு

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

## சைவநெறித் தேர்வு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்தும் சைவநெறித் தேர்வு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இந்தத் தேர்வுக் குரிய சுட்டிலக்கம் இணைப்பிரதி தேர் வாளர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவை கிடைக்கப் பெறாதவர்கள் சைவபரிபாலனசபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளும்படி சைவபரிபால னசபை செயலாளர் வ.கந்தசாமி கேட் டுள்ளார்.

# யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை வெள்ளிவிழா

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை வெள்ளிவிழா நாளை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறை தலைவர் மா.சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தின ராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகன தாஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடா திபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப் புகள் பீடாதிபதி பேராசிரியர் கே.கந்த சாமி யாழ்.பல்கலைக்கழக விஞ் ஞான பீடாதிபதி பேராசிரியர் இ.குமார வடிவேல் ஆகியோர் கலந்துகொள் ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் வாழ்த்துரையை கலாநிதி த.கலாமணி, திருமதி ஜெ.இரா சநாயகம், திருமதி அ.சத்தியசீலன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

ஏற்புரைகளை யாழ்.பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் வ.ஆறு முகம், பேராசிரியர் க.சின்னத்தம்பி, பேராசிரியர் சபா.ஜெயராசா ஆகி யோர் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மூத்த கல்வி மான்களான கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்லால் பெரேரா, பேராசிரியர் சோ.சந்திர சேகரம் ஆகியோர் கௌர விக்கப்பட வுள்ளனர்.

சுன்னாகம் **நாகம்ஸ்**

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின தீபாவளி வெளியீடு
ஸ்ரீகாந், சோனியா அகர்வால்,
நமீதா, வடிவேலு நடித்த

**ஒம்புரக்கண்ணாலே**

காட்சிகள்:-11.00,3.00,7.00, 9.30, 1.00 (பு.நே)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரேதினவெளியீடு
தனுஷ்,
பிரியாமணி

**அது ஒரு கனாக்காலம்**

இசை:இளையராஜா
கதைவசனம்:பாலுமகேந்திரா

காட்சிகள்;-10.30, 2.30,6.30, 9.30 (புதிய நேரம்)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜய், ஜெனிலியா நடித்த

**சச்சீன்**

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

விசேட காட்சியாக ரஜனி, சிவாஜி, அம்பிகா நடித்த
படிக்காதவன் 9.00 மணி (பு.நே)

## சிறு விளம்பரம்

### அக்குபஞ்சர் வைத்தியம்

மூட்டுவாதம், வாதம், சலரோகம், உயர்ரத்த அழுத்தம், ஒற்றை தலை வலி, கைகால் உளைவுகள், உடல் பருமன் கூட்டுதல் குறைத்தல் போன்ற எந்த வகை நோயிற்கும் மருந்து மாத்திரைகள், பத்தியங்கள் இன்றி நிரந்தரத் தீர்வு பெற நாடவேண்டிய இடம் - ஷென்மென் அக்குபன்சர் வைத் தியசாலை, சிவராஜா அலென்யூ, தபால்பெட்டி சந்தி, பலாலி வீதி, திரு நெல்வேலி, யாழ்ப்பாணம். (கனி கிறீம் ஹவுஸ் முன்பாக.) *(2098)*

### விற்பனைக்கு

வீட்டு சுவரை மரங்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு - 132, கச் சேரி நல்லூர் சாலை, யாழ்ப்பாணம். *(சி/4803)*

# உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சு
# வடக்கு - கிழக்கு மாகாண சபை
## வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (நிகோட்)

நிதி - ஆசிய அபிவிருத்தி வங்கி
ஆஅவ கடன் இல:- 2084 - சிறீ (எஸ்எவ்)

## கேள்வி அறிவித்தல் இல: 59

1. வடக்கு – கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம் (NECORD - Ext) ஆகு செலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ'') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக் கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ், தகுதிவாய்ந்த கொடுப்பனவு களுக்கு இக் கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னால் தொழில்தருனராகக் குறிப்பீடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலை வரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப் பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

### அட்டவணை

| ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கேள்விப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| KN/NECORD - Ext/ ED/06 | கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நிர்வாக அலகு மற்றும் மாணவர் செயற்பாட்டு அலகு அமைத் தல். | M5 கட்டடங்கள் | 191,600/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.

I. நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங் களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப் படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப் பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. ஒப்பந்தகாரர் மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு, அல்லது திருப்தி கரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன், ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண் ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:- 026 – 2227434. ∴பக்ஸ்:– 026 – 2227401. இணையதள முகவரி:- www.necord.org ஈமெயில்:- necord@sltnet.lk)
6. கேள்வி ஆவணங்களை 28.10.2005 இலிருந்து 14.11.2005 வரை, காலை 9.30 இலிருந்து, மாலை 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 2,000/– ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், இதன் தொடர்பாக பந்தி 8 இல் குறிப் பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. பொறிவைத்த கேள்விகள் யாவும் தலைவர், திட்டகேள்விச் சபை, "நிகோட்", 55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு, 25.11.2005 காலை 11.30மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
9. முன்கூட்டியே கேள்விகோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 14.11.2005 ஆம் திகதி அன்று காலை 11.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

**த.லங்காநேசன்,**
**தலைவர், கேள்விச்சபை,**
**வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு மற்றும் அபிவிருத்தித் திட்டம்,**
**55, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை.**

(C/4808)

## நாதன்ஸ் சினிமாவின் பிறந்த தினம்

யாழ்.மக்களின் அபிமானம் பெற்ற குடும்பக் கலையகமான நாதன்ஸ் திரையரங்கு தனது முதலாவது வருடத்தை 03.11.2005 அன்று பூர்த்தி செய்து இரண்டாவது வருடத்தில் இன்று (04.11.2005) இல் வெற்றிகரமாகக் காலடியெடுத்து வைக்கிறான் என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

நன்றி

– நாதன்ஸ் சினிமா
நிர்வாகத்தினர், சகஊழியர்கள்.

## நல்லூர் லயன்ஸ் கழகம்

**நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையத்துடன் இணைந்து வழங்கும்**

## இலவச மருத்துவ முகாம்

இடம் : நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்

காலம : 06.11.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி

மேற்படி முகாமில் கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும், நீரழிவு நோய்ப்பரிசோதனை, இரத்த அழுத்தப்பரிசோதனை என்பன மேற்கொள்ளப்படும்.

தலைவர், நல்லூர் லயன்ஸ் கழகம்
IIS City Campus, 181 Navalar Road , Jaffna.

விளம்பர அனுசரணை :

கேதீஸ் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
இல. 5, பருத்தித்துறை வீதி, நல்லூர் மாக்கற், கல்வியங்காடு
தொலைபேசி : 021 222 7597

(C/4805)

# விண்ணப்பிக்காத 22 பேருக்கும் தபால்மூலம் வாக்களிக்க அனுமதி

## மொனராகலவில் சம்பவம்

கொழும்பு—

தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்காத - ஹெய்டியிலுள்ள இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும், 21 விவசாயிகளுக்கும் தபால் மூல வாக்களிப்புக்கான ஆவணங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மொனராகல மாவட்டத்திலே இந்தச் சம்புவம் இடம்பெற்றது.

தனது கணவர் தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பிக்கவில்லை என்று தபால் மூலம் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டிருக்கும் ஹெய்ட்டி சென்றுள்ள சிப்பாயின் மனைவி தெரிவித்தார்.

ஆனால், அவருக்கு தபால் மூலம் வாக்களிக்க அனுமதி கிடைத்துள்ளது.

தேர்தலுக்கு முன்னர் தனது கணவர் நாடு திரும்பினால் வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்கத் தனது கணவரை அனுமதிக்குமாறு தான் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

அத்துடன், தபால்மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பிக்காத 21 விவசாயிகளுக்கும் அதற்கான அனுமதி கிடைத்துள்ளது.

இது குறித்து தான் ஆராய்ந்து பார்த்துவிட்டு குறிப்பிட்டவர்களுக்குத் தேர்தல் தினத்தன்று வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்கத் தேவையான ஒழுங்குகளைச் செய்து கொடுக்கவுள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் எம்.ஏ. லலித் ஆனந்த தெரிவித்தார்.

அதேநேரம் கடந்த தேர்தல்களின்போது சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டிருக்கும் தபால் ஊழியர்களை இம்முறை தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்த வேண்டாமென தபால் மா அதிபர் சேர்வின் சேனாதீர அனைத்து தபால் அதிபர்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுடன் சம்பந்தப்பட்டதான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகளில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதைத் தவிர்க்கும் பொருட்டே இந்த உத்தரவைப் பிறப்பித்ததாக சேர்வின் சேனாதீர கூறினார்.

தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளில் சுமார் 20 வீதமானவை விநியோகிக்கப்பட்டுவிட்டதாகவும், இதுவரை வாக்காளர் அட்டை விநியோகத்தில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக எவ்வித தகவலும் கிடைக்கவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கேணல் மீடின் கொலை குறித்த தகவல் எதுவும் கிடைக்கவில்லை!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு—

இராணுவப் புலனாய்வு அதிகாரி கேணல் துவான் ரிஸ்வி மீடின் படுகொலை குறித்த தகவல் எதுவும் கிடைக்கவில்லையென இராணுவப் புலனாய்வுப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் விதாரண தெரிவித்தார்.

பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியவிற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

புலனாய்வு அதிகாரி கேணல் துவான் ரிஸ்வி மீடின் படுகொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார், அந்த விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து இராணுவத்திற்கு எவ்வித தகவலையும் தெரிவிக்கவில்லை.

எவ்வாறாயினும் புலனாய்வு அதிகாரி மீடினை கொலை செய்ததன் மூலம் போர்நிறுத்த உடன்படிக்கையை விடுதலைப் புலிகள் மீறியுள்ளனரென உத்தியோகபூர்வமாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு இராணுவம் அறிவித்துள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரணிலுக்கு அளிக்கும் வாக்குகள் பிரிவினைக்கே வழிவகுக்குமாம்!

## விமல் வீரவன்ச சொல்கிறார்



கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களிப்பது - பிரிவினைக்கு வாக்களிப்பதைப் போன்றதாகிவிடுமென ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் காலை கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

பிரிவினைவாதத்தை தோற்கடிப்பதாக ரணில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார். ஆனால், எவ்வாறு பிரிவினைவாதத்தை தோற்கடிப்பதென்பதனை அவர் தெரிவிக்கவில்லை.

ஒஸ்லோ பிரகடனத்தின்படி வடக்கு- கிழக்குப் பிரச்சினையை தீர்ப்பதென கூறப்பட்டுள்ளது. இதன்மூலம் வடக்கு - கிழக்குப் பகுதி தமிழர்களின் தாயகப் பிரதேசமென ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இதன் மூலம் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நிறுத்துவதற்கான வழியை ரணில் ஏற்றுக்கொள்கின்றார். இதை அவர் மறுப்பாரா?

எனவே, இந்த நாட்டை பிரிவினையிலிருந்து காப்பாற்ற எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று கிராம அலுவலருக்கு கட்டாயபணி

கொழும்பு—

வடக்கு - கிழக்கு விடுதலைப் புலிகளின் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் வாக்களிப்பதற்காக நிறுவப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் அந்தந்தப் பிரதேச கிராம சேவையாளர்களை கட்டாயம் பணியில் ஈடுபடுத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச மக்களுக்கான வாக்காளர் அட்டைகள் இந்த வாரம் விநியோகிக்கப்படவுள்ளன. அந்தந்தப் பிரதேச கிராம சேவையாளர்களும் வாக்களிப்பு நிலையங்களில் இருப்பதால் வாக்காளர்களை அடையாளம் காண்பது இலகுவாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களை உரியவகையில் அடையாளப்படுத்தத் தவறும் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு முன்னர் படிவங்களை நிரப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் வன்முறைகள் குறித்து எஸ்.எம்.எஸ் மூலம் முறைப்பாடு!

## பவ்ரல் அமைப்பு எற்பாடு

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலின் போது - தேர்தல் வன்முறைகள் தொடர்பாக முறைப்பாடு செய்ய வாக்காளர்கள் கைத்தொலைபேசி மூலமாக குறுந்தகவல் சேவையை (எஸ்.எம்.எஸ்) மேற்கொள்ள பவ்ரல் அமைப்பு தீர்மானித்தது.

இது தொடர்பாக பவ்ரல் அமைப்பின் நிர்வாகிகளில் ஒருவரான ஜெயோமி துஸ்யந்தன் கூறுகையில் -

கடந்த 2004 ஆம் ஆண்டுத் தேர்தலிலும் இது போன்ற எஸ்.எம்.எஸ் சேவை பயன்படுத்தப்பட்டது.

9 ஆயிரம் எஸ்.எம்.எஸ்கள் எமக்குக் கிடைத்தன. இந்தத் தகவல்கள் மூலம் தேர்தல் ஆணைக்குழு பொலிஸார் மட்டுமின்றி அம்புலன்ஸ் வாகனங்களை ஏற்பாடு செய்வதற்கும் உதவியாக இருந்தது என்றார்.

எதிர்வரும் தேர்தலில் நாடு முழுவதும் 20 ஆயிரம் கண்காணிப்பாளர்களைபவ்ரல்ஈடுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரச ஊடகங்களின் செயற்பாடு; சந்திரிகாவுக்கு ரணில் கடிதம்!



கொழும்பு—

அரச ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் ரணில் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடு முழுவதும் நாம் மேற்கொண்ட பிரசாரக் கூட்டங்களில் இடம்பெற்ற பொது விவாதங்களை ஒளிபரப்ப ரூபவாகினியிலும், ஐ.ரி.என்னிலும் நேரம் ஒதுக்கக்கோரி பலமுறை வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஒரு மணி நேரம் முதல் ஒன்றரை மணிநேரம்வரை இதற்குக் கோரியிருந்தோம் ஆனால், இதுவரையில் எமக்கு எதுவித பதிலும் கிடைக்கவில்லை.



ஊடகத்துறை அமைச்சர் மற்றும் ஜனாதிபதி என்ற வகையில் இதுவிடயத்தில் நீங்கள் தலையிட்டு தேர்தல் பிரசாரங்களை ஒளிபரப்புவதில் அரச ஊடகங்கள் ஜனநாயக பூர்வமாக செயற் பட அறிவுறுத்த வேண்டுகிறோம். இது தொடர்பாக நீங்களும் அக்கறை கொண்டிருப்பதாக நாம் நம்புகிறோம்.

எம்முடைய தேர்தல் பிரசாரங்கள் தொடர்பான ஒளிபரப்புக்களை விட சுதந்திரக்கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவின் பிரசாரங்கள் அதிகம் இடம்பெறுதாக சுயாதீன கண்காணிப்புக்குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

எமது அடிப்படை மனித உரிமையான இவ்விடயத்தை செயற்படுத்த நீங்கள் ஆதரவளிக்க வேண்டுமென்று ரணில் தனது கடிதத்தில் மேலும் கூறியுள்ளார்.

# இராணுவத்தினரின் நலனுக்கு தனியான அமைச்சு உருவாகும்!

## ரணில் உறுதிமொழி

கொழும்பு—

இராணுவத்தினரின் நலனுக்கு தனி அமைச்சு அமைக்கப்படுமென ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மேயரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் அங்கவீன மடைந்துள்ள இராணுவத்தினரை ரணில் சந்தித்தார்.

தங்களது பிரச்சினைகள் குறித்து அங்கவீனமடைந்த இராணுவத்தினர் ரணிலிடம் எடுத்துக் கூறினர். தான் ஜனாதிபதியானதும் அவர்களின் பிரச்சனைகளுக்காக மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளை ரணில் விளக்கினார்.

படைவீரர்களுக்கென தனியான அமைச்சு ஒன்றை ஏற்படுத்த தான் திட்டமிட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுச் செல்பவர்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். புதிய அமைச்சினூடாக இந்தப் பிரச்சனைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இராணுவத்தை முழுமையான ஆறு படையணிகளாகத் தான் உருவாக்க உள்ளோமே தவிர, ஜே.வி.பி தலைவர் சேமவன்ச அமரசிங்க கூறுவதைப் போன்று இராணுவத்தை கலைத்துவிடமாட்டோம் என்று ரணில் மேலும் கூறினார்.

# மங்கள சமரவீரவின் கருத்துக்கு பொலிஸார் தரப்பில் கண்டனம்!



கொழும்பு—

பொலிஸாரின் கல்வித்தரம் குறித்து அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்த கருத்துக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும், பொலிஸ் இன்ஸ்பெக்டர் சங்கமும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து தேசிய பொலிஸ் தலைவர் ரஞ்சித் அபேசூர்ய கூறுகையில் -

பொலிஸில் இணைவதற்கு கல்விப் பொதுத்தராதர சாதாரண அளவிலான கல்வித் தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மங்கள சமரவீரவின் கூட்டத்தில் தேர்தல் பதாகை ஒன்றை பொலிஸார் அகற்றியதற்கு அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆனால், தேர்தல் ஆணைக்குழு அளித்துள்ள விதிகளின்படி தான் மங்கள சமரவீர கூட்டத்திலிருந்து பதாகை அகற்றப்பட்டது எனத் தெரிவித்தார்.

அதேவேளை, பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் சங்கத்தின் தலைவர் தலே குணரட்ன இதுகுறித்து கூறியுள்ளதாவது -

பொலிஸார் சட்டவிரோதமாக ஏதேனும் செயற்பட்டிருந்தால் உரிய அதிகாரிகளிடம் தான் முறைப்பாடு செய்யவேண்டும். அதை விடுத்து அவர்களை அவமதிக்கும் வகையில் பொதுக் கூட்டங்களில் பேசுவது முறையல்ல.

பொலிஸ் துறையில் முன்பைவிட இப்போது பட்டதாரிகளும் இணைந்து வருகின்றனர். மங்கள சமரவீர கூறுவதைப் போல பொலிஸில் இணைவதற்கும் 8ஆம் தரம் கல்வித் தகுதி என்பது 20 ஆண்டுகளுக்கு முந்தைய நடைமுறை என அவர் மேலும் தெரிவித்தார்.

# நீதியான தேர்தல் குறித்தே சர்வதேச சமூகம் அக்கறை

## ஜப்பானிய தூதுவர்

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் நடைபெறவேண்டும் என்பதில் சர்வதேச சமூகம் அக்கறையாக இருப்பதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோ சூடா தெரிவித்துள்ளார்.

சமாதானம், அபிவிருத்தி, நல்லாட்சி என்பவற்றை உறுதிப்படுத்த தேர்தல் நீதியாக நடைபெறுவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தலைக் கண்காணிக்கும் உள்நாட்டு அமைப்புக்கள் இரண்டுக்கு 11 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கும் நிகழ்வில் கலந்துகொணடு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# பரபரப்பான நேற்றைய ஆட்டத்தில் தொடரைக்கைப்பற்றியது இந்தியா!







புனே —

இந்திய - இலங்கை அணிகளுக்கிடையிலான - ஒருநாள் போட்டித் தொடரின் நான்காவது ஆட்டத்திலும் வெற்றிபெற்ற இந்திய அணி- வீடியோ கோன் கிண்ணத் தொடரைக் கைப்பற்றியது.

மராட்டிய மாநிலம் புனே நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

தொடர்க்க வீரர்களாக சங்கஹாரவும், ஜெயசூரியவும் களம் இறங்கினர். 17 ஓட்டங்களிலேயே இலங்கை தனது முதல் விக்கெட்டை பறிகொடுத்தது. 8 ஓட்டங்கள் எடுத்த சங்கஹார அஜித் அகர்கரின் பந்தை எதிர்கொண்டு எல்.பி. டபுள்யூ ஆகி வெளியேறினார்.

அதன் பின்பு ஜெயசூரியவுடன் தரங்க ஜோடி சேர்ந்தார். ஜெயசூரியவாலும் மைதானத்துக்குள் தாக்குப்பிடித்து நிற்க முடியவில்லை. அவரையும் அஜித் அகர்கர் வீழ்த்தினார். 17 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் அவர் எல்.பி. டபிள்யூ ஆகி வெளியேறினார். பின்னர் தரங்கவுடன் டில்ஷான் ஜோடி சேர்ந்தார்.

இலங்கை அணி 10 ஓவரில் 47 ஓட்டங்கள் எடுத்து 2 விக்கெட்டுகளை இழந்தது.

தரங்க நிதானமாக ஆடி 21 ஓட்டங்களை எடுத்தார். அப்போது ஶ்ரீசந்தின் பந்துவீச்சில் அகர்காரிடம் பிடிகொடுத்து வெளியேறினார். டில்ஷானுடன் அத்தபத்து ஜோடி சேர்ந்தார். அத்தபத்து ஜோடி சேர்ந்ததும், டில்ஷான் விரைவாக ஓட்டங்களை எடுத்தார். இதனால் இலங்கை அணியின் ஓட்டங்கள் வேகமாக உயர்ந்தது.

டில்ஷான் சிறப்பாக விளையாடி அரைச்சதம் அடித்தார். சிறப்பாக விளையாடிய டில்ஷான் 68 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஹர்பஜனின் பந்தில் டெண்டுல்கரிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அப்போது இலங்கை 29.3 ஓவரில் 148 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அதனைத் தொடர்ந்து 5 அவது விக்கெட் ஜோடியாக அத்தபத்துடன் ஆர்னோல்ட் ஜோடி சேர்ந்தார். அத்தபத்தும் அரைச் சதத்தைக் கடந்தார்.

இலங்கை 231 ஓட்டங்களை எடுத்தபோது ஆர்னோல்ட் 32 ஓட்டங்களுடன் பதானின் பந்தில் கிளீன் போல்டானார். அதன் பின்னர் இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் சரிய ஆரம்பித்தன. மஃரூப் 3, அத்தபத்து 100 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்கலாக 87, முரளிதரன் 9, சொய்சா 2, வாஸ் 11 ஓட்டங்களுடனும் வெளியேறியதனால் 49.5 ஓவர்களில் 261 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இந்திய தரப்பில் அகர்கர் சிறப்பாக பந்து வீசி 9.5 ஓவர்களில் 44 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதான், ஶ்ரீசந்த், ஷேவாக், ஹர்பஜன் ஆகியோர் தலா 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி தொடக்கத்திலேயே தடுமாறத் தொடங்கியது. ஸ்கோர் 23 ஆக இருந்தபோது - வாஸின் பந்தில் டெண்டுல்கர் 11 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஸ்கோர் 34ஆக இருந்தபோது யுவராஜ் சிங் 10 ஓட்டங்களுடன் சொய்சாவின் பந்தில் டில்ஹாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் ஷேவாக்குடன் ராவிட் இணைந்து அணியை விறுவிறுப்பான நிலைக்கு கொண்டு சென்றனர். ஸ்கோர் 112 எட்டியபோது 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த ஷேவாக் 58 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து வேணுகோபால் ராவ் இணைந்தார் ராவிட்டுடன். இருவரது ஆட்டமும் வேகமாக இருக்கையில் அணியின் ஸ்கோர் 176 ஆக இருந்தபோது வேணுகோபால் ராவ் ஆட்டமிழந்தார்.

முரளிதரனின் பந்தில் சங்கஹாரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் - 41 பந்துகளில் 4 பவுண்டரிகள், 1 சிக்சர் அடங்கலாக 38 ஓட்டங்களை எடுத்தார்.

இதனை அடுத்து டோனி பலத்த எதிர்பார்ப்புடன் களமிறங்கினார். இந்த நிலையில் ராவிட் ஸ்கோர் 180 ஆக இருந்தபோது அட்டமிழக்க நேரிட்டது.

72 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் 63 ஓட்டங்களை இவர் எடுத்தார்.

பின்னர் டோனியுடன் ஜோடி சேர்ந்த பதான் ஓட்டமெதனையும் எடுக்காமல் ஆட்டமிழக்க இந்திய அணி சிறிது நேரம் தடுமாறியது.

இறுதி ஓவர் வரை வெற்றி தோல்வி நிர்ணயிப்பது கடினம் என்ற ஒரு நிலை இருந்தபோதும் - டோனியும் ரெய்னாவும் அதிரடி ஆட்டம் மூலம் 45.4 ஆவது ஓவரிலேயே வெற்றி இலக்கை எட்டினார்கள்.

கடைசி 12 ஓட்டங்களை எடுக்க வேண்டியிருந்த இந்திய அணிக்கு இரண்டு சிக்ஸர்கள் விளாசிய டோனி வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார்.


டோனி 40 பந்துகளில் 1 பவுண்டரி 2 சிக்ஸர்களுடன் 45 ஓட்டங்களையும், ரெய்னா 30 பந்துகளில் 2 சிக்சர்களுடன் 31 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் முரளிதரன் 3, வாஸ், பெர்னாண்டோ, சொய்சா, தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் நாயகனாக அகர்கர் தெரிவானார்.

4 போட்டிகளில் வெற்றிபெற்ற இந்திய அணி இந்தத் தொடரைக் கைப்பற்றியது.







## விளையாட்டு

## இளைஞர்களின் எழுச்சியால் இந்திய அணி பிரகாசிக்கிறது!

### - இலங்கை பயிற்சியாளர் ரொம் மூடி -



புனே —

இளைஞர்களின் எழுச்சியால் இந்திய அணி பிரகாசித்து வருகிறது என இலங்கை அணியின் கிரிக்கெட் பயிற்சியாளர் ரொம் மூடி தெரிவித்தார்.

புனேயில் நேற்றைய போட்டி ஆரம்பமாகும் முன்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் -

முதலிரு போட்டிகளில் இலங்கை அணி சரியாக விளையாடா விட்டாலும் ஜெய்ப்பூர் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 260 இல் இருந்து 270 ஓட்டங்கள் எடுத்தாலே போதுமான ஓட்டங்கள் என்றே சொல்லலாம். ஆனால் இலங்கை அணி 298 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஆனால், அன்றைய போட்டியில் டோனியின் எழுச்சியால் இந்தியா வெற்றிபெற்று விட்டது. அவருடைய ஆட்டம் யாருடனும் ஒப்பிடமுடியாத அளவுக்கு இருந்தது. அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்டின் அதிரடி ஆட்டம் டோனியிடம் வெளிப்பட்டது.

அவர் இதேபோல மற்ற நாட்டு வீரர்களின் பந்து வீச்சுக்கும் திறமையாக ஆடுவாரா? என்று பார்க்க வேண்டும். இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா மைதானங்களிலேயும் அவர் சிறப்பாக ஆடி தனது திறனை வெளிப்படுத்த வேண்டும்.

இளைஞர்களின் எழுச்சியால் இந்திய அணி பிரகாசித்து வருகிறது. இந்திய அணியில் இதற்கு முன்பு இந்த அளவுக்கு இளைஞர்கள் இல்லை. எதிரணி பந்து வீச்சாளர்களை திறமையாக கையாளுகின்றனர். ஒருங்கிணைப்புத் தன்மையோடு விளையாடுகிறார்கள்.

இலங்கை அணியை 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிக்குத் தயார்படுத்துவதே எங்கள் நோக்கமாகும். ஒரு தொடரை வைத்து இலங்கை அணியை எடைபோட்டுவிட முடியாது. எங்கள் அணியில் திறமையான வீரர்கள் உள்ளனர். இந்தியாவுக்கு எதிராக இலங்கையில் நடந்த போட்டியில் இலங்கை அணி பிரகாசமாக ஆடியதை மறந்துவிட முடியாது என்று ரொம் மூடி கூறினார்.

### மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக

## பொண்டிங்கின் அபார சதத்தால் அவுஸ்ரேலியா 340 ஓட்டங்கள்!



பிறிஸ்பேர்ன் —

மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய அணி சற்றுத் தடுமாறினாலும் - பொண்டிங்கின் அபார சதத்தால் 7 விக்கெட் இழப்புக்கு 340 ஓட்டங்களை எடுத்தது.

பிறிஸ்பேர்னில் நேற்று ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

ஹைடனும், ஹுசேயும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ஸ்கோர் 9ஆக இருந்த போது - ஒரே ஒரு ஓட்டத்தை எடுத்திருந்த ஹுசே - பவலின் பந்துவீச்சில் ரம்டீனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து, பொண்டிங் பதிலுக்குக் களமிறங்கினார். ஹைடனுடன் இணைந்து பெரும் சிரமப்பட்டே இவரும் ஓட்டங்களை எடுத்தார். ஸ்கோர் 101ஐ எட்டும் வரை இந்த ஜோடி தாக்குப்பிடித்தது.

தொடக்க வீரர் ஹைடன் 80 பந்துகளில் நான்கு பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்களை எடுத்திருந்த நிலையில், கொலிமோரின் பந்து வீச்சில் எல்.பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் கிளார்க் களமிறங்கினார். அவர் ஸ்கோர் 108ஆக இருந்த போது - 13 பந்துகளில் 5 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். கொலிமோர் வீசிய பந்தை அடித்தபோது ரம்பீனிடம் பிடிகொடுத்து அவர் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாகக் களமிறங்கிய கடிச்- கொலிமோரின் பந்துவீச்சில் கைலிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவர் எந்தவொரு ஓட்டத்தையும் பெறவில்லை.

தொடர்ந்து பொண்டிங்குடன் இணைந்து கொண்ட கில்கிறிஸ்ட் அணியைத் தூக்கி நிறுத்துவதில் கணிசமான பங்கு வகித்தார். ஸ்கோர் 215 ஆக உயர்ந்தபோது இவர் ஆட்டமிழக்கும் வரை - 64 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களை எடுத்தார். கொலிமோரின் பந்தில் இவர் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து பொண்டிங்குடன் வட்சன் இணைந்தார். இவர் ஓரளவுக்கு நிதானமாக ஆடியதால் அணியின் ஸ்கோர் 273 ஆக உயர்ந்தது. இந்தநிலையில் வட்சன்- எட்வேட்ஸின் பந்தில் எல்.பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார்.



அடுத்து பொண்டிங்குடன் வோன் இணைந்த சற்று நேரத்திலேயே - ஸ்கோர் 294 ஐ எட்டியிருந்தபோது பொண்டிங் ஆட்டமிழந்தார். லோசனின் பந்தில் சார்வானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்த இவர் 213 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 149 ஓட்டங்களைக் குவித்தார்.

அவருக்குப் பதிலாக வோனுடன் லீ இணைந்தார். இவர்கள் இருவரும் இணைந்து 7 விக்கெட் இழப்புக்கு 340 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

வோன் 46 பந்துகளில் 31 ஓட்டங்களை எடுத்த நிலையிலும், லீ 43 பந்துகளில் 19 ஓட்டங்களை எடுத்த நிலையிலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் கொலிமோர் 4 விக்கெட்டுக்களையும், லோசன், எட்வேட்ஸ், பவல் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## எமது சுயநலனுக்காக

# சிறுசிறு குளங்களை மூடி கட்டடங்களை அமைத்து நாம் இயற்கைக்கும் விரோதியாகிவிட்டோம்!

## வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம்—

யாழ்ப்பாண மக்கள் தமது சுயநலம் காரணமாக எத்தனையோ சிறுகுளங்களை நிரவி கட்டடங்களை எழுப்பிவிட்டிருக்கின்றோம். பண்டைக் காலத்தில் எமது தேசத்து மன்னர்கள் நீர்ச் சூழலைப் பேண மிகமிக அதிகமாகப் பாடுபட்டுள்ளனர்.

மழையின்போது மண்ணில் விழும் ஒருதுளி நீரையும் வீணே கடலில் கலக்க விடமாட்டேன் எனக் கூறி பெரிய, சிறிய நீர்த் தேக்கங்களை அன்றைய மன்னர்கள் அமைத்துத் தந்தனர். ஆனால், இன்று நாமோ எமது வீட்டில் வீழும் ஒருதுளி நீரைக்கூட வளவில் தேங்கி நிற்கவிடாது வெட்டி, வீதிக் கால்வாய் வழியே கடலுக்கு அனுப்பிவிடும் மன நிலையில் இருக்கையில், எமது நிலத்தடி நீரை எவ்வாறு சேமிப்பது?

மறுபக்கத்தில் நீர்ப்பம்பி மூலம் அளவுக்கு மீறி நிலத்தடி நீரை இழுத்தெடுத்து வீணடித்து வருகிறோம். இது ஒருபக்க சூழல் பாதிப்பு என்றால், மறுபக்கத்தில் எமது பிரதேசத்தில் குறிப்பாக யாழ்ப்பாண நகரைச் சுற்றிய பிரதேசங்களில் மிகவேகமாக மாசடைந்துவருகிறது.

நைதரசனின் செறிவு கூடிக் கொண்டும்வருகிறது என ஆய்வுகள் கூறுகின்றன. மொத்தத்தில் நாம் இயற்கைக்கு விரோதிகளாகிவிட்டோம். இதன் காரணமாக நாம் நாமாகவே மெல்ல மெல்ல தற்கொலை புரிந்துவருகின்றோம் என்றே கூறவேண்டியுள்ளது என்று கருத்துத் தெரிவித்தார் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன்.

யாழ்.மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட நூறு பாடசாலைகளதும் சுற்றாடல் முன்னோடிக் குழுப் பொறுப்பாசிரியர்களுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிக் கருத்தரங்கு ஒன்று மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் யாழ்ப்பாண உப பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரை வழங்குகையிலே வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் அங்கு கருத்து வழங்குகையில் -

எந்த ஒரு செயலையும் மாணவர்களுக்கூடாகச் செய்வது இலகுவானது. அதனால்தான் இந்தத் திட்டமும் பாடசாலை மாணவர்களை மையப்படுத்திக் கொண்டுவரப்பட்டுள்ளது. சூழல் பாதுகாக்கப்படாவிட்டால், மனித குலத்துக்கே எதிர்காலம் இல்லை என்பது உண்மையாகும்.

இன்று சர்வதேச ரீதியில்கூட சூழல் தொடர்பான விடயங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகிறது. எமது பிரதேசத்தில் சூழல் எவ்வாறு குழப்பம் அடைந்துள்ளது என்பதுபற்றி நாம் நன்றாகவே அறிய முடியும். கடந்த ஒருசில தசாப்தங்களுக்கு முன் இருந்த பல பறவையினங்களை இன்று எங்களால் பார்க்க முடியாதுள்ளது.

சர்வதேச ரீதியில் கூட பல உயிரினங்கள் அழிந்துவிட்டன. இலங்கையில் பல உயிரினங்களைப் பிடிப்பதோ, பிடித்து வைத்திருப்பதோ தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுவாகவே ஆசிரியர்கள் எமது சூழலைப் பாதுகாக்க மாணவர்களுக்கூடாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எமது கலைத் திட்டங்களில் சூழல் பாதுகாப்புத் தொடர்பான எண்ணக் கருக்கள் நிறையவே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நாம் சூழலைப் பேண பாடசாலை மாணவர்களுக்கூடாகவும் நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமானதாகியுள்ளது.

'நாம் தா எனக் கேட்காமலேயே இறைவனால் தரப்பட்ட வரமே தாவரம்' என ஒரு விளக்கத்தை அண்மையில் ஒரு பெரியவர் கூறக் கேட்கமுடிந்தது. அது உண்மையில் எவ்வளவு பெரிய வார்த்தையாக உள்ளது?

இயற்கை சீற்றமடையும் போது, வல்லரசான அமெரிக்காவினால்கூட தடுத்திட முடியாது போய்விட்டதே. இயற்கை பல சந்தர்ப்பங்களில் தன்னை யாராலும் வெல்லமுடியாது என்பதை நன்றாகவே காட்டிவிட்டிருக்கிறது. அது தனது சமநிலையைப் பேண ஏதோ ஒரு விதத்தில் ஏதோ ஒரு நடவடிக்கையை எடுத்தே வருகிறது.

எனவே, நாம் அத்தகைய பாதிப்புக்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க மாணவ சமூகத்துக்கூடாக அதிகமான அக்கறையைக் காட்ட வேண்டியவர்களாக உள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(31)

### விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்பு

வடமராட்சி—

வடமராட்சிப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உணவு பதனிடும் பயிற்சி வகுப்பை எவ்.ஏ.ஓ நிறுவன நிதி உதவியுடன் விவசாய இலாகா நடத்தி வருகிறது.

இந்த அடிப்படையில் நேற்று அல்வாய் வடக்கிலும், நாளை வியாபாரிமூலையிலும், 10 ஆம் திகதி புலோலி மேற்கிலும், 11 ஆம் திகதி அல்வாய் வடமேற்கிலும் நடத்தப்படவுள்ளதாக பருத்தித்துறை விவசாய போதனாசிரியர் வி.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

(17)

### வறிய மாணவரின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவி

நெடுந்தீவு—

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுக் கிளையால் நெடுந்தீவில் உள்ள மூன்று உயர்தரப் பாடசாலைகளில் கற்கும் வறிய மாணவர்களது கல்விச் செயற்பாட்டுக்கு தலா 1500 ரூபா வீதம் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் நெடுந்தீவு மக்களது பாவனைக்கென நெடுந்தீவு கிளைக்கு இரண்டு சக்கர உழவு இயந்திரத்தில் பொருத்தக்கூடிய தண்ணீர் பவுசர் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (113)

### வீட்டுத்தோட்ட பயிற்சி வகுப்பு

வடமராட்சி—

வடமராட்சியிலுள்ள மாதர் சங்க அங்கத்தவர்களுக்கு வீட்டுத்தோட்ட பயிற்சி வகுப்பு விவசாய இலாகாவினால் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வகையில் கரணவாய் வடக்கு மாதர் சங்க அங்கத்தவர்களுக்கு எதிர்வரும் 7, 11 ஆம் திகதிகளில் மாதர் சங்க மண்டபத்தில் இந்த வீட்டுத் தோட்டப்பயிற்சி நடைபெறும் எனக் கரவெட்டி விவசாய போதனாசிரியர் வி. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

(17)

### ஆன்மீக நிகழ்வு

வடமராட்சி—

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வசாவிளான் மத்திய மகாவித்தியாலய மாணவர்களின் "பல்கலை சங்கமம்" நிகழ்வு இடம்பெறும். (17)

### பருத்தித்துறை நூலக வளாகத்தில் மழைநீர் தேக்கம்

பருத்தித்துறை—

பருத்தித்துறைப் பிரதேச சபை பொது நூலக வளவில் மழை நீர் நீண்ட நாட்களாகத் தேங்கி நிற்பதால் நூலகத்துக்கு வரும் பொது மக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நூலகத்தின் வாயிற் பகுதியிலும், நூலக முற்றத்திலும் இவ்வாறு மழைநீர் தேங்கி சேறும் சகதியுமாகவுள்ளதால், பொது மக்கள் தமது வாகனங்களை நிறுத்தி வைக்கமுடியாமல் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை பிரதேச சபையின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் குடிநீர் வழங்கும் பவுசர்கள் மற்றும் வாகனங்கள் இந்நூலக வளாகத்திலே நிறுத்தி வைக்கப்படுவதாலும், நூலக வளாகம் சேறும் சகதியுமாகக் காணப்படுவதாலும் பொதுமக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருவதைக் காணக்கூடியதாயுள்ளது. (14)

## கோப்பாய் கோட்ட பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி

கோப்பாய்—

இவ்வாண்டு கோப்பாய் கல்விக் கோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வந்த பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சில பூர்த்தியடைந்துள்ளன.

சிறுப்பிட்டி தமிழ்க் கலவன் பாடசாலை கட்டட திருத்தம் அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை கட்டட திருத்தம் நீர்த்தாங்கி அமைக்கும் பணிகள் அச்செழு தமிழ்க் கலவன் பாடசாலை கட்டட நிர்மாணப் பணிகள் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியின் கட்டட நிர்மாணப் பணிகள் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி நூல் நிலையம் அமைத்தல் வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நூல் நிலையம் அமைத்தல் வகுப்பறை புனர்நிர்மாணம் ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வந்த திட்டங்களே நிறைவடைந்துள்ளன.

மேலும் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் சிறுப்பிட்டி தமிழ்க் கலவன் பாடசாலை அச்சுவேலி மத்திய கல்லூரி உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் இடைக்காடு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் பல்வேறுபட்ட திட்டங்கள் நடைபெற்றுவருவதாகவும் விரைவில் இவை முடிவடையவுள்ளதாகவும் கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்தார்.

## நெடுந்தீவு கூத்துக் கலைஞர்கள் இணைந்து நாடகம் மேடையேற்றம்!

நெடுந்தீவு—

நெடுந்தீவில் உள்ள கூத்துக் கலைஞர்கள் பலர் இணைந்து நீண்டகாலத்தின் பின்பு கடந்த திங்கட்கிழமை பாரம்பரிய கலைகளில் ஒன்றான மரியதாசன் நாட்டுக்கூத்தை மேடையேற்றியுள்ளனர்.

பெருந்திரளான மக்கள் இந்தக் கூத்துக்கு வருகைதந்து மேலும் இக்கலை வளர ஒத்துழைப்பு வழங்கியிருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

நெடுந்தீவிலுள்ள அண்ணாவிமார்களில் எஸ்.அமிர்தநாதர், சை.யேசுதாசன் ஆகியோரின் நெறியாள்கையிலே நெடுந்தீவிலுள்ள கலைஞர்கள் ஒன்றிணைந்து இந்தக் கூத்தை மேடையேற்றியுள்ளனர்.

இதேவேளை இந்தக் கூத்தை மேடையேற்ற ஏற்படும் செலவின் பெரும்பகுதியை கலைஞர்களே பங்களிப்புச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் இதன் காரணமாகவே தொடர்ச்சியாக கூத்துக்களை மேடையேற்றமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுவதுடன் கலைஞர்கள் ஒருங்கிணைந்து அவர்களை முன்னேற்றவும் கலைகளைத் தொடர்ந்து வளர்க்கும் வகையில் மேடையேற்றவும் அரச மட்டத்தில் உதவிகள் தமக்குக் கிடைப்பதில்லை எனவும் இவ்வாறான உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் தொடர்ந்து கைவசமுள்ள கூத்துக்களை மேடையேற்றி பாரம்பரிய கலைகளை அழியவிடாது காக்கமுடியும் எனவும் கலைஞர்கள் மத்தியில் கருத்துக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(113)

# கொடுப்பனவு வழங்கப்படாமையால் முன்பள்ளி ஆசிரியர்கள் அவதி!

நெடுந்தீவு—

நெடுந்தீவிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்படாமையால் சேவையடிப்படையில் பெரும் சிரமங்கள் மத்தியில் கற்பித்தலை தொடர்ந்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கம் நெடுந்தீவு பிரதேச சபை என்பவற்றினூடாக ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்தபோதும் அவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளமையாலேயே நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவிலுள்ள சுமார் 5 இற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சேவை நோக்குடனேயே பணியாற்றிவருகின்றனர்.

இதேவேளை பல முன்பள்ளிகள் மலசலகூட வசதிகளோ குடிநீர் வசதிகளோ இன்றியே காணப்படுகின்றன. இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இது தொடர்பாக உரியவர்கள் ஆவன செய்யவேண்டுமென பெற்றோர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (113)

### சிரமம்தரும் சுவரொட்டிகள்

கோப்பாய்—

இருபாலை - கோப்பாய் பகுதிகளில் வீதிச் சைகைகளும் யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில் இடமும் தூரமும் அறிவதற்காக சந்திகளில் அமைக்கப்பட்டிருக்கும் சைகைக் கற்களும் சைகைகளும் திரையரங்குகளின் விளம்பரச் சுவரொட்டிகளை ஒட்டுவோரால் நாசம் செய்யப்பட்டுவருகிறது.

இதனால் வீதிச் சைகைகள் மக்கள் போக்குவரத்துக்கு எவ்வித பயன்பாடும் இன்றிய நிலையில் காணப்படுகிறது. இதனால் போக்குவரத்தில் ஈடுபடுவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இவற்றைக் கருத்திற்கொண்டு சுவரொட்டிகளை ஒட்டுவோரை - இந்தச்செயலைத் தடுத்துநிறுத்த அதிகாரமுள்ளவர்கள் தடைசெய்ய வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தொலைபேசியூடாக மகிந்தவுக்கு ஆதரவாகப் பிரசாரம்!

பருத்தத்துறை—

வடமராட்சி பிரதேசத்தில் அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள்மூலம் சிலர் அண்மை நாட்களாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தேர்தல் பிரசார நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா ரெலிகொம்மால் இணைப்பு வழங்கப்பட்டுள்ள பொது மக்களின் வீட்டுப் பாவனையிலுள்ள தொலைபேசிகளுக்கே உள்வரும் அழைப்புகள் மூலம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவோர் மேலதிகமான விபரங்களை பெற நீங்கள் மாலையில் இதயவீணை ஒலிபரப்பைக் கேட்குமாறு தெரிவிப்பதாகவும் தொலைபேசி பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்தத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று ஸ்ரீலங்கா ரெலிகொம் வட்டாரங்கள் தெரிவித்தன.

(14)




கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் பொலிகண்டி கிழக்கு கடற்தொழிலாளர்களுக்கான வெளி இணைப்பு வழங்கும் நிகழ்வில் சக்கோட்டை பங்குத்தந்தை எம்.பத்திநாதர் பயனாளி ஒருவருக்கு இயந்திரம் வழங்குவதையும், அலுவலர் ரட்ணகுமார் ஆகியோரையும் படத்தில் காணலாம். (91)



## சிநேகிதியே

# பெண்களின் வாழ்வும் முன்னேற்றமும்

'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்' அறிஞர் ஒருவர் பெண்ணினத்துக்காய் பாடினார். ஆனால் பெண்களோ பா்டிய பொழுதுகளில் பெரும் பேறு பெற்றவர்களாகவும், வாழும்போது வதைபடுபவர்களாகவும் பெருமளவில் இருக்கத்தான் செய்கின்றார்கள். மரபுகள், பழக்கவழக்கம், பாலியல் வேறுபாடுகள், பாலியல் சுரண்டல், வன்முறைகள் போன்ற இன்னோரன்ன காரணிகளால் பாதிப்படைந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

பெண்கள் இன்று அறிவு ரீதியாக முன்னேறி, தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டாலும் - மனித வாழ்வில் சுய நலத்துக்கும், பொது நலத்துக்குமிடையேயான போராட்டம் நிலவத்தான் செய்கிறது. பெண்கள் - நல்லவற்றிற்க்கும், கெட்டவற்றிற்க்கும் இடையே போராடுகிறார்களா? அது தானா வாழ்க்கை? எனும் கேள்விகள் எழலாம். மகாத்மா காந்தி கூறியது போல - 'நல்லவற்றை நாடும் பேரவாதான் உலகை இயக்குகிறது. அது தான் கெட்டவற்றை மிஞ்சுகிறது.' எனும் நம்பிக்கை கொண்டே வாழ வேண்டும். காரியங்களை இயற்ற வேண்டும். பாரபட்சங்களையும், தடைகளையும் எதிர்க்க வேண்டும்.

இயல்பாகவே பெண்கள் தங்களுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்படும் எந்த விதமான கெடுபிடிகளையோ, வன்முறைகளையோ வெளியே கூறுவதில்லை. கூறினால் தங்கள் வாழ்வு மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படுவதுடன், தவறுகள் இழைக்காமலேயே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு, சமூகத்தின் கேலிப் பார்வைக்கும் விமர்சனத்துக்கும் உள்ளாக வேண்டி வரலாம். தொடர்ந்தும் வாழ்வின் முன்னேற்றத்துக்கும் வேறு எந்த நிலையிலும் முட்டுக்கட்டையை ஏற்படுத்தலாம் என்பதும் உண்மையே. இன்று துணிச்சலும் திறமையும் மிக்க ஒரு சில பெண்களே.

அதுவும் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் தமக்கெதிரான வன்முறைகளுக்காக முரண்பட்டு குரல் கொடுக்கத் தொடங்கிப் பலருடன் போராடிக் கொண்டேயிருக்க வேண்டிய நிலை உருவாகிறது. உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யக் கூடாது. எனும் சுவாமி விவேகானந்தரின் வாக்கிற்கிணங்க வாதாடி, வழக்குரைத்தும் நியாயம் கிடைக்கின்றதா? அவர்கள் அறியாமலேயே கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ எதிரிகள் இருக்கிறார்கள். வஞ்சனைகள் தொடர்கின்றன என்பதே புலனாகிறது. நம்பிக்கையே நாளும் நாளும் அநியாயத்துக்கெதிராகக் குரல் கொடுக்கத் தூண்டுகிறது.



- மாதங்கி -

பெண்கள் வாழ்வில் சங்கடங்கள் பெருமளவில் இல்லாமலில்லை. ஆனால் இதை மிகைப்படுத்தாது வாழும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் எதிர்மறையான தொடர் நெருக்கீடுகள் பொறுமையை இழக்கச் செய்து பொங்கவும் செய்து விடுகிறது. "நான் அமைதியாக இருக்கின்றேன்." என்று கூறிக்கொண்டு தமது கபட நாவையும், பொய் உதடுகளையும் பயன்படுத்தி அநீதிகளை உருவாக்கிக் கொண்டு வேஷம் போடுவதைப் பார்த்தால், பெண் என்ன ஜடமா? பல காலமும் கண்ணை மூடிக் கொண்டு காலம் தள்ளுவதற்கு புளூடார்க் எனும் அறிஞர் கூறுவது போல - அச்சமற்று இருப்பது தான் தைரியம் என்பது சரியல்ல. நீதிக்காகப் போராடும் உள்ள உறுதி தான் தைரியம் எனப்படும்.

உபயோகமற்ற பேச்சுக்களால் ஆணாதிக்கம் கொழுந்து விட்டெரிய அந்தப் பேச்சுகளையும் கிசுகிசுக்களையும் தவறிழைக்காத எந்தப் பெண்ணாலும் தாங்கிக் கொள்ள முடிவதில்லை. ஆணாதிக்கம் - பெண்களை எவரெவர் மூலம் எவ்வாறெல்லாம் கீழ் நிலைப்படுத்துகின்றதோ, ஆனால் தனித்த அப்பாவிப் பெண்களால் பிறரை உபயோகிக்கும் சுயநலம் குடி கொண் டதில்லை. எல்லோரிடமும் - மரியாதையும், அன்பும், நம்பிக்கையும் கொண்டு பழகும் பெண்கள் எத்தனை பேர். இந்த உயரிய பண்புகள் நம்பிக்கைத் துரோகமாய் குழிபறிப்பாய் மாறிவிட, அழுத்தங்கள் பாரங்களாகின்றன.

பெண்கள் அச்சுறுத்தல்களினால் அவதிப்பட கவலைப் படாமல் இருக்க முடியாதுதான். அதற்காக கவலையிலே மூழ்கி விட முடியாது. காரண காரியங்களுக்கு கவலை வருவது இயல்புதான். ஆனால் அது நமது மனோ சக்தியை உருக்கி, உருக்குலைத்து விடக்கூடாது; நம்பிக்கை, உறுதி, நமது ஆற்றலின் தன்மை, அறிவு, அனுபவம் ஆகியவை நம்மிடம் தானே உள்ளது. இதை யாரும் அபகரித்துச் செல்லவில்லையே. எந்த நிலையிலும் எத்தகைய இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தாலும், அவற்றைத் தைரியமுடன் ஏற்று நியாயத்தை நிலை நாட்டி முன்னேற வேண்டும்.

பெண்கள் முன்னேறுவதற்குரிய பாதைகள் எத்தனையோ இருந்தும், எல்லாப் பாதைகளும் பயணம் செய்யக் கூடியவையாய் இல்லைத்தான். பாகுபாடுகளும், அசமந்தப் போக்குகளும், செல்வாக்குகளும், பாரபட்சங்களும், தான்தோன்றித்தனமாய் பல பெண்களின் வாழ்வைக் கீழ் நிலைப்படுத்தியிருக்கின்றன. மாறாக ஒரு சில பாதைகளிலேயே பெண்களின் திறமைகளைக் கண்டு, வெளிக்கொணர்ந்து, தட்டிக் கொடுத்து சொர்க்க பூமியைக் காட்டுபவர்கள் தியாக சிந்தையுள்ளவர்கள் இருக்கிறார்கள். கடந்த காலங்களில் பிறரால் இழைக்கப்பட்டுள்ள கொடுமைகள், இழந்த செல்வங்கள், இறந்த அன்பான உயிர்கள், பிறர் சொன்ன வார்த்தைகள், அவதூறுகள் இவைகளில் மனது நிலைப்பதால் பெண்கள் பெரிதும் துயரடைகின்றனர். இந்த நிலைமைகள் மாற வேண்டும். மாற்றமும் வேண்டும்.

வரலாறு நமக்குத் தெளிவாக எடுத்துக் கூறிய 'ஒரு மகா சக்தி' இவ்வுலகில் விஞ்ஞானமாகிறது. "ஆண்களும் பெண்களும் புதிய கருத்துக்களைப் படைப்பவர்களாகவும், ஆற்றல் மிகுந்தவர்களாவும் திகழவேண்டும். இலக்குகள் மாறிக்கொண்டே வருகின்றன. வளர்ச்சி என்பது - புதியவற்றின் அடிப்படையிலேயே கணிக்கப்படுகின்றன. பெண்கள் விடயத்தில் சோதனைகளே சாதனைகளாக மாறவேண்டும். ஒரு மாற்றம், ஒரு விடியல் "பூட்டைத் திறப்பது கையாலே மனப்பூட்டைத் திறப்பது மெய்யாலே" என்று ஒரு சித்தர் பாடியிருக்கிறார். ஆமாம் பெண்களுக்கு மட்டுமல்ல, முழு மனித இனத்துக்குமே மனப் பூட்டைத் திறப்பதற்கு சத்திய தரிசனம் தேவையானதாகும்.

# முயற்சியும், பயிற்சியும் இசை கற்கும் எவரிடமும் கட்டாயம் இருக்கவேண்டும்

(சென்றவாரத்தொடர்ச்சி...)

2000 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை யாழ்.காங்கேசன்துறை வீதியிலுள்ள யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் இசையாசிரியராகப் பணியாற்றி வருகின்றேன். பலநூற்றுக்கணக்கான மாணவ, மாணவியரின் உள்ளங்களில் இசைச்சுடரை ஏற்றி வருகின்றேன்.

நான் அடையாறில் இசை கற்ற காலத்திலும், விடுமுறைக்கு வீட்டுக்கு வருகின்ற நாட்களிலும் அரங்கேற்றத்தின் பின்பும் சில ஆண்டுகள் வரையிலும், உடுவிலில் வாழ்ந்திருந்த எனது குருவான சண்முகரத்தினம் சண்முகராகவன் அவர்களிடமும் பாடங்கேட்டு, எனது இசை ஞானத்தை வளர்த்துக் கொண்டேன்.

2002.01.27 ஆம் திகதி நல்லூரைச் சேர்ந்த திரு.திருமதி.குமாரசுவாமி கமலாவதி தம்பதியினரின் மகனான சிவனேஸ்வரநாதனைக் கரம்பற்றினேன்.

எமக்கு ராகப்பிரியா, கானவர்ஷினி என்னும் இரு பெண்குழந்தைகள் உள்ளனர் என்பதும், எனது கணவர் முன்பு மத்திய கிழக்கில் வேலை பார்த்துவந்தவரெனினும் இப்போது யாழ்ப்பாணத்தில் வாணிபத்தில் ஈடுபட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1993 ஆம் ஆண்டில் ரூபவாஹினித் தொலைக்காட்சியில் எனது இசை நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது. அதன் பின்னர் நிலைமைகள் சீர்கெட்டுப் போனதால் அந்த வாய்ப்பு அற்றுப் போய்விட்டது.

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் ஆண்டுதோறும் நிகழ்த்துகின்ற இசை விழாவிலும், அருள்மிகு நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின்போதும் இளங்கலைஞர் மன்றமும், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினரும் இணைந்து நடாத்துகின்ற தெய்வீக இசை அரங்கிலும் எனது இசை நிகழ்வு இடம்பெறும்.

மேலும் இடையிடையே பரத நாட்டிய அரங்கேற்றங்களில் பாடும் வாய்ப்பும் கிடைத்து வருகிறது.

1995 ஆம் ஆண்டில் மஹாவித்துவான் அமரர் ந.வீரமணி ஐயர் அவர்களுடன் இணைந்து, அவரின் நெறியாள்கையின் கீழ் புகழ்பெற்ற அவரது நாட்டிய நாடகங்கள் பலவற்றுக்குப் பாடும் அரிய வாய்ப்புக் கிடைத்தமை இன்றும் எனது மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

தமிழறிஞர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களால் படைக்கப்பட்ட "காலம் தந்த கோலமகள்" என்னும் நாட்டிய நாடகம் வெற்றிகரமாக சாந்தினி சிவநேசன் அவர்களின் நெறியாள்கையில் யாழ்.பல்கலைக்கழகத்திலும், உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியிலும் நிகழ்த்தப்பெற்றது. அந்த நாட்டிய நாடகத்தின் பாடல்களுக்கு இசை அமைத்துப் பாடும் அரிய - பெரிய - வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

1998 ஆம் ஆண்டு கொழும்பு சைவ மங்கையர் கழகத்தில் வாசுகி முகுந்தன் அவர்களின் நெறியாள்கையில் நிகழ்த்தப்பெற்ற "நந்தனார் சரித்திரம்" என்னும் நாட்டிய நாடகத்தின் பாடல்களுக்கு நானே இசையமைத்துப் பாடியமை இன்றும் மனதுக்கு நிறைவை

அத்துடன், இன்று இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பரதநாட்டிய விரிவுரையாளராக சேவை செய்யும் கிருஷாந்தி ரவீந்திரன் அவர்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களடங்கிய நாட்டிய நாடகத்துக்கு அவர்களின் நெறியாள்கையில் நடைபெற்ற நிகழ்வில் பாடியமை, சங்கானையில் நடந்த இந்த நிகழ்வில் நான் பாடிய பாடல்கள் எனது தந்தையாரின் நாதஸ்வர இசையுடன் இணைந்து ஒலித்தமை அவையோரின் பெரும் பாராட்டுக்குரியதொன்றாக அமைந்தமை நினைவில் பசுமையாக உள்ளது.

அது மாத்திரமல்லாது; நாடகம், நாட்டுக்கூத்து, இசை முதலான கலைகளை வளர்க்கும் அரும்பணியில் ஈடுபட்டிருக்கும் யாழ்.திருமறைக்கலாமன்றத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க, நான்கு பரதநாட்டியப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து நான் பாட, அவற்றை அவர்கள் இறுவெட்டில் பதிவுசெய்து, கடல் கடந்த நாட்டில் பரதம் வளர்க்க அந்த மன்றத்தினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவை சிலவே. இன்னும் பல உண்டு!

இசை நிகழ்வில் பக்கவாத்தியங்களின் ஒத்திசைவுடன் எமது மனோதர்மப்படி பாடலாம்.

பரத நாட்டியத்தின்போது ஆடுபவரைக் கவனத்தில் கொள்ளுவதுடன்,




நட்டுவாங்கம் செய்பவரையும் அவதானத்திலிருத்திக்கொண்டு, பக்க வாத்தியங்களின் ஒத்திசைவோடு பாட வேண்டும்.

நாட்டிய நாடகத்தில் பாடும் போதும் பாடலுக்குரிய பாத்திரத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு, குரலில் மாற்றங்களை ஏற்படுத்திப் பக்க வாத்தியத்தை அனுசரித்துப் பாட வேண்டும்.

1993 ஆம் ஆண்டு மகா சிவராத்திரி தினத்தன்று திருகோணமலையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஒரு இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. அந்த இசை நிகழ்ச்சியில் எனது குருவான உயர்திரு.சண்முகரத்தினம் சண்முகராகவன் அவர்களுடன் இணைந்து, மூன்று மணிநேரம் தொடர்ந்து பாடி அம்பாளின் அருளையும், அடியவர்களின் பாராட்டையும் பெற்றமை இன்றும் என்றும் மறக்கமுடியாத தொரு நிகழ்வாகும்.



அதுமாத்திரமல்ல... ஆண்டு தோறும் அருள் மிகு நல்லைக்கந்தப் பெருமாளின் ஆலயத்தில் இருபத்தைந்து நாட்களுக்குத் திருவிழா நடை பெறுவதுயாவரும் அறிந்ததே. இந்தத் திருவிழாவின் இருபத்தோராம்நாள் திருவிழாவின் சிறப்புத் திருவிழாவாக அதிகாலையில் கஜவல்லி மகாவல்லி உற்சவம் நடைபெறும். இந்தச் சிறப்புத் திருவிழாவின்போது; வசந்தமண்டபப் பூசை நடைபெறுவதற்கு முன்பு; சுமார் ஒரு மணிநேரம் இசைநிகழ்ச்சி நடை பெறுவது வழக்கம். இந்த இசை நிகழ்ச்சியில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக எனது இசை நிகழ்ச்சியே இடம் பெற்று வருகின்றது. இந்த நிகழ்ச்சியில் பக்திப் பாடல்கள், திருப்புகழ், கீர்த்தனைகள் முதலானவை பாடப் பெறும். இந்த வாய்ப்பு எனக்குக் கந்தனிடமிருந்து கிடைத்தொரு அருட்பெரும் பேறாகவே கருதி மகிழுகின்றேன்.

மேலும் எனது இன் றைய வளர்ச்சிக்கு முழுமுதற் காரணம் எனது தந்தையார் தான் என் றால், அதுமிகையா காது. எனது வளர்ச்சியின் ஒவ்வொரு படியிலும்- ஒவ்வொரு அடியிலும் எனது தந்தையாரின் அறிவுரைகள், ஆலோசனைகள் இணைந்தே இருந்தது என்றால், அது என் தவப்பயனே அல்லாது வேறொன்றுமில்லை. எனவே எனது தந்தையாரை என்றென்றும் என்னுள்ளக் கோவி லில் வைத்துப் பூசிக்கின்றேன்.

கர்நாடக இசை என்பது ஒரு தெய்வீகக் கலை, இதன் அருமை-பெருமை-மகிமை பற்றிப் பேசிக்கொண்டே இருக்கலாம். இத்துணை மகிமை மிக்க இசையைத் தேடிக் கற்கக் கடும் முயற்சி தேவை. கற்றவை களை மனதிற் பதித்துக் கொள்ள இடைவிடாப் பயிற்சி தேவை! எனவே முயற்சியும், பயிற்சியும் இசை கற்கும் எவரிடமும் இருக்க வேண்டும் என்பதே இன்றைய இளம் சமூகத்தினருக்கான அன்பான செய்தியாகும். ☆

"வயலூர் முருகன்"

# சுனாமி - ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

(31 ஆம் அத்தியாயம்)

கண்ணகி துளசியை என்னிடமிருந்து வாங்கினாள். அவள் காட்டிய மனிதனை நான் கூர்ந்து பார்த்தேன். எனக்கு கொஞ்சம் பயமாகவும் இருந்தது. ஆனால் கண்ணகியின் குரல் அதைக் கலைத்துவிட்டது.

"இவவும் மலையிலை இருந்து என்னோடை ஒரு அலுவலா வந்தவ. என்ரை பள்ளிக் கூடச்சிநேகிதி. இரண்டொரு நாள் எங்கடை வீட்டை நிக்கப் போறா."

அவருடைய பார்வை இப்போ என்னை மேய்ந்தது. நான் சீலைத்தலைப்பால் முதுகைப் போர்த்துவிட்டு எதிரே இருந்த தேநீர்க்கடையைப் பார்த்தேன். கண்ணாடிப்பெட்டியுள் தட்டுத்தட்டாக அடுக்கிக் கிடந்த தோசையும்....வடையும்...என்னை அறியாமல் நாக்கில் நீர் சுரந்தது.

"இஞ்சருங்கோ நாங்கள் குழப்பத்திலை வெளிக்கிட்டதாலை ஒண்டுஞ் சாப்பிடல்லை... கொஞ்சம் தேத்தண்ணி குடிச்சிட்டுப்போவம்." என்று கண்ணகி சொல்லிவிட்டுத் துளசியை அவரிடம் கொடுத்தாள். அது போக மறுத்துவிட்டு என்னை நோக்கிக் கையை நீட்டியது.

"இஞ்சை அப்பனை வேண்டாமாம். நேற்றுக்கண்ட நீதான் வேணுமாம்!..இந்தா இவளைப்பிடி! நான் பையைக் கொண்டுவாறன்!"

கண்ணகி துளசியை என்னிடம் தந்துவிட்டு ஒரு பையைத் தூக்கினாள். அவர் அதை அவனிடமிருந்து வாங்கிக்கொண்டு கூடையையும் மறுகையில் தூக்கினார்.

"எனக்கு இப்ப ஒரு பாரமும் இல்லை! எல்லாத்தையும் நீங்களே சுமக்கிறியள்." அவள் குரலில் ஏதோ குறிப்புப் பொருள்!.. எனக்கு அது விளங்கவில்லை. நான் அவளைப் பார்த்தேன். கண்களைச் சிமிட்டிச் சிரித்தாள்!.. நானும் புன்னகை செய்தேன்! மனம் மட்டும் என்ரை பிள்ளையளின்ரை நினைவில் அழுதது. உடனே போய் அதுகள் இரண்டையும் அணைக்க வேணும் போல இருந்தது.

"சரி...சரி!.. வாருங்கோ தேத்தண்ணி குடிப்பம்!.." சொல்லிவிட்டு அவர் முன்னே நடக்க நாங்கள் பின்னே நடந்தோம். கடை வாசலில் மேலே போட்டிருந்த பெயரைப் பார்த்தேன். "லக்சுமிபவான்"..! என்றிருந்தது. உள்ளே நுழையும் போதே முதலாளியின் வரவேற்புக்குரல்!

"வாருங்கோ!...வாருங்கோ!.. நல்லாக் களைச்சுப் போனியள்! என்ன வேணும்! எல்லாம் சூடா இருக்கு!" அந்தக் குரலில் வியாபார நோக்கைவிட ஒரு பரிவு தெரிந்தது. உள்ளே வானொலி பாடிக்கொண்டிருந்தது.

"எங்கிருந்தோ வந்தான்!.. இடைச்சாதி நான் என்றான்!..." கதிரைகளில் மூவரும் போய் இருந்தோம். துளசி இப்ப சிணுங்கத் தொடங்கியது.

"இவவுக்கும் பசி வந்திட்டுது! ...கொஞ்சம் சுடுதண்ணி தரச்சொல்லுங்கோ" முதலாளி மேசையிலிருந்த மணியைக் கணீரென அடிக்க ஒரு சிறுவன் ஓடி வந்து நின்றான்!

"என்ன வேணும் முதலாளி!.."

அவன் குரலில் இருந்த பவ்வியம் என் சங்கரை நினைவூட்டியது. அவனிடம் நான் கடைசியாகச் சொன்னது நினைவுக்கு வந்தது.

"ஓடிப்போய் ஒரு குவளையிலை சுடுதண்ணி கொண்டு வா! பிள்ளைக்குப் பால் குடுக்கிற பதத்திலை வேணும்!..."

இப்ப கண்ணகியின் புருஷன் சொன்னார்.

"இந்தப் பொடியனும் முதலாளியின்ரை மகன் தான்!.. நல்ல சுறுசுறுப்பு!" அவர் சொன்னது சரிதான்!...ஒரு நொடியில் பொடியன் தண்ணீருடன் நின்றான். அதை வாங்கி வைத்து விட்டு அவரே கூடையில் இருந்த பால்ப் போச்சியை எடுத்துக்கொண்டு போனார். கண்ணகி ஒரு குவளையில் கரண்டியால் மாவை எடுத்துப்போட்டு சுடு தண்ணியை விட்டுக் கரைத்தாள். பொடியன் இன்னொரு குவளையுடன் வந்தான்!

"இந்தாருங்கோ அம்மா!..இதாலை ஆத்துங்கோ!.." இதற்குள் பால்ப் போச்சியுடன் வந்த கண்ணகியின் புருஷன் கரைத்த பாலை வாங்கி பக்குவமாக ஆற்றினார். பால்ப்போச்சியில் ஊற்றினார். பிறகு அதை என்னிடம் தந்தார். நான் அதை மறுக்காமல் வாங்கி மடியில் துளசியைக் கிடத்திவிட்டுப் பாலைப் பருக்கினேன்! அது சப்புக் கொட்டிக் குடிக்கத் தொடங்கியது. அவர் குவளைகளை எடுத்துக்கொண்டு கழுவப் போக அந்தச் சின்னப் பொடியன் ஓடி வந்தான்!

"நான் கழுவிக் கொண்டு வாறன்!..தாருங்கோ!.." அவன் அதை வாங்கிக் கொண்டு ஓடினான். துளசி பால் முழுவதையும் குடிச்சுப்போட்டு பால்ப் போச்சியைக் கீழே போட்டது. நல்ல காலம்..! நிலத்தில் விழவில்லை. கண்ணகி அதைப் பிடித்துவிட்டாள்.

"பால் குடிச்ச உடனை கொழுப்பு வந்திட்டுதோ!.." அவள் செல்லமாகத் துளசியின் கன்னத்தில் கிள்ள!..துளசி அவளிடம் போனது. "நீங்கள் ஓடர் பண்ணுங்கோ!.. நான் இவளைக் காலிலை இருத்திப் போட்டு வாறன்".

கண்ணகி துளசியோடு கடையின் பின்புறம் போனாள்! முதலாளி எங்களுக்கு அருகில் வந்து நின்றார்!..

"அக்கா!...வரட்டும்..இப்ப என்ன சாப்பிடப் போறியள்!.."

"உங்களுக்கு என்ன வேணும்!.."

கண்ணகியின் புருஷன் கேட்டார்!.. எனக்கு அந்தக் குரல்!..பழைய குரலாக.. காதில் ஒலித்தது. இந்த மனுசன் எப்படிப்பட்ட ஆள்!...பாவம் கண்ணகி! துளசியின் அம்மா மட்டும்தான் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறாள்!.. ஆனால் இவன் ஒரு சரியான பொம்பிளைக் கள்ளன்!...எண்டு அவளுக்குத் தெரியாது போலை.. கிடக்குது! என் நெஞ்சில் ஒரு மூலையில் வலித்தது. நான் மட்டும் என்ன!.. அந்தக் கடைசி நாள்!..அவர் வீட்டை வந்த நாள்!... வாசலில் கார் வந்து நின்ற போது..! நான் அவரைப் பார்த்தபோது...சொன்னார்.

"என்ன அப்பிடிப் பாக்கிறாய்!.. என்னிலை என்ன காய்ச்சுப் பூத்துக் கிடக்கே!"

மீசையை ஒரு கையால் தடவியபடி நின்ற கோலம் இன்னும் பசுமையாக நிலைவில் சுழன்றது!..

"ஒண்டுமில்லை இந்தக் கிழமை ஏதோ அலுவலாக் கொழும்புக்குப் போறதெண்டு சொன்னியள்! இப்ப இஞ்சை வந்து நிக்கிறியள்!"



"கொழும்பு வேலையை விட முக்கியமான ஒரு வேலை!..முடிச்சுப்போட்டன்!"

சொல்லியபடியே அறைக்குள் வந்து கட்டிலில் இருந்தார். நானும் பக்கத்தில் போய் இருந்தேன்!..

"பிள்ளையள் எங்கை!.."

"அதுகள் பக்கத்து வீட்டை விளையாடப் போட்டுதுகள்!" அவர் நெருங்கி வந்து என்னிடம் ஒரு பெரிய உறையைத் தந்தார்.

"இந்தா!..இது உனக்குத்தான்!.." நான் அவசரமாக உள்ளை இருந்த பேப்பர்களை வெளியிலை எடுத்தன். ஒரு உறுதி...! அன்று போனவர் போனவர்தான்!.. பிறகு வரவேயில்லை!

"என்ன யோசினை!.."

திரும்பி வந்த கண்ணகி என்னைத் தட்டினாள். நான் நினைவுச் சுழியிலிருந்து மீண்டேன்!

"தேத்தண்ணியும் தோசையும் ஓடர் பண்ணட்டே"

"சரி... கொண்டு வரச் சொல்லுங்கோ!"

பக்கத்தில் நின்ற முதலாளியின் பையன் துள்ளி ஓடினான். 3 வாழையிலைகளைக் கொண்டு வந்தான். கொஞ்சம் தண்ணீர் தெளித்துவிட்டான்! 3 குவளைகளில் தண்ணீர் வைத்தான். மீண்டும் உள்ளே துள்ளி ஓடினான். தோசையோடு திரும்பி வந்தான்! இலையில் ஆளுக்கு 2 தோசை வைத்தான்.

மிளகாய்ப்பொடியை ஒரு மூலையில் வைத்து அதன் மேல் சொட்டு நல்லெண்ணெய்!.. அதன் வாசம் மூக்கைத்துளைத்தது. மறுமூலையில் பச்சையும், சிவப்புமாய் இரண்டு விதமான சம்பல்...இன்னொரு பக்கத்தில் கத்தரிக்காய் பொரித்த பிரட்டல் கறி!.. துளசி கூட எட்டித் தோசையைத் தொட்டது.

எங்களுடைய கைகளும் விரைவாகத் தொழிற்பட்டன. ஆனால் இந்தப் பொடியை என்ன செய்வது? கண்ணகியின் இலையைப் பார்த்தேன்! அந்தப் பொடியைக் காணவில்லை!...

"என்ன!...பொடியைத் தின்னத் தெரியாதே!.." நான் முழிசினேன்!

"பொடியா!.. இன்னும் 2 தோசை வை!"

கண்ணகியின் கணவர் சொல்ல அவன் உடனே கொண்டு வந்து வைத்தான்!

"இப்ப பொடியைத் தோசையோடு தொட்டுச் சாப்பிட்டார்!" கண்ணகியின் சொற்படி நான் செய்தேன்! பொடியின் காரம் மூக்கில் ஏறி.. நாசியுள் புக... திடீரென ஒரு நச்..! என்று பெரிய தும்மல்!..நான் திணறக் கண்ணகி தண்ணீரை எடுத்துத் தந்தாள்! நான் குடித்தேன்! அம்மா!..இதென்ன பொடி!..!

"என்னம்மா!..முதல் முறை சாப்பிடுறியள் போலை கிடக்கு! இந்தாருங்கோ!...தேத்தண்ணி யைக் குடியுங்கோ!" "எல்லாம் பழகப் பழகச் சரியாப் போகும்!..."

கண்ணகியின் கணவர் சொன்னது...எனக்கு...நெஞ்சு!..திக்!..என்றது. இந்த ஆள்!.. என்ன சொல்கிறான்!.. இவனாலை எனக்குப் பிரச்சினை வருமோ!.. என் மனம்...கொஞ்சம் குழம்பியது! அதை வெளிக்காட்டாமல் போய்க் கையைக் கழுவிவிட்டு வந்து துளசியைக் கண்ணகியிடம் வாங்கிக்கொண்டு கடையை விட்டு வெளியே வந்தேன்! நான் கொஞ்சம் விழிப்பாக இருக்க வேணும் என்று நினைக்க துளசி தன் பிஞ்சு விரல்களால் என் கண்களை மூடி விளையாட எனக்கு என் குழந்தைகளின் நினைவு நெஞ்சில் புரண்டது. கண்ணீர் கரை தட்டியது!... (தொடரும்)

# தாய்மைக்கு இயற்கைதரும் சோதனை

பெண்ணுக்குச் சிறப்பே தாய்மைதான். அத்தகைய தாய்மைக்கு இயற்கை அடிக்கடி தரும் சோதனைதான் கருச்சிதைவு.



கருச்சிதைவு 2 தடவை ஏற்பட்டால், மருத்துவரை அணுகி அதற்கான காரணங்களை அறிந்து, சரி செய்து கொள்ள வேண்டும்.

ஆனால் நம் நாட்டில் உள்ள பல தம்பதிகள் ஒரு முறை கருச்சிதைவு ஏற்பட்ட பின், அதற்கான சரியான காரணங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல் எப்படியாவது கருத்தரித்தால் போதும் என்ற நோக்கத்தில்தான் செயல்படுகின்றார்கள் என்கிறார் பிரபல குழந்தையின்மை சிகிச்சை நிபுணரொருவர்.

முதல் கருச்சிதைவுக்குப் பிறகு கருத்தரிப்பவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். காரணம் இம்முறை 50 சதவீதம் தான் கரு தங்கி நிற்க வாய்ப்பிருக்கிறது. 2 ஆவது முறையும் கருச்சிதைவு ஏற்பட்டு, 3 ஆம் முறையாக கருத்தரிப்பவர்களுக்கு, 20 சதவீத கருச்சிதைவு ஆபத்து உள்ளது.

கருச்சிதைவுக்கான காரணங்களின் பட்டியல் மிகவும் நீளமானது, கிட்டத்தட்ட 60 சதவீத கருச்சிதைவுக்கான காரணம், கருவின் உள்புறம் உள்ள குறைபாடுகளே! பெரும்பாலும் இவை மரபியல் ரீதியாக குறைபாடாக அமைகின்றன.

கனமான பொருட்களைத் தூக்குவது, சூடான பொருட்களைச் சாப்பிடுவது போன்றவற்றால், கரு கலைந்திருக்குமோ என்று பெண்கள் தாங்களாகவே நினைத்துக்கொள்கிறார்கள். இது உண்மையல்ல.

ஒரு கருவானது மேற்கொண்டு வளரும் தன்மையை இழந்துவிட்டால், என்ன செய்தாலும் அது நிலைக்காது. தானாகவே அழிந்துவிடும்.

**காரணங்கள்** -

தாயின் உடற்கூறின் காரணங்களும் கருச்சிதைவுக்கான காரணமாகின்றன. வைரஸ் நோய்த் தாக்குதல்கள், பாலியல் நோய்கள், நீண்ட நாள் காய்ச்சல், சத்துக்குறைவு, போலிக் அமிலக் குறைபாடு, கருப்பை வளர்ச்சியில் குறைபாடு, கருப்பைவாய் தளர்ந்து போதல்... என்று கருச்சிதைவுக்கான காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

**கருச்சிதைவைத் தடுக்க...**

கருச்சிதைவைத் தடுக்க தற்போது பல் வேறு மருந்துகள் உள்ளன. கருப்பையின் சுருக்கத்தைப் போக்கவும், கருவின் வளர்ச்சியை மேம்படுத்தவும், இப்போது மருந்துகள் உள்ளன.

போலிக் அமிலம் நிறைந்த உணவுகளை அடிக்கடி சாப்பிடுவது நல்லது. சைவ உணவுகளில் போலிக் அமிலம் குறைவாகவே உள்ளது. எனவே இந்தச் சத்துள்ள அசைவ உணவுகளை சாப்பிடுவதில் தவறில்லை.

ஒருமுறை கருச்சிதைவான பிறகு கருப்பையில் அந்தக் காயம் ஆற, நீண்ட நாட்கள் தேவைப்படுகிறது. எனவே அடுத்த குழந்தைப்பேற்றுக்கு அவசரப்படாமல், கருப்பை பழைய ஆரோக்கிய நிலைக்கு திரும்பும் வரை தம்பதியர் காத்திருக்க வேண்டும்.

எனவே பெண்கள் நல்ல ஓய்வில் இருக்க வேண்டும். நிம்மதியான சூழலில் கொஞ்ச நாள் கழிக்க வேண்டும். ஒரு கருச்சிதைவு நிகழ்ந்த பிறகு 6 மாதம் கழித்துத் தான் அடுத்த கருத்தரிப்பு பற்றி தம்பதிகள் யோசிக்க வேண்டும். கருச்சிதைவுற்று ஓய்வில் இருக்கும் காலக்கட்டத்தில் கடினமான வேலை எதையும் செய்யாமல் இருக்க வேண்டும். நீண்ட தூரம் பயணம், அடிக்கடி கோபப்படுதல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும் என்கிறார்கள் வைத்தியர்கள். ☆

# இரும்பு விற்கும் சிறுவர்கள் வவுனியா நகரில் அதிகரிப்பு!

வவுனியா

பழைய இரும்புகளை பொறுக்கி விற்பனை செய்யும் சிறுவர்களின் தொகை வவுனியாவில் அதிகரித்துள்ளது. பாடசாலைக்கு செல்லாது இதனை ஒரு தொழிலாகவே இவர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். வருமானம் கிடைக்கின்றது. வீட்டு செலவுக்கு பணம் வந்து சேருவதாக சிறுவர்கள் தெரிவிக்கின்றனர்.

உரப்பைகளுடன் காலையில் இரும்புகளைப் பொறுக்குவதற்காக இவர்கள் மூன்று நான்கு பேர் எனக் குழுக்களாக வருகின்றனர். வவுனியா நகருக்கு அண்மித்த பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் - யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து முகாமில் உள்ளவர்களுடைய பிள்ளைகளே இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

பெற்றோரின் வருமானம் போதுமானதாக இல்லை. பொழுது போக்கு செலவுக்கு பணம் தேவைப்படுகின்றது. பழைய இருப்புகளைத் தேடி சேகரித்து விற்பனை செய்து வருகின்றோம். இதனால் சுமாரான வருமானம் கிடைக்கின்றது என அந்தச் சிறுவர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பாவும், அம்மாவும் கூலி வேலைக்கு போறாங்க, பின்னேரம்தான் வருவாங்க, காலைச் சாப்பாடு, மதியச் சாப்பாடு எல்லாம் வெளியேதான் என்கின்றான். இன்னுமொரு சிறுவன் சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என பெரிதாக குரல் கொடுக்கும் அமைப்புகள் இந்த விடயத்தில் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள் என்பது கேள்விக்குறி.

ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெவ் அமைப்பு இந்த சிறுவர்களுக்கு கல்வியை வழங்க ஏன் நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என மனித உரிமைகள் அமைப்புக்கள் கேள்வி எழுப்புகின்றன.

இரும்புப் பொருட்களை கொள்முதல் செய்யும் வியாபார நிலையங்கள் அதிகரித்து விட்டதே இதற்கு காரணம் எனவும் கூறப்படுகிறது.

# தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைப்பு

மன்னார்

மன்னார் மாவட்ட தேசிய பாடசாலைகளில் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களின் விபரங்கள் - கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கான நேர்முகபரீட்சை விரைவில் நடைபெறும் எனவும் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ஆபேல் றெவ்வல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நோக்குடன், கடந்த மாதம் மன்னார் கல்வி வலயத்தில் நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றன. ஆனால் மன்னார் பகுதியிலுள்ள மூன்று தேசிய பாடசாலைகளிலும் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இதையிட்டு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கமும், ஆசிரிய பிரமுகர்களும் எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியில்- மன்னார் பகுதியிலுள்ள மூன்று தேசிய பாடசாலைகளிலும் கற்பிக்கும் 22 தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் கல்வி அமைச்சுக்கு, மன்னார் கல்வி வலயத்தால அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இவர்களுக்கு விரைவில் நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

# அங்கிலிக்கன் திருச்சபை குழுவினர் மக்களின் தேவைகளை கேட்டறிந்தனர்

வடமராட்சி

அங்கிலிக்கன் திருச்சபை கொழும்பு மறைமாவட்ட பேராயர் அதிவணக்கத்துக்குரிய டிலிப் சிக்காறோ தலைமையிலான குழுவினர் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கரையோரப் பிரதேசங்களை பார்வையிட்டதுடன், இடைத் தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களையும் சந்தித்தனர்.

வடமராட்சி கிழக்கு கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு வருகை தந்த இந்தக் குழுவினர் - இந்தப் பிரதேச மக்களின் உடனடித் தேவைகளைக் கேட்டறிந்தனர்.

இதற்கமைய முதற்கட்டமாக ஒரு தொகுதி கட்டுமரங்கள், பனிகட்டி ஆலை, வடமராட்சி கிழக்கிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு மாதம் 3000 ரூபா வீதம் இரண்டு ஆண்டுகளுக்குரிய கொடுப்பனவு ஆகியனவற்றை தந்துதவ ஒப்புக் கொண்டனர்.

இந்தக் குழுவில் யாழ்ப்பாண குரு முதல்வர் நேசரூபன் அடிகள், கிளிநொச்சி உடுத்துறை பங்குகளின் பொறுப்பாளர்கள், வணபிதா சாள்ஸ்டேவிட், வணபிதா மனோரூபன், நிறுவன ஆலோசகர் பொறியியலாளர் ஜெயவீரசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (21)



முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறையினரின் அனுசரணையில் - தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒழுங்கமைப்பினரால் தையல் இயந்திரத்தினை சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவருக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் வழங்கிவைப்பதைப் படத்தில் காணலாம்.

படம் - கனகரவி

# மீன் ஏல விற்பனை நிலையம் அமைப்பு

வடமராட்சி

யூஎன்டீபீ நிறுவன நிதி உதவியுடன் - வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 10 கிராமங்களில் 10 மீன் ஏல விற்பனை நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இதன் முதற் கட்டமாக யூஎன்டீபீ நிறுவனம் - சங்கத் தலைவர்களுக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு அண்மையில் சமாச பணிமனையில் நடைபெற்றது.

ஒவ்வொன்றும் 9 லட்சம் பெறுமதியுள்ள மீன் ஏல விற்பனை நிலையங்கள் -மகாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, சுண்டிக்குளம் ஆகிய கிராமங்களில் அமைக்கப்படவிருக்கின்றன. (21)

# வவுனியா மாவட்டத்தில் 3 வருடத்தில் 9 ஆயிரம் வெடிபொருட்கள் மீட்பு

வவுனியா

வவுனியா மாவட்டத்தில் கடந்த மூன்றரை வருட காலத்தில் 27 கிராமங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. சுமார் 8 லட்சத்து 29 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பளவு இதன் மூலம் துப்பரவு செய்யப்பட்டு, மக்கள் அச்சமின்றி நடமாட அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்தும் நோக்குடன் வவுனியாவில் ஐந்து அமைப்புகள் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இதில் இரண்டு உள்ளூர் அமைப்புக்களும், ஏனைய சர்வதேச மட்டத்தில் பிரசித்தி பெற்ற அமைப்புகளுமாகும். 9 ஆயிரத்து 700 வெடி பொருட்கள் இதுவரரையில் மீட்கப் பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர்தான் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டது. பெரும்பாலான கிராமங்களில் இந்தத் திட்டம் வெற்றிகரமான முறையில் நிறைவு பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் பால்நிலை சமத்துவ பயிற்சி வகுப்புகள்

வடமராட்சி

ஒக்ஸ்பாம் நிறுவன நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையில் கிளிநொச்சி மாவட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் ஐந்து கிராமங்களில் 2 ஆம் கட்டமாக பால் நிலை சமத்துவ பயிற்சி வகுப்பை நடத்திவருகிறது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி ஆளியவளைக் கிராமத்திலும், 22 ஆம் திகதி வெற்றிலைக் கேணியிலும், 23 ஆம் திகதி கட்டைக் காடு கிராமத்திலும், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் போக்கறப்பு, கல்லாறு கிராமங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. (21)

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

## நவம்பர் 04

1847: சேர். ஜேம்ஸ் சிம்ப்ஸனால் குளோரோ பாம் கண்டு பிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

1852: பிரிட்டிஷ் நாடாளுமன்றமான ஹவுஸ் ஒவ்ஹொமன்ஸ்ல் அமைக்கப்பட்ட பத்திரிகை அரங்கிற்கு முதன் முதலாக பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

1854: இராணுவத்தில் மருத்துவத் தாதிகளாகப் பணிபுரிய நைட்டிங்கேல் தலைமையில் இருபத்திநான்கு பெண்கள் முன்வந்தனர்.

1911: பிரான்ஸ்ஸும், ஜேர்மனியும் மொறாக்கோ தொடர்பான உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. இந்த உடன்படிக்கையின் படி மொறாக்கோவில் பிரான்ஸ் கொண்டிருக்கும் உரிமைகளில் ஜேர்மனி தலையிடாது எனவும், அதேவேளை காங்கோவில் சில பகுதிகளை பிரான்ஸ் ஜேர்மனிக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்றும் முடிவு காணப்பட்டது.

1914: ஆர்மீனியா ரஷ்யா மீது படையெடுத்தது.

1918: நேச நாடுகளுக்கும் ஒஸ்ரியாவுக்கும் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது.

1944: சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனம் கனடாவைத் தலை நகராகக் கொண்டு நிறுவப்பட்டது.

1946: உலகில் கல்வி விஞ்ஞானம் கலாசாரம் ஆகியவற்றை வளர்த்தெடுக்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் கலாசார அமைப்பு (UNESCO) ஆரம்பிக்கப்பட்டது.

* : சீனா- அமெரிக்கா நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

1956: ஹங்கேரியில் ஏற்பட்ட புரட்சி ரஷ்யப்படையால் நசுக்கப்பட்டது. ரஷ்ய இராணுவம் புடாமெஸ்ட் நகரினுள் நுழைந்து அந்த நகரை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டது.

1962: ரஷ்யா ஸ்புட்னிக் -24 என்ற விண்கலத்தை ஏவியது. ஆயினும் அந்த விண்கலத்தால் புவியின் சுற்றுப் பாதையை விட்டு விலகிச் செல்ல முடியவில்லை.

1966: இத்தாலியின் ப்ளாரென்ஸ் நகரில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக ஆர்னோ ஆற்றில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் கோடிக்கணக்கான டொலர் பெறுமதியுடைய கலைச் செல்வங்கள் அழிக்கப்பட்டன.

1977: தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபை தடை விதித்தது.

1979: ஈரான் தலை நகரில் இருந்த அமெரிக்க தூதரகத்தை ஈரானிய மாணவர்கள் கைப்பற்றி அங்கிருந்த 90 பணியாளர்களையும் பிணைக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டனர்.

1981: வெள்ளிக் கிரகத்தை ஆராய்வதற்காக ரஷ்யா, வெனீரா - 14 என்னும் விண்கலத்தை ஏவியது.

1983: தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களிடையே நடந்த பொதுவாக்குக் கணிப்பில் கறுப்பினத்தவர்களுடன் ஒரு குறிப்பிட்ட அளவு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

1991: பிலிப்பைன்ஸ்ஸில் இருந்து நாடு கடத்தப்பட்ட மெல்டா மார்க்கோஸ் ஆறுவருடங்களின் பின் நாடுதிரும்பினார்.

1994: எகிப்தின் தென் பகுதியிலுள்ள எண்ணெக் கிடங்கு ஒன்றில் இடி விழுந்து தீப்பற்றிக்கொண்டது. 430 பேர் எரிந்து இறந்து போயினர்.

1995: 132 வருடங்களுக்கு முன் நியூஸிலாந்தில் குடியேற்ற ஆட்சிக்குரிய நடவடிக்கைகளில் ஈடுபட்ட போது அங்கு வாழ்ந்த சுதேசிகளான மயோரி இன மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்காக மன்னிப்புக்கோரி எழுதிய கடிதத்தில் பிரித்தானிய அரசி இரண்டாம் எலிசபெத் ஒப்பமிட்டார். இழப்புக்களுக்கு நட்ட ஈடு வழங்கவும் உடன்பட்டார்.

தொகுப்பு : - சந்துரு

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் மலசலகூடம், கிணறு புனரமைப்பு

வவுனியா

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வவுனியா பிரதேச செயலக பிரிவின் கீழுள்ள பூம்புகார், பன்றிக்கெய்த குளம் ஆகிய கிராமங்களில் உலக உணவுத் திட்டத்தின் பங்களிப்புடன் கிணறுகள் புனரமைப்பு வேலை மற்றும் புதிதாக மலசலகூடங்கள் அமைக்கும் வேலைகள் என்பன நடைபெற்று வருகின்றன.

பூம்புகார் கிராமத்தில் 15 கிணறுகளும், பன்றிக்கெய்த குளம் கிராமத்தில் 15 குடிநீர் கிணறுகளும் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. அத்துடன் 40 மலசலகூடங்கள் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா வடக்குப் பிரதேச செயலக பிரிவில் புளியங்குளம் பகுதியில் - 15 கிணறுகளும், நெடுங்கேணி, கோவிற் புளியங்குளம் ஆகிய கிராமங்களில் 15 கிணறுகளும் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன.

கொல்லர் புளியங்குளம் கிராமத்தில் 55 மலசலகூடங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன.

பூம்புகார் கிராமத்தில் இந்த வேலைத்திட்டங்களுக்கான முதற்கட்ட உணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு கிணறு புனரமைப்புக்கான 340 கூலியாட்களுக்கான கொடுப்பனவுத் தொகைக்கமைவாக உணவுப் பொருட்களும், மலசலகூடங்கள் அமைப்பதற்காக 105 நாட்களுக்குரிய உணவுப் பொருட்களும் வழங்கப் படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் இந்தக் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், மலசலகூட வசதிகள் என்பன கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

வைர வரிகள்

கொள்கை -
கொள்கைக்கு எதிராக ஒருவனை வாழ வைப்பது அவனை கொல்வதைவிட கொடுமையாகும்.

## நமது நோக்கு

### பரிந்துரைகளும், நிராகரிப்பும்...!

இலங்கை இராணுவத்துடன் துணைப்படையாகவும், உளவாளிகளாகவும் செயற்பட்டுவரும் தமிழ் ஆயுதக் குழுக்களை வடக்கு-கிழக்கு பகுதிகளில் இருந்து அகற்றவேண்டுமென போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு செய்திருந்த பரிந்துரையை அரசோ, இராணுவத் தரப்போ ஏற்கப் போவதில்லையென சிரேஷ்ட இராணுவ புலனாய்வு அதிகாரியொருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவரின் இந்தக் கருத்து இதுவரைகாலமும் அரச தரப்பாலும், இராணுவத் தரப்பாலும் மூர்க்கத்தனமாக நிராகரிக்கப்பட்டுவந்த சில விடயங்களை தற்போது அவர்களே ஏற்றுக்கொள்ளும் ஒப்புதல் வாக்குமூலமும் ஆகியுள்ளது.

ஆரம்பம் முதலே தமிழ் ஆயுதக் குழுக்கள் எதுவும் அரச படைகளுடன் சேர்ந்து இயங்கவில்லையெனவும், கருணா குழு என்று எதுவும் கிடையாதெனவும், அப்படி இருந்தாலும் அதற்கும் தமக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாதெனவும் இலங்கையின் நிறைவேற்று அதிகார வலுக் கொண்டவரான ஜனாதிபதி முதல், அனைத்துப் படைத் தரப்பினரும் அண்மைக்காலம் வரை கூறிவந்த மறுப்புரைகளை இந்த புலனாய்வுத்துறை சிரேஷ்ட அதிகாரியின் கருத்துக்கள் பொய்யுரைகளாக்கியுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பரிந்துரைகள் எந்தவகையிலும் ஏற்கப்படமுடியாதவை எனக் கூறும் அந்த இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரி மிகவும் தெளிவாக ஒரு விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அதாவது, கிழக்கில் செயற்படும் தமிழ் உளவாளிகள் வலையமைப்பினை முற்றிலும் செயலிழக்கவைக்கும் நோக்குடனேயே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு இந்த யோசனையை முன்வைத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அந்த அதிகாரி-போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவையும் மிகக் கடுமையாக விமர்சித்துமுள்ளார்.

இங்கே முக்கியமான விடயம், 'தமிழ் உளவாளிகள் மூலமே வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றிய செய்திகள், தகவல்களை நாம் அறிந்துவருகிறோம். இந்த நடவடிக்கையைக் குழப்பி எமது புலனாய்வுச் செயற்பாட்டுக் கட்டமைப்பை சிதறடிக்கவே இத்தகைய திட்டங்கள் போடப்படுகின்றன' என அவர் குறிப்பிட்டுள்ளதேயாகும்.

அவரின் இந்தப் பேச்சானது சில செய்திகளை மிகவும் தெளிவாக உறுதி செய்கின்றதெனலாம்.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் குழுக்கள் அரசுடன் - அதாவது அரச படைகளுடன் இணைந்து செயற்படுகின்றன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் இந்த தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களையே அவர்கள் உளவாளிகளாகப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த உளவாளிகள் வடக்கிலும் கிழக்கிலும் ஒரு வலையமைப்பை ஏற்படுத்தியே செயற்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட செய்திகளின் அடிப்படையில் பார்த்தால், இன்று வடக்கிலும் கிழக்கிலும் அமைதிக்கும், சமாதான முயற்சிகளுக்கும் குந்தகம் விளைவிப்பவர்களாக இருப்பவர்கள் யார் என்ற கேள்விக்கான விடை தெளிவாகும்.

இந்த வகையில்தான், மட்டு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் மற்றும் போராளிகள், பொதுமக்கள் மீதான படுகொலைகள், தாக்குதல்கள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளவென அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் வழங்கிய சிபார்சுகளின் நியாயத்தன்மையை புரிந்து கொள்ளமுடியும்.

இங்கே இந்த சிபார்சுகளை, ஜனாதிபதி ஆணைக்குழுவும் ஏற்றுள்ள நிலையில், அதனை நடைமுறைப்படுத்த முடியாது என இராணுவத்தரப்பினர் கூறுவதை ஜனாதிபதி எவ்வாறு கருதுவாரோ தெரியவில்லை.

ஆனால், இத்தகைய 'மேலோங்கும் குரல்கள்' ஜனாதிபதி தனது அதிகார வலுவை இழந்துகொண்டு வருவதையே உணர்த்துவதாக உள்ளன எனலாம்.


ஆயுதக் குழுக்களை அகற்றக்கோரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பரிந்துரைகள் புறக்கணிக்கப்படுமாயின், அதன் விளைவுகள் முழு நாட்டையும் அமைதியின்மைக்குள் தள்ளிவிடும் என்ற உண்மையை தென் பகுதி மக்களும், சர்வதேச சமாதான சமூகமும் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்தப் பரிந்துரைகள் விடுதலைப் புலிகளுக்கு சாதகமாக அமையும் என சிந்திக்கும் படைத் தரப்பினர், இதனை நடைமுறைப்படுத்தினால் நாட்டில் அமைதியை ஏற்படுத்தி சமாதானச் சூழலை ஸ்திரப்படுத்தமுடியும் என்ற தேசிய நலன் கருதிய நோக்கில் சிந்திக்கத் தவறுவது ஏன்?

இந்தக் கேள்விக்கு உரிய பதிலைச் சிந்திக்க வேண்டிய அவசியத்தைப் புறந்தள்ளினால், இந்த நாட்டின் எதிர்காலம் தொடர்ந்தும் இருண்ட காலமாக இருக்கப் போகும் அவலத்தை எவராலும் தடுக்கமுடியாது.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




### 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# சமாதானத்தையல்ல நாட்டில் போரையே கேட்கின்றனர் இவர்கள்!

தேர்தல்கள் எல்லாம் ஒழுங்காகவும், நேர்மையாகவும் நடைபெறுவது போலவும், வடக்கு - கிழக்கு மாகாணத்தில்தான் ஒழுங்கீனமாக நடைபெறுவதாகவும், சங்கரியாரிலிருந்து தேர்தல் ஆணையாளர் வரை எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் மட்டுமல்ல; உலக நாடுகள் பலவற்றிலும் தேர்தல்கள் நடைபெறும் போதும், நடைபெற்று முடிந்ததும் தேர்தலில் முறைகேடுகள், மோசடிகள் நடந்ததாகப் புகார் கூறப்படுவதும், குற்றம் சாட்டப்படுவதும் வழமையான ஒரு சடங்காக இருக்கிறது என நண்பர் சொல்லிக்கொண்டு வந்தார்.

மக்களுக்குச் சேவை செய்வதற்காகத் தேர்தலில் போட்டியிட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக முன்வந்து தேர்தலில் போட்டியிடுகிறார்கள். தங்கள் சேவையால் மக்களின் ஆதரவு கிடைக்குமென்று மக்களிடம் வருபவர்கள் பின் எதற்காகப் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டும்? வேட்பாளர்களின் முகவர்கள் பணத்தை எப்படியெல்லாம் தேர்தல்களில் செலவு செய்கிறார்கள். இது ஒரு வகையில் மக்களின் வாக்குச் சீட்டுக்களை விலை கொடுத்து வாங்குவது போல் இல்லையா? என்று நான் கேட்டேன்.

இப்படித் தேர்தலில் பெருந்தொகைப் பணத்தைச் செலவிடுவதால்தான் பின்னர் நாட்டில் லஞ்சமும், ஊழலும் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது. தேர்தலில் அதிஉயர் பதவிக்காக பதின்மூன்று பேர் போட்டியிடுகிறார்கள். இதில் இரண்டு பெரிய கட்சிகளைச் சேர்ந்த மஹிந்தராஜபக்ஷவும், ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில்தான் போட்டி நிலவுகிறது. இதில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதுதான் கேள்வியாக இருக்கிறது. இரண்டு தரப்பிலும் வெற்றிக்காக கடுமையாக இரண்டு கட்சிகளையும் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் கடுமையாக உழைக்கிறார்கள். இறுதிவரை வாக்குறுதிகளை வேட்பாளர்கள் கொட்டி அளிப்பதும், அவற்றைத் தொடர்ந்து அவர்களின் ஆதரவாளர்கள் வாக்குறுதிகளை வியாக்கியானம் செய்துவருவதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. விடுதலைப் புலிகள் இந்தத் தேர்தலில் தங்களுக்கு ஆர்வமோ அக்கறையோ- இல்லையென்பதைத் தெரிவித்து வருகிறார்கள். ஆனால் பேரினவாத ஊடகங்கள் விடுதலைப் புலிகளை வம்புக்கு இழுத்துக்கொண்டே இருக்கின்றன. விடுதலைப்புலிகளைக் கருணாவின் பிளவு பலவீனப்படுத்திவிட்டதாகப் பெரிய தலைப்பில் ஆங்கிலத் தினசரியொன்று நேற்றுச் செய்தி வெளியிட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாக மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், வழக்கம் போல் இந்த மாதமும் தயாரித்து வெளியிட்ட அறிக்கையை எடுத்துக் காட்டியிருக்கிறது என்று நண்பர் பரமசிவம் சொன்னார்.

தேர்தலில் 1956ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா பின்பற்றிய இனவாதப் போக்கையே பிரதமர் மஹிந்தராஜபக்ஷவும் அவரது சகாக்களும் பின்பற்றுகின்றனர். ஆனால் முன்பு போல இனவெறியை வெளிப்படையாகக் கிளப்பி மக்களுக்குள் மோதலை ஏற்படுத்தும் நிலை இன்று இல்லை. விடுதலைப் புலிகளிடம் இன்று ஆயுதம் இல்லாமலிருந்தால் இந்த இனவெறிப்பிரசாரம் வெற்றியளித்திருக்கும். ஆனாலும் புலி எதிர்ப்பு என்ற சாட்டில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் மட்டுமல்ல தமிழர்களுக்குமிடையில் வேற்றுமையையும் முறுகலையும் ஏற்படுத்தும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நேற்றைய "ஐலன்ட்" பத்திரிகையில் மூன்று பந்தித் தலைப்பில் ஒரு செய்தி இரண்டாம் பக்கத்தில் வெளிவந்திருந்தது. இனக் கலகத்தைத் தொடர்ந்து 83இல் வடபகுதி வந்து குடியேறிய மலையக இந்திய வம்சாவளித் தமிழர்களை, வடக்குத் தமிழர்கள் ஒதுக்கியே வைத்திருக்கிறார்களென்றும், அவர்கள் இந்தப் பகுதியில் நிலம் வாங்கி உரிமை கொண்டாட முடியாதென்றும் வடபகுதித் தமிழர்கள் தங்களையே உயர்ந்தவர்களாகக் கருதி நடந்து கொள்கிறார்களென்றும் செய்தி வெளியிட்டுள்ளது, பார்க்கவில்லையா? என்று கேட்டேன்.

இது மட்டுமல்ல; கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஊடகங்கள் தங்களுடைய விற்பனைக்காக ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களில் இருவரில் ஒருவரை ஆதரிப்பதாகக் காட்டிக் கொண்டு செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டாலும் ஒவ்வொரு செய்தியிலும் கட்டுரையிலும், சிறுசெய்தியிலும் கூட விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் காட்டிக்கொள்ளும் செய்திகளில் தமிழ் மக்களுக்கு எதிராக விஷம் கலந்தே வெளியிடப்படுகின்றன. சிங்கள ஊடகங்கள் என்ன செய்கின்றன என்பது தெரியாது. இலங்கையில் அமைதி ஏற்பட்டாலும் அரசியல் தலைவர்களும், அரசியல் அமைப்புக்களும், ஆன்மீக அமைப்புக்களும், தமிழ் மக்களுக்கும், சிங்கள, முஸ்லிம் மக்களுக்குமிடையில் உள்ள வேற்றுமைகளையெல்லாம் நீக்கி ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிகண்டாலும் கூட, இந்த கொழும்பு, ஆங்கில, சிங்கள ஊடகங்கள் ஒற்றுமையும் அமைதியும் ஏற்படுவதற்கு ஒருபோதும் வழிவிடமாட்டா போலவே தெரிகிறது என்று பரமசிவம் சொன்னார்.

கிழக்கில் ஜனநாயகத்துக்கு ஆபத்து என்றும் தேர்தல் வாக்களிப்புத் தினத்தன்று துணைப்படைகளினால் பெரும் மோதல்கள் ஏற்படலாமென்றும் வாக்களிப்புத் தினத்தன்று பெரிய நெருக்கடி நிலைமை ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக "பவ்ரல்" அமைப்பின் தலைவர் தெரிவித்திருக்கிறார் என்று நான் சொன்னேன்.

அரச படைகளுடன் இயங்கும் துணைப்படைகளை வெளியேற்ற வேண்டுமென்று கண்காணிப்புக் குழுவும், ஜனாதிபதி ஆணைக்குழுவும் தெரிவித்த சிபாரிசுகளை அரசு நிராகரித்திருக்கிறதாம். அப்படியென்றால் இலங்கையில் அமைதியும் சமாதானமும் தோன்றவேண்டுமென்று விரும்பாதவர்கள் யார் என்று தெரிகிறதா? மீண்டும் இங்கு போர் ஏற்பட வேண்டுமென்று விரும்புவது யார் என்று தெரிகிறதா? ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின், நாடு எதிர்பார்ப்பது நல்லாட்சியையல்ல, முடிவு காண்பதற்கான போரைத்தான், இதையேதான் இங்கும் துணைப்படையும், துணைக்கட்சியும் செய்து வருகிறது என்று சொன்னபடி பரமசிவம் நடந்தார்.

# தமிழ் மக்கள் எதிர்பார்த்திருப்பது நவம்பர் 17ஐ அல்ல... நவம்பர் 27ஐயே...!



2005 நவம்பர் இலங்கைத் தீவுக்கு மிகமுக்கிய திங்களாக அமையப்போகிறது. தமிழ் பேசும் மக்கள் நவம்பர் 27ஐ மிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர். தமிழ் மக்களின் விடுதலைக் காகத்தம் இன்னுயிரை ஈகம்செய்த பதினெண்ணாயிரம் மாவீரர்களை நினைவு கூர்வதற்குத் தமிழ் மக்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். அதேநேரம் இந்த மாவீரர் நாளில் தமிழீழத் தலைவர் சொல்லப் போகின்ற சேதியை அறிய எதிர்பார்ப்புடன் தமிழ் மக்கள் மாத்திரமல்ல, சர்வதேச முமே காத்திருக்கின்றது. எனவே தமிழ் மக்களுக்கு அதி முக்கியமான திங்களாக இது அமைகிறது. தமிழ் பேசும் மக்களின் ஓர் உறுப்பான இஸ்லாமிய மக்களின் புனித ரம்ழான் இதே திங்களில் இந்த ஆண்டு வந்திருப்பது மேலும் சிறப்பானதாகும். தமிழ் முஸ்லிம் உறவு வலுப்பெற்று வரும் வேளையில் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை மேலும் வலுப்பெற வைப்பது போன்று மாவீரர் நாளும், ரம்ழானும் ஒரே திங்களில் அமைகின்றன.

இதேவேளை சிங்களத்திலே அடுத்த அரசுத் தலைவர் யார் என்பதைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நவம்பர் 17 இல் நடைபெறவுள்ளது. சிங்கள மக்கள் யாரைத் தேர்ந்தெடுக்கப் போகின்றார்கள் என்பதையும் சர்வதேசம் எதிர்பார்த்திருக்கிறது.

இதிலிருந்து தெரிவது என்னவெனில் தமிழீழ மக்களும், சர்வ தேசமும் 27 ஐ நோக்கிய வண்ணம் இருக்கின்றன. சிங்களமும், சர்வ தேசமும் 17ஐ நோக்கிய வண்ணம் இருக்கின்றன. தமிழீழ மக்களிடம் 17 ஐப் பற்றிய எண்ணம் இல்லை என்று கூறினாலும், ஒரு விடயத்தில் அவர்கள் நல்ல முடிவை எடுத்துள்ளார்கள். அதுதான் ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பைப் புறக்கணிப்பது என்பதாகும். இங்கு யாழ்ப்பாணத்திலே தேர்தலைப் புறக்கணிப்பதிலே மக்கள் காட்டி வரும் அதீத அக்கறை பிரமிக்க வைக்கிறது. பொங்கு தமிழில் காட்டிய எழுச்சியையும் விஞ்சும் வகையில் தேர்தல் புறக் கணிப்பை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதிலேயே மக்கள் தமது புலனைச் செலுத்துகின்றனர். தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் சர்வ தேசம் தமிழீழ மக்கள் விரும்புவது எதனை என்று அறிந்து கொள்ளவேண்டும் என்பதே மக்களது நிலைப்பாடாக உள்ளது. அத்துடன் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதும் மக்களின் நிலைப்பாடாகும்.

இங்கே யாழ்ப்பாணத்திலிருந்து வரும் நாளேடு ஒன்றில் தேர்தல் பற்றி வந்துள்ள கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சில கருத்துக்களை இங்கு குறிப்பிட வேண்டியது அவசியமாகவுள்ளது. இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட தமிழீழப் பகுதிகளில் தேர்தல் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட வேண்டும் என்று இலங்கை நீதிமன்றத்தில் இருவர் வழக்குத் தொடுத்துள்ளனர். நீதிமன்றம் அதற்குத் தடை விதிக்கமுடியாது என்று கூறிவிட்டது ஆனால், வழக்கு வேறு ஒரு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்குச் சிங்களத்திலே புதியதொரு சிந்தனையை அல்லது கருத்தை வெளிப்படுத்தியுள்ளது. தேர்தலில் வாக்களிக்கத் தடை விதிக்கப்பட்டால், அந்தப் பகுதி வேறு ஒரு நாடாகக் கருதப்படும். அதன்படி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குத் தேர்தல் வைக்கத் தடை விதிக்கப்பட்டால் அந்தப் பகுதி தனிநாடாக தமிழீழமாகநாமே அங்கீகரித்தவர்களாகின்றோம் என்பது அங்குள்ள அரசியல் ஆய்வாளர்களினதும் , அரசியல் சட்டவாளர்களின் கருத்தாகும். எனவே அந்தப் பகுதி மக்களை ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கத் தடைசெய்யக் கூடாது என்றுகருத்து முன்வைக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை ஏற்காத, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்காத, சிங்களத்து அரசியல் தலைவர்கள், தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க உரிமைகளற்றவர்கள். இவர்களுக்கு வாக்களிப்பது தமிழீழ மக்களின் தாகத்துக்கு எதிரானது. எனவே தமிழீழ மக்கள் தேர்தலைப் புறக்கணிப்பதே சிறந்த வழியும், ஒரே வழியுமாகும் என்பது இங்குள் மக்களின் கருத்தாக உள்ளது. மக்களை வாக்களிக்கவிடாது தடுப்பது தனிநாட்டுக்கான அங்கீகாரமாக அமையுமானால், மக்கள் வாக்களிக்காமல் புறக்கணிப்பதும் தமீழீழத்துக்கான அங்கீகாரமாகவே கருதப்பட வேண்டும் என்று அந்தக் கட்டுரை கூறுகிறது. எனவே தமிழ் பேசும் மக்கள் இந்தத் தேர்தலால் எந்தவித நன்மையும் கிடைக் கப்போவதில்லை என்று நன்கு உணர்ந்த பின்னரும் வாக்களிக்கப் போகிறார்களா? தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் தமிழீழத்தை அங்கீகரிக்கும்படி சிங் களத்தையும், சர்வதேசத்தையும் கோர உரிமையுள்ளவர்களாகின்றார்கள். எனவே முழுத் தமிழ் பேசும் மக்களும் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதே சாலச் சிறந்ததாகும்.

தமிழ் மக்களது வாக்களிப்பைத் தடைசெய்வது தனிநாட்டுக்கான அங்கீகாரம் என்பதும் தமிழ்மக்கள் தேர்தலைப் புறக்கணிப்பதும் அதேபோல் தமிழீழத்துக்கான அங்கீகாரமெனக் கருதும் வேளையில் 1931 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸும் தேர்தலைப் புறக் கணித்ததைச்சுட்டிக்காட்டி அவ்வாறான தவறை மீண்டும் ஒரு முறை தமிழ் மக்கள் விட்டு விடக் கூடாது என்று கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார். இவர் இந்தக் கருத்தை யாழ்ப்பாணத்திலேயே வைத்துத் தெரிவித்துள்ளார்.

1931 ஆம் ஆண்டுக்கும் 2005 இற்கும் இடையில்ஏற்பட்ட ஏராளமான மாற்றங்களை அவர் உணரவில்லை. அன்று அந்நிய ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை வைத்துஇப்பொழுதுள்ளநிலையை ஒப்பிட முடியாது. அன்றுஇருந்த தமிழ்த் தலைமை தமிழ் மக்களின் விடுதலைபற்றிய சிந்தனை அறவே இல்லாத தலைமையாகும். தொகுதிப் பங்கீடுதான் அப்பொழுது அவர்களது கவனமாக இருந்தது. அவர்களது பலவீனம் தான் தமிழினத்தின் விடுதலை தாமதமாவதற்குக் காரணமாகும். இன்று தமிழீழத்தின் பெரும் பகுதி விடுவிக்கப்பட்டுத் தமிழ் மக்களின் நிர்வாகத்தில் இருக்கிறது. தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தின்விடுதலைக்குமிகநெருக்கமாக உள்ளனர். இந்த நிலையில் 74 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரு நிகழ்வைக் காட்டித் தமிழ் மக்களை வாக்களிக்க வைக்கலாம் என்று கலாநிதி ஜெகான் பெரேரா போன்றவர்கள் நினைக்கக்கூடும். ஆனால் தமிழ் மக்கள் தெளிவாகவும், உறுதியாகவும் உள்ளார்கள்.


தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் சுயநிர்ணயம் என்பவற்றில் உறுதியாக உள்ள மக்கள் எதிர்பார்த்து இருப்பது நவம்பர் 27ஐ மட்டுமேயன்றி, சிங்களத்து ஜனாதிபதித் தேர்தலான நவம்வர் 17ஐ அல்ல.

# இந்த வார பலன் 04.11.2005 - 10.11.2005

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| யுரே | 05 பக1.48 தனு-சந் | | சனி |
| நெப் | 07 பிப 5.13 மக-சந்<br>09 இ 8.06 கும-சந் | | |
| சுக் | சந் புத | சூ குரு | கேது |

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை1)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை சுமூகமாகஇராது. அவ்வப்போது பிரச்சினைகள் தோன்றி மறையும். செலவுகள் வரவுக்கு மிஞ்சிக் காட்டும். குடும்பப் பெண்கள் சிக்கனத்தைக் கடைப் பிடித்தால் நன்று. தேகசுகமும் அடிக்கடி பாதிக்கப்படலாம். மங்கள கருமங்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலை தலங்களில் நிம்மதி இருக்காது. ஏதாவது பிரச்சினை தோன்றியவாறிருக்கும். அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். புதிய முதலீடு களைத்தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்கும் பிரச்சினைகள் ஏற்படலாம். புதிய ஒப்பந்தங்கள் தாமதமாகும் மாணவர்களுக்கு சுயமுயற்சி குன்றும். முன்னேற்றம் குறைவு.

## இடபம்


(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசிரிடம் 1,2)



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்ப நிலை சுமாராக இருந்தாலும் இடையிடையே கசப்புணர்வுகளும் காட்டும். தொழில் துறையில் எதிர்பார்த்தலாபம் கிடையாது. ஆயினும் முயற்சிக்கேற்ப நற்பலனுண்டு. தேகசுகம் சுமாராக இருக்கும். புத்திரர்களால் உதவிகள் கிடையாது. மங்களகருமங்கள் தாமதத்தின் மேல் கை கூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகமாயினும் சக உதவிகள் கிட்டும். உயர்ச்சிகள் பின்தள்ளிப் போகும். அதிகாரிகளுடன் ஒத்துப்போவது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமாகவே இருக்கும். விற்பனை பெருகுவதற்கு புதிய யுக்திகளைக் கையாள வேண்டும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில்கள் கிடைப்பது மத்திமம். மாணவர்கள் சுய முயற்சிக் கேற்ப முன்னேற்றமுண்டு.

## மிதுனம்


(மிருகசிரிடம்3,4திருவாதிரை,புனர்பூசம் 1,2,3)



மிதுன ராசியினருக்கு குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமும் நிம்மதியும் கிட்டும். எடுத்த கருமங்கள், முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். உறவினர்களின் வரவால் வீடு கலகலப்பாக இருக்கும். பணவருவாய் திருப்தியாக இருக்கும். புத்திரர்களால் உதவிகள் கிடைக்கும். விவாக விடயங்கள் மனம் போல் சந்தோஷமாக நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு இருக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பு நல்குவர். உத்தியோக உயர்ச்சி, ஊதிய உயர்வு என்பன உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் 'ஓகோ' என்று சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு புதிய தொழில்கள் வந்து சேரும். மாணவர்களுக்கு முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தி உண்டு.

## கடகம்

( புனர்பூசம் 4 பூசம் ஆயிலியம்)



கடகராசிக் காரருக்கு குடும்ப வாழ்க்கை பொதுவாக நன்று. உறவினர்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். புத்திரர்களால் நன்மைகள் உண்டு. பொருளாதாரம் தேவைக்கேற்ப சீராக இருக்கும். பெரியோர்களின் உதவிகள் உண்டு. மங்கள கருமங்கள் விரைவில் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு பிரயாண வசதிகள் வசதியான இட மாற்றங்கள் கிட்டும். வர்த்தர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும் . பிரயாசைக்கேற்ப லாபமுண்டு. தொழிலாளர்களுக்கு தொழில் அனுகூலங்கள் ஓரளவு நன்று. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் மிகும். பரீட்சைப் பெறுபேறுகள் நன்று.

## சிங்கம்

( மகம், பூசம், உத்தரம்1)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு இந்த வாரம் குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். எதிர்பாராத இடையூறுகள் சம்பவிக்கலாம். பொருளாதாரக் கஷ்டமும் ஏற்படலாம். அன்றாடப் பணிகள் நிறைவேறுவது கடினம். குடும்பப் பெண்கள் மிகவும் சிரமப்பட நேரிடும். மங்கள கருமங்கள் தாமதத்தைக் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். போக்குவரத்துக் கஷ்டங்கள் ஏற்படும் வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். நிலுவைக் கடன்களை வசூலிப்பது கடினம். வங்கி உதவிகள் கிடையாது. தொழிலாளர்களுக்குத் தொழில் முறையில் பிரச்சினைகள் தோன்றும். மாணவர்களுக்கு கடின முயற்சி தேவை.

## கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2)



கன்னிராசியினருக்கு குடும்ப நிலை ஓரளவு நன்று. உறவினர்களாலும், புத்திரர்களாலும் உதவி உண்டு. பொருளாதாரம் சுமாராக இருக்கும். தேகசுகம் பாதிப்படையாது. தொடங்குங் கருமங்கள் நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். குடும்பப் பெண்கள் கூடியளவு சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நன்று. மங்கள கருமங்கள் தாமதத்தையே காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருக்கும். ஆயினும். சக உதவிகளுடன் சமாளிக்க முடியும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறைவாகவே நடக்கும். முயற்சி தேவை தொழிலாளர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிட்டுவது தாமதமாகும். மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப முன்னேற்றமுண்டு.

## துலாம்

(சித்திரை 3,4 சுவாதி, விசாகம், 1,2,3)



துலாராசிக்காரருக்கு குடும்பத்தில் சிறப்பும், நல்லுறவும் விருத்தியாகும். வீட்டில் நற்கருமங்கள் நடைபெறும். உறவினருடன் கொண்டாட்டங்கள் நடக்கும். தொழில் விருத்தியாகும். புத்திரர்களால் நன்மைகள் கிட்டும். தொடங்கும் கருமங்கள் நல்ல பலனைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு காரியங்கள் அனுகூலமாகும். சக உதவியாளர் உதவுவார். அதிகாரிகளும் ஒத்துழைப்பர். மங்கள கருமங்கள் விரைவில் நடக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுறுசுறுப்படையும். பதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம், சித்தி உண்டு. சிலருக்கு தொழில் வாய்ப்புண்டு.

## விருச்சிகம்


(விசாகம் 4, அனுஷம், கேட்டை)



விருச்சிக ராசிக் காரருக்கு குடும்பத்தில் மன நிம்மதியும், மகிழ்ச்சியும் நிலவும். உறவினர்களாலும், புத்திரர்களாலும் உதவிகள் உண்டு. பொருளாதாரநிலை சிறப்படையும். வீட்டில் சுப சந்தோஷ நிகழ்வுகள் இடம் பெறும். குடும்பப் பெண்களுக்கு அபிலாஷைகள் நிறைவேறும். விவாக கருமங்கள் மனம் போல் சிறப்பாக நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு பலராலும் மதிப்புகள் கிட்டும். விரும்பிய இடமாற்றங்களும் உயர்ச்சியும் கிடைக்கலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறக்கும். மக்கள் வரவு முன்னரிலும் பார்க்க அதிகமாகும். வங்கி உதவிகளும் கிட்டும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். மாணவர்களுக்கு முன்னேற்றமும் பாராட்டுகளும் உண்டு. சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும்.

## தனுசு

( மூலம், பூராடம், உத்தராடம்)



தனுசு ராசியினருக்கு மனநிம்மதிக் குறைவும், சச்சரவுகளும் ஏற்படும். எதிர்பாராத வீண் செலவுகள் வந்து சேரும். புத்திரர்களால் தொல்லைகள் உண்டாகும். பொருட் செலவுகள் தவிர்க்க முடியாதிருக்கும். தேகசுகம் குறைவடைவதால் வைத்தியச் செலவு அதிகரிக்கும். தொடங்குங் கருமங்கள் நிறைவேறுவதில் தடைகள் ஏற்படும். மங்கள கருமங்கள் தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அதிகாரிகளுடன் முறுகல் நிலை தோன்றும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறையும். கடன் வியாபாரத்தை நிறுத்துவது நல்லது. தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் குறையும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கக் குறைவு ஏற்படும்.

## மகரம்

( உத்தராடம் 2,3,4) திருவோணம், அவிட்டம் 1,2)



மகரராசிக்காரருக்கு குடும்பத்தில் நிம்மதியும் சந்தோஷமும், நல்லுறவும் விருத்தியடையும். வீட்டில் சுப கருமக் கொண்டாட்டங்கள் நிகழும். புத்திரர்களால் நன்மை கிட்டும். வெளிநாட்டிலிருந்தும் நன்மைகள் வந்து சேரும் தொடங்கும் கருமங்கள் இனிதாக நிறைவேறும். மங்கள கருமங்களுக்கு அதிகாரிகளின் ஆதரவுகள் கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்விமுன்னேற்றமும், பாராட்டுக்களும் உண்டு.

## கும்பம்


(அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3)



கும்பராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு நிலவும். ஆடம்பர அநாவசியச் செலவுகள் ஏற்படும். புத்திரர்கள் கட்டுக்கடங்காமல் நடப்பர். பெரியோரின் உதவிகள் கிட்டும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். உறவினர்களுடன் ஒற்றுமை வலுக்கும். விவாக நிகழ்வுகள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு இருந்தாலும், சக உதவிகளால் சமாளிக்க முடியும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். முயற்சிக்கேற்ப லாபம் கிட்டும். தொழிலாளர்களுக்கு பிரயாசை கூடுதலாகவே இருக்கும், வேலைவாய்ப்பு மத்திமமாகும். மாணவர்களுக்கு ஊக்கத்துக்கேற்ப முன்னேற்றமுண்டு.

## மீனம்

(பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசிக்காரருக்கு குடும்ப உறவுகள் சீராக இருக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை வலுக்கும். தொழில் துறை அதிகம் பாதிக்காது. எடுக்கும் முயற்சிகள் விரைவில் அனுகூலமாகும். வரவுக்கேற்ப செலவு செய்தல் நன்று. தேகசுகம் பாதிப்படையாது. பெண்களின் ஆவல் பூர்த்தியாகும். மங்கள கருமங்கள் மனம் போல் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்களும் உதவுவார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வங்கி உதவிகளும் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு புதிதாகத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்களுக்கு முன்னேற்றமுண்டு சிலருக்குத் தொழில்வாய்ப்பு கிடைக்கும்.

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை அனைவரும் நிராகரிக்க வேண்டும்!

## புதிய ஜனநாயகக் கட்சி அறைகூவல்

யாழ்ப்பாணம்

பேச்சுவார்த்தை மூலமாக தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதாகக் கூறிக்கொண்டு காலம் கடத்தப்பட்டு வந்ததே தவிர, சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு-கிழக்கிற்கான சுயாட்சி அதிகாரப் பகிர்விற்கு ஜனாதிபதி ஆட்சிக் கதிரையில் அமர்ந்த எவருமே முன்வரவில்லை. எனவே, கடந்த 27 வருடகால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையின்கீழ் எதுவுமே பெறாத நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நிராகரிக்குமாறு புதிய ஜனநாயகக் கட்சி அறைகூவல் விடுத்துள்ளது. இது தொடர்பாக அந்தக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நாட்டின் தேசிய பிரச்சினை - பேரினவாத ஒடுக்குமுறை யுத்தமாக மாற்றப்பட்டு வடக்கு - கிழக்கு மக்கள் மீது திணிக்கப்பட்டது. கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் வரையான மக்கள், இளைஞர், யுவதிகள் கொன்றொழிக்கப்பட்டனர். இருப்பிடங்களும் கோடிக் கணக்கான ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்களும், வாழ்வாதாரங்களும் அழிக்கப்பட்டு பல லட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டனர். இவை அனைத்தையும் ஜனாதிபதி ஆட்சிமுறையே வழி வகுத்து முன்னெடுத்து வந்துள்ளது.

நாட்டின் மூல வளங்களைப் பயன்படுத்தி பல்வேறு அபிவிருத்தியை முன்னெடுக்கக் கூடிய தேசிய பொருளாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. அதேவேளை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வர்த்தக அமையம் போன்றவற்றின் ஆலோசனை வழிகாட்டலில் தாராளமயம், தனியார் மயம் என்பன உலகமயமாதல் என்ற ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலாக ஜனாதிபதி ஆட்சி முறையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு, யுத்தத்தின் மறைவிலே மறு காலனித்துவமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தாராள மயத்தின் மூலம் விவசாயமும், கைத்தொழில்களும் நாசமாக்கப்பட்டன. உள்ளூர் உற்பத்தியாளர்கள் வீதிக்கு விரட்டப்பட்டனர். அரசாங்க பொது கூட்டுத்தாபன நிறுவனங்கள் பல்தேசிய கம்பனிகளுக்குத் தாரை வார்க்கப்பட்டன. எஞ்சியுள்ளவற்றையும் தனியார் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்கின்றன. அழிவுதரும் திட்டங்களான மலையக மேல் கொத்மலைத் திட்டம், புத்தளம் நுரைச்சோலை அனல் மின் திட்டம் என்பனவும் முன்னெடுக்கப்படவுள்ளன. வடக்கிற்கு பெரும் அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் பற்றி எதிர்ப்போ கண்டனமோ தெரிவிக்காது ஆளும் தரப்பில் மௌனம் காக்கப்படுகிறது. இவை அனைத்திற்கும் ஜனாதிபதி ஆட்சி முறைமையே தலைமை தாங்கி நிற்கின்றது.

அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுகள், சேவை - போக்குவரத்துக் கட்டண உயர்வுகள் போன்றவற்றால் நாளாந்த வாழ்க்கைச் செலவுகள் வானத்தை நோக்கி விரைந்த வண்ணம் உள்ளன. அதனால் நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அரசாங்க தனியார்துறை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் உழைக்கும் மக்கள் அனைவரும் பாரிய பொருளாதார சுமைகள் நெருக்கடிகளால் அமுக்கப்பட்டு வருகின்றனர். இவற்றுக்கு ஜனாதிபதி ஆட்சி முறையால் தீர்வு எதனையும் காண முடியவில்லை.

யுத்தத்தாலும் சுனாமி பேரழிவினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரியவாறு புனர்வாழ்வு புனரமைப்பு வழங்கப்படவில்லை. சுனாமிப் பொதுக்கட்டமைப்புக் கூட மனித நேயமற்ற வகையில் தடுக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றது. பாதிக்கப்பட்ட பல லட்சம் மக்களுக்கு ஜனாதிபதி ஆட்சி அதிகாரத்தால் பதில் கூற முடியவில்லை.

நாட்டில் உணவு, உடை, இருப்பிடமின்மை, வேலை இன்மை என்பன வளர்ந்து வறுமைக் கோட்டின் கீழ் மக்களைத் தள்ளி வருகின்றன. கல்வி, சுகாதாரம், சிதைக்கப்பட்டு வரும் அதேவேளை, சமூக பண்பாட் டுத் துறைகள் சீரழிக்கப்பட்டு கொலைகள், தற்கொலைகள், கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள், போதைப் பொருள் பாவனை, சிறுவர் - பெண்கள் துஷ்பிரயோகம் என்பன தலைவிரித்தாடி வருகின்றன. இவற் றுக்கு ஜனாதிபதி ஆட்சி முறை எத்தகைய பரிகாரங்களையும் தேடவில்லை.

கடந்த ஜனாதிபதி ஆட்சிக்காலம் முழுவதும் ஜனநாயக தொழிற்சங்க மனித உரிமைகள் மீறப்பட்டே வந்துள்ளன. தடுத்து வைத்தல், சித்திரவதை, சிறை, காணாமற் போதல் போன்றவற்றால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டு அவற்றின் பாரிய இழப்புக்கள் தாக்கங்களிலிருந்து விடுபடாத அவல வாழ்விற்குள்ளேயே அவர்கள் இருந்து வருகின்றனர். இவை அனைத்தும் இந்த ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழேயே தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியம், மேற்குலக சக்திகள், ஜப்பான் ஒரு புறமாகவும் இந்திய பிராந்திய மேலாதிக்கம் மறுபுறமாகவும் இலங்கையின் பொருளாதார, அரசியல், ராணுவ, சமூக, பண்பாட்டுத்துறைகள் அனைத்திலும் ஊடுருவி பெரும் ஆதிக்கப்போட்டியில் ஈடுபட்டும் வருகின்றன. இதனால் இலங்கையின் இறைமை சுதந்திரம் பறிபோகின்றது. இதற்கு ஜனாதிபதி ஆட்சிமுறை மறுப்பின்றி இரு புறத்திற்கும் வழிவிட்டே வந்திருக்கிறது.


இவ்வாறு நாட்டிற்கும், உழைக்கும் அனைத்து மக்களுக்கும் தமிழ்த் தேசிய இனம் உட்பட முஸ்லிம், மலை யகத் தமிழ்த் தேசிய இனங்களுக்கும் சுமைகள், பிரச்சினைகள், நெருக்கடிகள், யுத்தக் கொடுமைகள், ஜனநாயக மனித உரிமை மறுப்புக்கள் மற்றும் சமூக அநீதிகளை விளைவித்தது இந்த ஜனாதிபதி ஆட்சி முறைமையேயாகும்.

அதேவேளை, சொத்து, சுகம் படைத்த மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகளுக்கும் அந்நிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் அவர்களது பல்தேசிய கம்பனிகளுக்கு சேவை செய்வதில் முதலாளித்துவ பேரினவாத ஆளும் வர்க்கப் பிரதிநிதியாகவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிக் கதிரையில் - ஐக்கிய தேசியக் கட்சியினதும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஜனாதிபதிகள் தொடர்ந்து அதிகாரம் செலுத்தி வந்துள்ளனர்.

அதனால் சாதாரண உழைக்கும் மக்கள் எந்தவித விமோசனங்களையும் பெறவில்லை. எனவே, இத்தகைய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான எதிர்வரும் நவம்பர் 17 இல் நடைபெறவுள்ள தேர்தலை அனைத்து மக்களும் நிராகரிக்க வேண்டும் என்ற அறைகூவலை புதிய ஜனநாயகக் கட்சி விடுக்கின்றது. மக் கள் தமது எதிர்ப்பை வெளிக்காட் டும் வண்ணம் வாக்குச் சீட்டைச் செல்லுபடியற்றதாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் றமாடி நகரில்

# அமெரிக்க ஹெலி விழுந்து நொருங்கியது இரண்டு படையினர் உயிரிழந்தனர்!



றமாடி

ஈராக்கின் மேற்கு நகரான றமாடியில் அமெரிக்க ஹெலிகொப்ரர் ஒன்று விபத்துக்குள்ளானதில் இரண்டு அமெரிக்கப் படையினர் உயிரிழந்ததாக தகவல்கள் தெரிவித்தன.

இந்த ஹெலி விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சதாம் ஆட்சிக் காலத்திலிருந்த இராணுவ படைப் பிரிவின் அதிகாரிகளை மீளவும் தற்போதுள்ள இராணுவத்தில் இணையுமாறு ஈராக் அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. 2003 ஆம் ஆண்டு அமெரிக்கா தலைமையி லான கூட்டணிப் படைகள் ஈராக் மீது படையெடுத்த பின்னர் ஈராக்கிய இராணுவம் கலைக்கப்பட்டது.

இந்த நிலையில் கூட்டணிப் படைகள் சுனி கிளர்ச்சி வாதிகளுக்கெதிராக பெரும் போராட்டத்தை நடத்தி வருகின்றன. கடந்த வருடத்திலிருந்து முன்னாள் இராணுவ படைப் பிரிவிலிருந்த பலர் தற்போதைய இராணுவத்தில் இணைந்து வருகின்றபோதிலும், தகுதி யான மற்றும் அனுபவம் வாய்ந்த அதிகாரிகளின் பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவி வருகின்றது.

இந்த நிலையில் சதாம் ஆட்சிக் காலத்தில் இருந்த இராணுவத்தில் மேஜர் தர அதிகாரிகளாகப் பணியாற்றியோரை தற்போது இணையுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இந்த தர அதிகாரிகள் அடுத்த மாதம் ஐந்து நாள் கையெழுத்திட வேண்டுமென்பதுடன், அவர்களுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகத் தேர்வும் நடத்தப்படும்.

தற்போது ஈராக்கில் பொலிஸ் மற்றும் படையினரென இரண்டு இலட்சம் பேர் உள்ளதாகவும், ஆனாலும் ஈராக்கில் இடம்பெற்று வரும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனவும், தற்போதைய ஆட்சேர்ப்பு முயற்சி வெற்றியளிக்குமாக இருந்தால், அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணப்படுமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஈராக்கின் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள முஸாயிப் நகரில் றமழான் தொழுகையை முடித்துக்கொண்ட வேளை, மசூதிக்கு அருகில் மினி பஸ்ஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 45 பேர் காயமடைந்தனர்.




# பாகிஸ்தான் பூகம்ப உயிரிழப்பு 73 ஆயிரத்தைக் கடந்துள்ளது!

இஸ்லாமாபாத்

பாகிஸ்தானில் பூகம்பத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 73 ஆயிரத்தை எட்டிவிட்டதென அந்த நாட்டின் பூகம்ப நிவாரண ஆணையர் பாருக் அகமத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த மாதம் 8 ஆம் திகதி ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 57 ஆயிரம் என்று பாகிஸ்தான் பிரதமர் சவுகத் அஜீஸ் உறுதி செய்தார். இந்த எண்ணிக்கை மேலும் உயரும் என்றும் அறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் அரசு சார்பில் செய்தி வெளியிட்ட பாகிஸ்தான் பூகம்ப நிவாரண ஆணையாளர் மேஜர் ஜெனரல் பாருக் அகமத்-

பாகிஸ்தான் பூகம்பத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 73 ஆயிரத்து 276 ஆக உயர்ந்துள்ளது. 69 ஆயிரம் பேர் காயமடைந் துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்தார்.

பிரின்ஸெஸ் ஓ(f)ப் வேல்ஸ்
-வைத்தியசாலை-
சேவை மேம்பாட்டைக் முன்னெடுத்துச் செல்ல எங்களுக்கு பின்வரும் சேவைகளுக்கு தகுதியானவர்கள் தேவை
- கண்வைத்திய சிகிச்சை நிபுணர்
- வைத்திய நிபுணர்/ PHYSICIAN
- கணக்காளர் Accountant
- MLT
- அம்புலன்ஸ் டிரைவர்

23 நவம்பர் 2005 ஆம் திகதியன்றுதிறந்து வைக்கப்படுகிறது

விண்ணப்பதாரர் தங்களது கல்வி மற்றும் அனுபவம் சான்றிதழ் பிரதிகளுடன் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களைத் தயவு செய்து 15.11.2005 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கும்படி அனுப்பி வைக்கவேண்டும்

வைத்திய இயக்குனர்:
132, கச்சேரி நல்லூர் சாலை, யாழ்ப்பாணம்.
(C/4803)

# பிரதமரை பதவி விலகக் கோரி எதியோப்பியாவில் கலவரம்!

## பொலிஸார் சுட்டதில் 33 பேர் பலி!

அடிஸ்அபாஸ்

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான எதியோப்பியாவில் கடந்த மே மாதம் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலின்போது வெளிநாட்டு கண்காணிப்பாளர்களும் வந்திருந்தனர். இந்தத் தேர்தலில் ஆளும் மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி வெற்றிபெற்றதாகக் கூறப்பட்டது.

பிரதமராக மெனஸ் செனாலி பதவியேற்றார். ஆனால் இந்தத் தேர் தலில் முறைகேடு நடந்ததாகவும், அமெரிக்க தலையீடு இருந்ததாகவும் எதிர்க்கட்சிகள் புகார் கூறின.

பிரதமர் மெலஸ் செனாலி பதவி விலகவேண்டும் என்று வற்புறுத்தி எதிர்க்கட்சிகள் கலவரத்தில் ஈடுபட்டன. பிரதமரின் ஆலோசகர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே நடந்த மோதல் உள்நாட்டுக் கலவரமாக மாறியது.

தலைநகர் அடிஸ் அபாஸ் நகரில் ஏராளமான வாகனங்கள் தீ வைத்துக் கொழுத்தப்பட்டன. பிரதமர் அலுவலகம் நோக்கி கலவரக்காரர்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

கலவரக்காரர்களை நோக்கி பொலிஸார் துப்பாக்கியால் சுட்டனர். பொலிஸார் சுட்டதில் 33 பேர் பலியானார்கள். இந்த மோதலில் இதுவரை 150 பேர் காயமடைந்தனர். இதேவேளை, அங்குள்ள வெளிநாட்டு தூதரக அலுவலகங்களும் தாக்கப்பட்டன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# கேணல் மீடின் கொலையை ஐ.தே.க. திசை திருப்புகிறது!

## - விமல் வீரவன்ச குற்றச்சாட்டு -

கொழும்பு

இலங்கை இராணுவப் புலனாய்வுத்துறையின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான ரிஸ்வி மீடின் கொலையை ஐக்கிய தேசியக் கட்சி திசை திருப்புவதாக ஜே. வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

இதுகுறித்து ஜே.வி.பி பொதுச் செயலாளர் விமல் வீரவன்ச கூறியுள்ளதாவது-

ரிஸ்வி மீடின் கொலைக்கு ஜே. வி.பி.தான் பொறுப்பேற்க வேண்டும் என்று அர்த்தமற்ற காரணங்களின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க கூறிவருகிறார். யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதால்தான் இந்தப் படுகொலை நடந்தது. ரிஸ்வி மீடினைக் கொன்ற கொலையாளி ஐஸ் மஞ்சு ஐக்கிய தேசியக் கட்சியின் ஒருங்கிணைப்பாளரின் கீழ் பணியாற்றியுள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்துக்கு முன்பு சிங்கள பாதாள உலகக் குழுவினர் இராணுவப் புலனாய்வுத் துறையினரை படுகொலை செய்துள்ளனரா? மீடினின் தனிப்பட்ட எதிரிகள் தற்போது பேசி வருவதன் பின்னணியில் ஐக்கிய தேசியக் கட்சியுள்ளது.

ஐக்கிய இலங்கையின் கீழ் மாகாண சபைகளை விட கூடுதல் அதிகாரம் கொண்ட பிரதேச நிர்வாகங்கள் ஏற்படுத்தப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைக்கும் தனித்தாயகக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதைப் போன்றது இது என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.

## கூட்டமைப்பு சந்திப்பு இன்று நடைபெறாது

கிளிநொச்சி

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இன்றைய சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியல் நிலைமைகள், தமிழ்மக்கள் மீதான இராணுவத்தினரின் அதிகரித்திருக்கும் அடக்குமுறைகள் மற்றும் தேர்தல் ஆகியவை குறித்து சு.ப.தமிழ்ச்செல்வனுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இன்று கிளிநொச்சியில் சந்தித்துப் பேசக்கூடும் என்று கூறப்பட்டது.

இந்தச் சந்திப்பு தற்போது ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் சந்திப்புக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படவுள்ளதாகவும் கிளிநொச்சி தகவல்கள் தெரிவித்தன.

## புலிகள்மீது போர்ப் பிரகடனம்...

ஹக்கீம் பேசுகையில் -

இராணுவத்தை கலைக்க வேண்டும் என்று ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறிவருகிறார். ஆனால் மகிந்த ராஜபக்ஷவை தேர்தலில் வெற்றிபெற வைத்து நாட்டில் இராணுவ ஆட்சியை செயற்படுத்தவே ஜே.வி.பி திட்டமிட்டு வருகிறது.

இது புத்தபிக்குகளின் தேசம். சிறுபான்மையினரின் தாயகம் அல்ல. அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை இல்லை என்பதுதான் ஜே.வி.பியின் கொள்கைகள். இந்தக் கொள்கைகளுடைய ஜே.வி.பி தோற்கடிக்கப்படவேண்டும்.

சிறிமாவோ பண்டார நாயக்க ஆட்சிக்காலத்தில் முஸ்லிம்களுக்கு சுயாட்சி வழங்கப்படும் என்று தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதால் கூட்டணியிலிருந்து ஜே.வி.பி விலகியது. அந்த ஜே.வி.பியுடன் இணைந்துள்ள மகிந்த ராஜபக்ஷவால் முஸ்லிம்களுக்கு எத்தகைய நன்மைகளைச் செய்ய முடியும்? முஸ்லிம்களின் உரிமையைத் தொடர்ந்து எதிர்த்துவருகிற கட்சி ஜே.வி.பி.

அரசியற் கட்சிகளின், மக்களின் ஜனநாயக உரிமைகளை நிராகரிக்கும் கட்சி ஜே.வி.பி. தங்களது அணிக்கு எதிரான கட்சிகளைத் ஆதரிப்பவர்களை அவர்கள் படுகொலை செய்துவருகிறார்கள். இப்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு எதிராகவும், முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராகவும் ஜே.வி.பி செயற்பட்டுவருகிறது.

வடக்கு - கிழக்கு தன்னாட்சிக்கும், முஸ்லிம்களுக்கு சுயாட்சி நிர்வாகம் அளிக்கவும் ரணில் விக்கிமசிங்கவுக்கு முஸ்லிம்களது வாக்குகள் அவசியமானது. இது தொடர்பிலான நிபந்தனைகளையே நாம் ஜனாதிபதித் தேர்தலில் முன்வைத்துள்ளோம். அமைதிக்காக யுத்தம் தொடுத்த சந்திரிகா குமாரதுங்கவால் அமைதியை உருவாக்க முடிந்ததா?

தமிழீழ விடுதலைப்புலிகளை யுத்தம் மூலம் தோற்கடித்துவிட முடியும் என்று மகிந்த ராஜபக்ஷவாலும், ஜே.வி.பியாலும் கூறமுடியுமா?

அல்லது,தமிழீழ விடுதலைப் புலிகளுடன் புதிய யுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்த முன்வருவார்களா?

தென்னிலங்கைக்கு ஒரு சவப்பெட்டி கூட வராமல் வன்னிப் பெருநிலப்பரப்பை கைப்பற்றிவிடுவோம் என்று அவர்களால் கூறமுடியுமா? முடியாது.

போர் நிறுத்த ஒப்பந்த காலத்தில் சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டிய அவசியம் இருக்கிறது.

பேரியல் அஸ்ரப், அதாவுல்லா, அன்வர் இஸ்மாயில், ரிசாட் பதியூதின் மற்றும் நஜீவ் மஜித் ஆகியோரால் முஸ்லிம்களுக்கு சுயாட்சி அதிகாரத்தைப் பெற்றுத்தர முடியும் என்று கூற முடியுமா? அவர்களால் அதை ஏற்படுத்த முடியாது. ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியினரது அடிமைகளாகிவிட்டனர்.

பலஸ்தீனப் பிரச்சினை பற்றி மகிந்த ராஜபக்ஷ பேசி வருகிறார். பலஸ்தீனியருக்கு மகிந்த ராஜபக்ஷ மட்டுமே ஆதரவளிக்கவில்லை. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு கூட பலஸ்தீனியர்களுடன் தொடர்பு உண்டு. நாங்களும் குரல் கொடுத்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முப்படைகளின்...

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் இராணுவத்திலிருந்து வெளியேறி தலைமறைவாகுவோர் எண்ணிக்கை ஆண்டுக்கு 9 ஆயிரமாக அதிகரித்தது என அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார்.

## இராணுவத்துடன்...

போட்டிகளால் அதிகளவில் பொய்யாக பதிவு செய்யப்படுகின்றன. இந்தத் தேர்தலில் செல்லிடப் பேசிகளின் குறுந்தகவல் சேவையும் பயன்படுத்த உள்ளோம். கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவனை கடந்த சனிக்கிழமை சந்தித்துப் பேசினோம்.

50 கிலோமீற்றர் தூரம் சென்று கொத்தணி வாக்குச் சாவடிகளில் தமது பிரதேச மக்கள் வாக்களிப்பதற்கு புலித்தேவன் விசனத்தை தெரிவித்தார் என்று கிங்ஸ்லி றொட்றிக்கோ மேலும் தெரிவித்தார்.

# மஹிந்தவின் பிரசாரத்துக்காக அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம்!

## ட்ரான்பரன்சி இன்ரநஷனல் குற்றச்சாட்டு

கொழும்பு

ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களுக்காக பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் சம்பவம் குறித்து ட்ரான்பரன்சி இன்ரநஷனல் இடைக்கால அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் கொழும்பில் நேற்று ஊடக மாநாடு ஒன்று இடம் பெற்றது.

ஏற்கனவே பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் தொடர்பாக அமைச்சுக்களுக்கு அறிவுறுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும், அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென ட்ரான்பரன்சி இன்ரநஷனல் குற்றம் சுமத்தியுள்ளது.

இதன்படி அரசாங்க ஊடக நிறுவனங்களில் தேர்தல் பணிக்காக பிணையோ, உத்தரவாதம் இன்றி பொதுசன ஐக்கிய முன்னணிக்குப் பாரிய கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது.

இது வசூலிக்கப்படாத சந்தர்ப்பத்தில் பொதுப் பணங்களுக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்துமென ட்ரான்பரன்சி இன்ரநஷனல் தெரிவித்துள்ளது.

அரச கட்டடங்களும், அரச காணிகளும் ஹெலிகொப்ரர்களும் பொதுசன ஐக்கிய முன்னணியால் பயன்படுத்தப்படுகின்றன. எனினும் இதற்காக ஏற்படும் செலவுகளைச் செலுத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அலரிமாளிகையில் அரசியல் கூட்டங்கள் நடத்தப்படுவதால், அதனால் ஏற்படும் அனைத்துச் செலவினங்களும்வேட்பாளரேஏற்றுக்கொள்ள வேண்டும். எனினும் அதற்கான செலவினங்களும் நிவர்த்தி செய்யப்படவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் பிரசாரங்களுக்காக ஹெலிகொப்ரரைப் பயன்படுத்தி வருவதால், அரசாங்கத்துக்கு பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, அந்தச்செலவினத்தை அவரே பொறுப்பேற்கவேண்டும். எனினும் விமானப்படை அந்த வசதியை இலவசமாகவே வழங்கிவருகின்றது.

இதனால் ஏனைய வேட்பாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று ட்ரான்பரன்சி இன்ரநஷனல் குறிப்பிட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்படும் மூத்த அமைச்சர் ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தில் தேர்தல் விளம்பரங்களை ஒளிபரப்புவதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கடனடிப்படையில் 5 லட்சம் ரூபா பெற்றுள்ளதுடன் பல அரசாங்க நிறுவனங்களில் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வருகின்றன என்று ட்ரான்பரன்ஷி இன்ரநஷனல் மேலும் தெரிவித்துள்ளது.

## மகிந்த....

நாடாளுமன்ற உறுப்பினர்களை நாடாளுமன்றம் அனுப்பவும் ஜே.வி.பி திட்டமிட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 125 முக்கிய தேர்தல் பிரசார கூட்டங்களை ஜே.வி.பியிடம் ஒப்படைத்திருப்பது மேற்படி திட்டத்தின் ஒரு பகுதியாகவேயாகும். இதன்படி திட்டமிடப்பட்ட பொதுத் தேர்தலின் பின்னர், நியமிக்கப்படும் அமைச்சரவையில் ஜே.வி.பிக்கு முக்கிய அமைச்சுப் பதவிகள் கிடைக்கும்.

இதன் மூலம் அவர்களால் தயாரிக்கப்பட்ட மஹிந்தவின் சிந்தனையில் குறிப்பிட்டவற்றை செயற்படுத்தும் திட்டத்தை பெற்றுக் கொள்வதே ஜே.வி. பியின் திட்டமெனவும் தகவல்கள் தெரிவித்தன. (தே)

# கேணல் மீடின் கொலையுடன் ஐ.தே.கட்சிக்கு தொடர்பு!

## - குற்றம் சாட்டுகிறது பிக்குகள் முன்னணி -

கொழும்பு

இராணுவப் புலனாய்வுத் துறைத் தலைமையகத் தலைமை அதிகாரியான கேணல் ரிஸ்வின் மீடின் கொலைக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக தேசிய பிக்குகள் முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

இந்தக் கொலை தொடர்பாகத் தேடப்பட்டுவரும் ஐஸ் மஞ்சு என்ற நபர் ஐக்கிய தேசியக் கட்சியின் தீவிர ஆதரவாளர். ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்திருந்த கொலை ஒப்பந்தகாரர் இவர்.

ஐக்கிய தேசியக் கட்சி மேலும் பல இராணுவ, அரசியல் தலைவர்களை கொலை செய்யத் திட்டம் தீட்டியுள்ளதாகத் தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன எனவும் தேசிய பிக்குகள் முன்னணி தெரிவித்துள்ளது.

# திட்டமிட்டபடி 8ஆம் திகதி வரவு - செலவுத் திட்டம்!

கொழும்பு

அரசாங்கத்தின் 2006 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அமைச்சரவையின் முடிவை அறிவிக்கும் கூட்டம் நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது -

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரையும், இது தொடர்பான வாக்கெடுப்பு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி மாலை 6 மணிக்கு இடம்பெறும்.

குழுநிலை விவாதம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி வரை நடைபெறும். இது தொடர்பான வாக்கெடுப்பு டிசம்பர் 22ஆம் திகதி 6 மணிக்கு இடம்பெறும் என்றும் அமைச்சர் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்தார்.

## போர் நிறுத்த உடன்படிக்கையின்...

விமானத்தளம் வந்தடைந்த ரணிலுக்கு கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. படையினர் மத்தியில் உரையாற்றிய ரணில் -

போர்நிறுத்த உடன்படிக்கை முப்படையினரையும் நாட்டின் ஆட்புல இறைமையையும் பாதுகாக்கவே உள்ளதென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உடன்படிக்கையின் முதலாவது பிரிவின் மூன்றாவது உபபிரிவில் உள்ளதன் அடிப்படையில் இலங்கையின் தேசிய இறைமை ஆயுதப் படையினரால் பாதுகாக்கப்படுமென கூறப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் விடுதலைப் புலிகளும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளனர். அதற்கமைவாகவே நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இந்த போர்நிறுத்த உடன்படிக்கை மூலம் இதற்கு முன்னர் கிடைக்காத பல உதவிகள் இராணுவத்துக்கு கிடைத்தது. அமெரிக்கா மற்றும் இந்தியாவிலிருந்து உதவிகள் கிடைக்கவில்லை. தற்போது பல நாடுகள் எமது இராணுவத்துக்கு உதவிகளை வழங்கியுள்ளன. பயிற்சிகளுக்காக அழைத்துச் செல்கின்றனர். ஒவ்வொரு துறைகளிலும் உதவிகள் கிடைப்பதால் எமது இராணுவம் பலமடைந்துள்ளது.

நாட்டைப் பிரிக்காது சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வின் மூலம் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும்.

இராணுவ சிப்பாய்களுக்கு வங்கிகள் மூலம் கடன் திட்டம் உருவாக்கப்படும் இராணுவத்தை நாம் ஒரு போதும் கலைக்கப்போவதில்லை. இராணுவத்தினர் ஓய்வுபெற்றுச் சென்ற பின்னர் அவர்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் வகையில் படைத்துறை அமைச்சு உருவாக்கப்பட்டு தொழிற்பயிற்சிகள் வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை- ஹெலியில் ஊடகவியலாளர்களிடம் பேசிய ரணில் அமைதியை முன்னெடுக்கும் போது கணிசமான படையினர் யாழில் குறைக்கப்படுவர். எனினும் இது தொடர்பாக இராணுவத் தளபதிகளே முடிவை எடுப்பார்கள்.

யாழ்ப்பாணத்தில் மக்களிடையே தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ள விரும்பினாலும் அதற்கான ஆளணி வளம் எம்மிடம் இல்லை.

யாழ்.நகர் செல்வது குறித்து அவதானமாக இருக்குமாறு பாதுகாப்பு அதிகாரிகள் எனக்கு அறிவுறுத்தியதன் காரணத்தாலேயே நான் அங்கு செல்லவில்லை. எனினும் யாழ்ப்பாண மக்களுடன் தினமும் தொலைபேசி மூலம் பேசி வருகின்றேன். யாழ்ப்பாண மக்களின் பிரச்சினை குறித்து எனக்கு நன்றாகவே தெரியும். அவர்களுக்கு தேவைப்படுவது சமாதானம்.

என்னால் ஏற்படுத்தப்பட்ட போர் நிறுத்தமானது சகலருக்கும் வாக்களிக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதென்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். கடந்த முறை நான் விஜயம் செய்தபோது சிப்பாய்கள் யுத்தத்தால் காயமடைந்து அவதிப்பட்டுக்கொண்டிருந்தனர்.

ஆனால் இம்முறை அவர்கள் கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம் போன்றவற்றால் காயமடைந்திருப்பதைக் கண்டேன். இது ஒரு பாரிய முன்னேற்றமாகும் எனத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பலாலி வந்த ரணில் விக்கிரமசிங்க, காங்கேசன்துறை கடற்படைத்தளம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகிய இடங்களுக்கும் சென்று பார்வையிட்டார்.

## மட்டக்களப்பில் தாக்குதல்...

தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த ஈ.பி.டி.பி. உறுப்பினரான காந்தன் எனப்படும் ஆறுமுகம் பத்மகாந்தன் பின்னர் உயிரிழந்ததாக பி.பி.சி. தெரிவித்தது. இந்தச் சம்பவத்தில் நான்கு பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் மற்றும் ஓட்டோ சாரதி ஆகியோர் காயமடைந்தனர்.

மட்டக்களப்பு நகரிலுள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்திலிருந்து காயமடைந்த ஆறு பேரும் சின்ன ஊரணிக்கு பத்திரிகை விநியோகத்துக்காகச் சென்றுகொண்டிருந்த சமயம் ஞான சூரியம் சதுக்கத்துக்கு அருகாமையில் வைத்தே மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

தாக்குதலுடன் தொடர்புடைய நபர்கள் தப்பிச் சென்றுள்ள போதிலும், அவர்களால் கைவிடப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு துப்பாக்கிகள் அந்தப் பகுதியிலிருந்து பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அந்தப் பகுதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தில் சஞ்சய அனுருத்த, பிரியந்த, கருணா திஸ்ஸ, ஜெயரத்ன ஆகிய பொலிஸ் கொன்ஸ்டபிள்களும், தபேந்திரன் என்ற ஓட்டோ சாரதியுமே காயமடைந்தவர்களாவர்.

இப்பத்திரிகை இல.267 ,நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.11.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2005

## பருத்தித்துறை உதவி அரச அதிபர் பிரிவு

(தொடர்ச்சி....)

142 யா/பரு/3226 திருமதி. கமலாவதி விநாசித்தம்பி
143 யா/பரு/3236 திரு. கோணமலை சங்கரப்பிள்ளை
144 யா/பரு/3274 திருமதி. கதிராத்தைப்பிள்ளை சதாசிவம்
145 யா/பரு/3382 திரு. நாகப்பா செல்லையா
146 யா/பரு/3411 திரு. பொன்னா கனகசபை
147 யா/பரு/3415 திருமதி. ஈஸ்வரி பரமகுரு
148 யா/பரு/3425 திருமதி. பாலாமிர்தமுது புவனேந்திரன்
149 யா/பரு/3482 திரு. வயிரவி சுப்பையா
150 யா/பரு/3492 திருமதி. கமலாம்பிகை சண்முகலிங்கம்
151 யா/பரு/3499 திரு. முத்து தங்கவேல்
152 யா/பரு/3505 திருமதி. கலைச்செல்வி கிருஷ்ணபிள்ளை
153 யா/பரு/3509 திருமதி. கனகேஸ்வரி சுந்தரசிங்கம்
154 யா/பரு/3524 திரு. சின்னையா நடராசா
155 யா/பரு/3564 திரு. கணேசு விக்கினேஸ்வரமூர்த்தி
156 யா/பரு/3601 திருமதி. சரஸ்வதி கிட்டினபிள்ளை
157 யா/பரு/3617 திருமதி. பகவதி சங்கரப்பிள்ளை
158 யா/பரு/3644 திருமதி. லக்ஷ்மி கதிரன்
159 யா/பரு/3645 திருமதி. இலட்சுமிப்பிள்ளை செல்லையா
160 யா/பரு/3648 திருமதி. சரஸ்வதி கதிரவேலு
161 யா/பரு/3655 திருமதி. ஈஸ்வரதேவி தியாகராசா
162 யா/பரு/3692 திருமதி. பரமேஸ்வரி கனகசுந்தரம்
163 யா/பரு/3765 திருமதி. ஜானகிஅம்மா பாலசுந்தரம்
164 யா/பரு/3771 திருமதி. இரத்தினம்மா செல்லக்கண்டு
165 யா/பரு/3789 திரு. குமரேசு முருகுப்பிள்ளை
166 யா/பரு/3793 திரு. முத்துச்சாமி கந்தசாமித்துரை
167 யா/பரு/3812 திரு. நல்லதம்பி பாலசுப்பிரமணியம்
168 யா/பரு/3846 திருமதி. சின்னப்பிள்ளை செல்லையா
169 யா/பரு/3854 திருமதி. லோகநாயகி குமாரசாமி
170 யா/பரு/3882 திரு. குழந்தையன் வடிவேல்
171 யா/பரு/3887 திரு. சாத்தப்பா துரைராசா
172 யா/பரு/3910 திரு. சுப்பிரமணியம் சின்னத்துரை
173 யா/பரு/3942 திருமதி. பத்மாவதி கனகசபாபதி
174 யா/பரு/3959 திரு. சதாசிவம்பிள்ளை மகேந்திரன்
175 யா/பரு/3992 திரு. செல்லையா கதிரவேற்பிள்ளை
176 யா/பரு/3995 திரு. கணபதிப்பிள்ளை சபாரத்தினம்
177 யா/பரு/3997 திருமதி. தங்கம்மை கதிரவேலு
178 யா/பரு/4022 திரு. குழந்தை செந்திவேல்
179 யா/பரு/4049 திரு. ஆழ்வாப்பிள்ளை தங்கராசா
180 யா/பரு/4071 திரு. சபாபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
181 யா/பரு/4078 திரு. ஜயாத்துரைக்குருக்கள் லிங்கோற்பவநாதா
182 யா/பரு/4084 திரு. சந்திரசேகரம் முருகேசு சுப்பிரமணியம்
183 யா/பரு/4105 திரு. ஆறுமுகம் சின்னராசா
184 யா/பரு/4112 திரு. சின்னையா தேவராசா
185 யா/பரு/4120 திருமதி. திலகவதி நாகராஜா
186 யா/பரு/4125 திருமதி. லீலாவதி செல்வரெட்ணராசா
187 யா/பரு/4140 திரு. சத்தியாம்பிள்ளை பிலிப்பையா யோண் யோசேப்
188 யா/பரு/4242 திரு. வயிரவன் புஷ்பலசிங்கம்
189 யா/பரு/4274 திருமதி. இராசலெட்சுமி முத்துக்குமாரசாமி
190 யா/பரு/4298 திருமதி. முத்து மாணிக்கன்
191 யா/பரு/4302 திருமதி. சரஸ்வதி கிட்னன்
192 யா/பரு/4314 திருமதி. காமாட்சி முத்துக்குமாரசாமிசர்மா
193 யா/பரு/4362 திரு. கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்
194 யா/பரு/4380 திருமதி. நல்லம்மா சண்முகநாதன்
195 யா/பரு/4384 திரு. சிவப்பிரகாசம் சுந்தரானந்தம்
196 யா/பரு/4389 திருமதி. செல்வநாயகி முருகேசு
197 யா/பரு/4390 திருமதி: பர்வதாதேவி சுப்பிரமணியம்
198 யா/பரு/4402 திருமதி. பொன்னுச்சாமி நாகலிங்கம்
199 யா/பரு/4431 திரு. சிதம்பரப்பிள்ளை திருநாவுக்கரசு
200 யா/பரு/4438 திரு. சிதம்பரப்பிள்ளை திருநாவுக்கரசு
201 யா/பரு/4444 திரு. தாமோதரம் காசிநாதர்
202 யா/பரு/4462 திரு. சபாரத்தினம் சுப்பிரமணியம்
203 யா/பரு/4488 திரு. தருமலிங்கம் கணேசலிங்கம்
204 யா/பரு/4494 திரு. கந்தையா மயில்வாகனம்
205 யா/பரு/4495 திரு. விசுவலிங்கம் சிவலிங்கராசா
206 யா/பரு/4497 திரு. பொன்னுச்சாமி செல்லத்துரை
207 யா/பரு/4540 திருமதி. தங்கமணி மீனாட்சிசுந்தரம்
208 யா/பரு/4598 திருமதி. நல்லம்மா கிருஷ்ணபிள்ளை
209 யா/பரு/4617 திரு. பொன்னர் சின்னராசா
210 யா/பரு/4620 திரு. குட்டியன் சின்னையா
211 யா/பரு/4624 திருமதி. தங்கபாக்கியம் இராமலிங்கம்
212 யா/பரு/4625 திருமதி. தெய்வி பூசிங்கம்
213 யா/பரு/4637 திருமதி. மாணிக்கம் சின்னையா
214 யா/பரு/4642 திரு. சுப்பர் தர்மலிங்கம்
215 யா/பரு/4647 திரு. சுப்பிரமணியம் அழகேசன்
216 யா/பரு/4651 திரு. கதிர்காமு செல்வவிநாயகம்
217 யா/பரு/4671 திருமதி. தெய்வானை தில்லையம்பலம்
218 யா/பரு/4688 திருமதி. சீவரத்தினம் பாலசுப்பிரமணியம்
219 யா/பரு/4705 திரு. வேலுப்பிள்ளை முருகுப்பிள்ளை
220 யா/பரு/4710 திருமதி. சின்னம்மா கந்தசாமி
221 யா/பரு/4714 திருமதி. ஈஸ்வரி வேலுப்பிள்ளை
222 யா/பரு/4737 திரு. சுப்பர் இராசையா
223 யா/பரு/4779 திருமதி. கமலாதேவி பாலசூரியர்
224 யா/பரு/4783 திருமதி. சிசிலியம்மா இராஜநாயகம்
225 யா/பரு/4785 திரு. சிதம்பரநாதன் ஆறுமுகநாதன்
226 யா/பரு/4788 திரு. வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை
227 யா/பரு/4794 திருமதி. சரஸ்வதி வடிவேலு
228 யா/பரு/4861 திரு. மயில்வாகனம் சிறிஸ்கந்தராசா
229 யா/பரு/4869 திருமதி. அந்தோனிக்கம்மா அல்பிரேட்
230 யா/பரு/4873 திரு. வீரகத்தி அப்பாக்குட்டி
231 யா/பரு/4881 திரு. வைரப்பிள்ளை செல்வராசா
232 யா/பரு/4913 திரு. சிமயானந்தகுரு சிவயோககுரு
233 யா/பரு/4934 திரு. சின்னையா கந்தசாமி
234 யா/பரு/4961 திருமதி. நாகரத்தினம் மகேந்திரன்
235 யா/பரு/4982 திருமதி. தங்கமணி செல்வராசா
236 யா/பரு/5005 திருமதி. அழகம்மா கணபதிப்பிள்ளை
237 யா/பரு/5006 திரு. சபாபதி நடராசா
238 யா/பரு/5013 திருமதி. வள்ளிமுத்து தேவசிகாமணி
239 யா/பரு/5017 திருமதி. புவனேஸ்வரி சபாரத்தினம்
240 யா/பரு/5021 திரு. சாதிப்பிள்ளை கதிர்காமத்தம்பி
241 யா/பரு/5024 திரு. கந்தையா பாலகிருஷ்ணன்
242 யா/பரு/5037 திருமதி. அகிலநாயகி பாலசிங்கம்
243 யா/பரு/5044 திரு. சிவராமலிங்கம் சோமசேகரம்
244 யா/பரு/5117 திருமதி. தெய்வானைப்பிள்ளை கந்தசாமி
245 யா/பரு/5126 திருமதி. பாலாம்பிகை இரத்தினசபாபதி
246 யா/பரு/5129 திருமதி. சின்னாச்சி சிதம்பரன்
247 யா/பரு/5171 திருமதி. முத்துப்பிள்ளை கந்தசாமி
248 யா/பரு/5182 திருமதி. கண்மணி சிவக்கொழுந்து
249 யா/பரு/5213 திருமதி. இராசம்மா சந்திரசேகரம்
250 யா/பரு/5230 திரு. அகஸ்ரின் அமிர்தநாதர்
251 யா/பரு/5261 திரு. சோமசுந்தரம் சுப்பிரமணியம்
252 யா/பரு/5270 திரு. கதிரேசு சட்டநாதர்
253 யா/பரு/5279 திருமதி. தங்கம்மா வேலாயுதம்
254 யா/பரு/5288 திருமதி. இராசபூபதி தெய்விலிங்கம்
255 யா/பரு/5348 திருமதி. சரஸ்வதிதேவி நல்லையா
256 யா/பரு/5413 திரு. சுப்பிரமணியம் செந்தில்வேல்தேசிகர்
257 யா/பரு/5417 திரு. சிதம்பரப்பிள்ளை பொன்னம்பலம்
258 யா/பரு/5418 திரு. பழனியாண்டி முத்துலிங்கசாமி
259 யா/பரு/5467 திருமதி. புஸ்பவதி சிவப்பிரகாசம்
260 யா/பரு/5515 திரு. மாணிக்கவாசகர் கனகராசா
261 யா/பரு/5522 திரு. இளையதம்பி சிவராசசிங்கம்
262 யா/பரு/5575 திருமதி. ஜானகியம்மா சுந்தரசிவா
263 யா/பரு/5578 திருமதி. அன்னம்மா நடராசசிங்கம்
264 யா/பரு/5611 திரு. வேலன் குணரத்தினம்
265 யா/பரு/5635 திருமதி. பரமேஸ்வரி இளையதம்பி
266 யா/பரு/5652 திரு. சின்னையா கணபதிப்பிள்ளை
267 யா/பரு/5666 திரு. இரத்தினம் மகாலிங்கம்
268 யா/பரு/5687 திருமதி. தெய்வானைப்பிள்ளை முருகேசு
269 யா/பரு/5702 திருமதி. கனகம்மா ஞானசேகரம்
270 யா/பரு/5707 திரு. முருகுப்பிள்ளை சிவலிங்கம்
271 யா/பரு/5742 திரு. நடராசா தங்கவேலாயுதம்
272 யா/பரு/5755 திருமதி. தங்கரத்தினம் தங்கவேலாயுதம்
273 யா/பரு/5757 திரு. அருணாசலம் நல்லதம்பி
274 யா/பரு/5764 திரு. கந்தசாமி சோமசேகரம்
275 யா/பரு/5776 திருமதி. செல்லம்மா இரத்தினவேலாயுதம்
276 யா/பரு/5778 திரு. கந்தசாமி பொன்னம்பலம்
277 யா/பரு/5851 திரு. கிறிஸ்தக்கோன் யக்கோப்பிள்ளை
278 யா/பரு/5884 திரு. செல்லையா கதிர்காமத்தம்பி
279 யா/பரு/5903 திரு. கதிரவேலு பாலசிங்கம்
280 யா/பரு/5911 திருமதி. பாறுபதி வீரகத்திப்பிள்ளை
281 யா/பரு/5932 திருமதி. பரஞ்சோதியம்மா அகிலநாதன்
282 யா/பரு/6002 திரு. சபாரத்தினம் வேலாயுதபிள்ளை
283 யா/பரு/6057 திருமதி. உருக்குமணி செல்வராஜா
284 யா/பரு/6089 திருமதி. உலகநாயகி நடராசா
285 யா/பரு/6104 திருமதி. சரோஜா சிவசோதி
286 யா/பரு/6189 திரு. முருகேசு சுப்பிரமணியம் கந்தசாமி
287 யா/பரு/6191 திரு. கந்தவனம் சிதம்பரநாதன்
288 யா/பரு/6206 திருமதி. சின்னத்தங்கம் சின்னையா
289 யா/பரு/6221 திரு. தங்கராஜா தங்கவேலாயுதம்
290 யா/பரு/6253 திருமதி. தங்கராணி தர்மதாஸ்
291 யா/பரு/6310 திரு. கந்தவனம் கிருஷ்ணபிள்ளை
292 யா/பரு/6313 திரு. வீரகத்தி வடிவேலு
293 யா/பரு/6330 திரு. மயில்வாகனம் சோமசுந்தரம்
294 யா/பரு/6352 திரு. தங்கராசா அருச்சுணலிங்கம்
295 யா/பரு/6424 திருமதி. சரோஜா சிவசோதி
296 யா/பரு/6461 திரு. வல்லிபுரம் வேலாயுதம்
297 யா/பரு/6497 திரு. சிதம்பரம் குணத்திலிங்கம்
298 யா/பரு/6501 திரு. சின்னத்தம்பி மகேசன்
299 யா/பரு/6514 திரு. இராசரத்தினம் இரத்தினகோபால்
300 யா/பரு/6573 திருமதி. நாகேஸ்வரி சிவராஜசிங்கம்
301 யா/பரு/6635 திருமதி. தேவசிரோன்மணி முத்துராசா
302 யா/பரு/6655 திருமதி. மனோன்மணி கிருஷ்ணபிள்ளை
303 யா/பரு/6701 திரு. பாலசிங்கம் லிங்கமூர்த்தி
304 யா/பரு/6718 திருமதி. பத்மாதேவி சோதிகலாபம்
305 யா/பரு/6742 திருமதி. மகேஸ்வரி குலசேகரம்
306 யா/பரு/6783 திரு. சங்கரப்பிள்ளை செல்வராசா
307 யா/பரு/6799 திரு. செல்லத்துரை ஆறுமுகசாமி
308 யா/பரு/6815 திரு. வேலுப்பிள்ளை ஜெயச்சந்திரன்
309 யா/பரு/6835 திரு. முத்தையா யோண்குணநாயகம்

## வவுனியா உதவி அரச அதிபர் பிரிவு

1 வ/வ/4 திரு. சின்னத்துரை தனபாலசிங்கம்
2 வ/வ/8 திரு. சவரிமுத்து அன்ரன் இம்மனுவேல்
3 வ/வ/9 திரு. விக்கினேஸ்வரா லோகேஸ்வரன்
4 வ/வ/10 திரு. ஜயாத்துரை நகுலேந்திரன்
5 வ/வ/14 திரு. சிற்றம்பலம் கந்தசாமி
6 வ/வ/15 திரு. சண்முகநாதன் சிவானந்தம்
7 வ/வ/18 திரு. ஜயாத்துரை ரவீந்திரன்
8 வ/வ/21 திரு. நடராசா தேவராசா
9 வ/வ/23 திரு. நடராசா புலேந்திரன்
10 வ/வ/26 திரு. வைத்திலிங்கம் ஜெயபாலகிருஸ்ணன்
11 வ/வ/27 திரு. விநாயகர் செல்லத்துரை
12 வ/வ/30 திரு. கணபதிப்பிள்ளை நாகேந்திரராசா
13 வ/வ/32 திரு. நாராயணசாமி இராமசாமிநாயுடு
14 வ/வ/37 திரு. ஜயாத்துரை மகேந்திரன்
15 வ/வ/38 திரு. நாகமுத்து இலட்சுமிகாந்தன்
16 வ/வ/40 திருமதி. புவனேஸ்வரி ஞானசேகரம்
17 வ/வ/41 திரு. தம்பையா சுந்தரலிங்கம்
18 வ/வ/47 திரு. கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு
19 வ/வ/48 திரு. சுந்தரம் பரந்தாமன்
20 வ/வ/49 திருமதி. சிவமதி தர்மராசா
21 வ/வ/52 திரு. பொன்னையா ஆனந்தநடராசா
22 வ/வ/55 திருமதி. சரஸ்வதி நாகேசு
23 வ/வ/56 திரு. இராசையா தேவராசா
24 வ/வ/57 திரு. பொன்னையா செம்பலிங்கம்
25 வ/வ/58 திரு. செல்லையா தியாகராசா
26 வ/வ/60 திரு. துரையப்பா குலசிங்கம்
27 வ/வ/63 திரு. தில்லையம்பலம் கந்தசாமி
28 வ/வ/67 திரு. காத்திகேசு இராசலிங்கம்
29 வ/வ/68 திரு. வேலுப்பிள்ளை சீவரத்தினம்
30 வ/வ/69 திரு. செல்லத்துரை ஸ்ரீநிவாசகம்
31 வ/வ/75 திரு. செல்லத்துரை பரமசாமி
32 வ/வ/76 திருமதி. சாந்தினிதேவி சத்தியமூர்த்தி
33 வ/வ/82 திரு. வைரமுத்து சிவசுப்பிரமணியம்
34 வ/வ/83 திரு. கனகசபை குலசிங்கம்
35 வ/வ/87 திரு. சிதம்பரம் இராசு
36 வ/வ/90 திரு. சவரிமுத்து பத்திமாஜெயபாலன்
37 வ/வ/92 திருமதி. அன்னலக்சுமி பஞ்சாட்சரம்
38 வ/வ/94 திரு. சம்புநாதன் சம்பந்தர்
39 வ/வ/96 திரு. சின்னத்தம்பி சிவகுமார்
40 வ/வ/99 திரு. சிதம்பரப்பிள்ளை கணேசமூர்த்தி
41 வ/வ/102 திரு. இரத்தினம் தங்கராசா
42 வ/வ/103 திரு. சண்முகம் சிவராசா
43 வ/வ/109 திரு. பொன்னுத்துரை சிவஞானசுந்தரம்
44 வ/வ/110 திரு. ஆறுமுகம் கோவஸ்வரன்
45 வ/வ/111 திரு. சின்னத்தம்பி பாலசுந்தரம்
46 வ/வ/114 திரு. அண்ணாமலை செல்வராசா
47 வ/வ/120 திரு. மயில்வாகனம் குணலட்சுமணன்
48 வ/வ/123 திரு. செல்லையா யோகானந்தம்
49 வ/வ/131 திரு. தாமோதரம்பிள்ளை தனபாலசிங்கம்
50 வ/வ/137 திரு. மாரிமுத்து தர்மலிங்கம்
51 வ/வ/141 திருமதி. ஜெயலட்சுமி பரமநாதன்
52 வ/வ/145 திரு. பொன்னுத்துரை அமிர்தலிங்கம்
53 வ/வ/148 திருமதி. அன்னபூரணம் குணலிங்கம்
54 வ/வ/153 திருமதி. செல்லம்மா நல்லையா
55 வ/வ/154 திரு. குணசூரி அருளானந்தம்
56 வ/வ/156 திரு. சுப்பையா பொன்னுத்துரை
57 வ/வ/160 திரு. சுப்பிரமணியம் குமாரராசா
58 வ/வ/161 திரு. சந்தாம்பிள்ளை யோகராசா
59 வ/வ/167 திரு. சின்னப்பொடி திருஞானசம்பந்தமூர்த்தி
60 வ/வ/168 திரு. வயிரவிப்பிள்ளை திருநாவுக்கரசு
61 வ/வ/169 திரு. நாகலிங்கம் சந்திரலிங்கம்
62 வ/வ/174 திரு. செல்லத்துரை மதுரை (அரசரத்தினம்)
63 வ/வ/175 திரு. சுப்பிரமணியம் திருஞானசம்பந்தமூர்த்தி
64 வ/வ/176 திரு. தம்பிராசா திருஞானசம்பந்தம்
65 வ/வ/178 திருமதி. தவராணி பாலசுப்பிரமணியம்
66 வ/வ/180 திரு. கனகசபை சிவசேகரம்
67 வ/வ/183 திரு. கந்தசாமி சிவசுப்பிரமணியம்
68 வ/வ/185 திருமதி. மகேஸ்வரி ஜெயவர்த்தன
69 வ/வ/186 திரு. சுப்பையா இரத்தினசிங்கம்
70 வ/வ/189 திரு. வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்.
71 வ/வ/191 திரு. மயில்வாகனம் சுப்பிரமணியம்
72 வ/வ/196 திரு. சுப்பிரமணியம் நவரத்தினராசா
73 வ/வ/198 திரு. மாணிக்கம் கிருஷ்ணர்
74 வ/வ/199 திரு. சங்கரப்பிள்ளை மாணிக்கவாசகர்
75 வ/வ/200 திரு. சங்கரப்பிள்ளை மகாலிங்கம்
76 வ/வ/205 திரு. நாகலிங்கம் லிங்கோபன்
77 வ/வ/209 திரு. வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்
78 வ/வ/212 திரு. செல்லையா சுந்தரம்பிள்ளை
79 வ/வ/215 திருமதி. பரமேஸ்வரி யோகநாதன்
80 வ/வ/218 திரு. இராமசாமி சிவனேஸ்வரன்
81 வ/வ/219 திரு. கணபதிப்பிள்ளை குணசிங்கம்
82 வ/வ/220 திரு. நல்லதம்பி நடேசலிங்கம்
83 வ/வ/223 திருமதி. சிவபாக்கியம் தியாகராஜா
84 வ/வ/224 திரு. நாகலிங்கம் ஜயாத்துரை
85 வ/வ/226 திரு. தில்லையம்பலம் குலராஜசிங்கம்
86 வ/வ/229 திரு. ஜயாத்துரை நவரத்தினம்
87 வ/வ/230 திருமதி. சரஸ்வதி முத்துக்கிருஷ்ணன்
88 வ/வ/232 திரு. இராசதுரை லிங்கேஸ்வரன்
89 வ/வ/234 திரு. தம்பிராசா செல்வராசா
90 வ/வ/235 திரு. சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்
91 வ/வ/239 திரு. இராமநாதர் பஞ்சலிங்கம்
92 வ/வ/242 திருமதி. யோகேஸ்வரி சிறிதரன்
93 வ/வ/245 திரு. முத்தையா சிவஞானசுந்தரம்
94 வ/வ/246 திரு. பேரம்பலம் செல்வரத்தினம்
95 வ/வ/247 திரு. வைத்திலிங்கம் சுப்பிரமணியம்
96 வ/வ/248 திரு. நல்லலிங்கம் கணேசலிங்கம்
97 வ/வ/250 திரு. பொன்னையா சிவசுப்பிரமணியம்
98 வ/வ/252 திரு. சண்முகம் வேலாயுதம்
99 வ/வ/253 திரு. காசிப்பிள்ளை நாகராசா
100 வ/வ/254 திரு. அரியகுட்டி பாலகிருஷ்ணன்
101 வ/வ/255 திரு. நாகமுத்து இராசேந்திரம்
102 வ/வ/256 திரு. நடராசா தெய்வேந்திரராசா
103 வ/வ/257 திருமதி. பூலோகபாக்கியம் வல்லிபுரம்
104 வ/வ/258 திரு. நடராசா செல்லத்துரை
105 வ/வ/259 திரு. விநாசித்தம்பி சிவசுப்பிரமணியம்
106 வ/வ/261 திரு. கந்தையா சண்முகராஜா
107 வ/வ/262 திருமதி. பாக்கியலட்சுமி விநாயகமூர்த்தி
108 வ/வ/263 திரு. சுந்தரம்பிள்ளை மகேந்திரராசா
109 வ/வ/264 திரு. அருளம்பலம் நாகேந்திரன்
110 வ/வ/266 திரு. குலசேகரம் ஸ்ரீஆனந்தன்
111 வ/வ/268 திரு. முத்தையா கணேசமூர்த்தி
112 வ/வ/269 திரு. ஆறுமுகம் இராசேந்திரம்
113 வ/வ/270 திரு. மயில்வாகனம் செல்வராசா
114 வ/வ/271 திரு. கந்தையா தம்பிராசா
115 வ/வ/272 திரு. சிதம்பரப்பிள்ளை குலராசசிங்கம்
116 வ/வ/274 திரு. சங்கரப்பிள்ளை கமலேஸ்வரன்
117 வ/வ/275 திரு. செல்லையா கிருஷ்ணபிள்ளை
118 வ/வ/283 திரு. செல்லத்துரை நவரத்தினம்
119 வ/வ/285 திருமதி. குகனேஸ்வரி பாலசுப்பிரமணியம்
120 வ/வ/286 திரு. செல்லத்துரை விஸ்வநாதன்
121 வ/வ/290 திரு. விநாயகர் லோகராசா
122 வ/வ/293 திரு. கதிரவேலு பரகுணம்
123 வ/வ/295 திரு. விநாயகர் சிவசிதம்பரம்
124 வ/வ/303 திரு. சுப்பிரமணியம் சுந்தரம்
125 வ/வ/304 திரு. குமாரஜயா நாகநாதன்
126 வ/வ/305 திருமதி. அன்னலட்சுமி செல்வராசா
127 வ/வ/306 திரு. மனுவேற்பிள்ளை நாகலிங்கம்
128 வ/வ/310 திரு. வெள்ளந்துரை இராமலிங்கம்
129 வ/வ/311 திரு. குழந்தைவேலு பாலச்சந்திரன்
130 வ/வ/319 திரு. கார்த்திகேசு செல்வலிங்கம்
131 வ/வ/323 திரு. சிதம்பரப்பிள்ளை செல்வசுந்தரம்
132 வ/வ/324 திரு. இராசையா பாலசுந்தரம்
133 வ/வ/326 திரு. நாகமுத்து பாலசுப்பிரமணியம்
134 வ/வ/328 திரு. தில்லையம்பலம் கிருஸ்ணேஷ்வரன்
135 வ/வ/330 திருமதி. வசந்தகுமாரி உமாமகேஸ்வரதாசன்
136 வ/வ/331 திரு. குமாரசாமி பன்னீர்செல்வம்
137 வ/வ/332 திரு. இளையதம்பி தருமபாலன்
138 வ/வ/333 திரு. நல்லதம்பி குலசிங்கம்
139 வ/வ/335 திரு. நடராசசிங்கம் விமலராசா
140 வ/வ/336 திரு. கார்த்திகேசு இரத்தினம்
141 வ/வ/337 திரு. சுப்பிரமணியம் மகேந்திரராசா
142 வ/வ/341 திரு. சரவணமுத்து அருளானந்தம்
143 வ/வ/346 திரு. செல்லத்தம்பி பரமானந்தம்
144 வ/வ/348 திரு. நல்லதுரை வரதராசா
145 வ/வ/350 திரு. தருமலிங்கம் தருமரத்தினம்
146 வ/வ/352 திரு. குமரேசு கெங்காதரன்
147 வ/வ/354 திரு. கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை
148 வ/வ/357 திரு. முத்துக்குமாரு பாலச்சந்திரன்
149 வ/வ/358 திரு. திருவம்பலம் யோகராசா
150 வ/வ/362 திரு. பரமநாதன் இராஜசேகரம்
151 வ/வ/364 திரு. கார்த்திகேசு குணலிங்கம்
152 வ/வ/365 திரு. தம்பிராசா தியாகராசா
153 வ/வ/368 திரு. தம்பிராசா சொர்ணலிங்கம்
154 வ/வ/369 திரு. செல்லத்துரை மார்க்கண்டு
155 வ/வ/372 திரு. கணபதிப்பிள்ளை கயிலைநாதன்
156 வ/வ/373 திரு. சபாரத்தினம் சந்திரசேகரம்
157 வ/வ/378 திரு. சிவகுரு சிவசுப்பிரமணியம்
158 வ/வ/383 திரு. சவரிமுத்து தருமராசா
159 வ/வ/386 திரு. சிதம்பரப்பிள்ளை தியாகராசா
160 வ/வ/388 திரு. சினனத்துரை சிவபாதம்
161 வ/வ/389 திரு. சிதம்பரப்பிள்ளை யோகராசா
162 வ/வ/393 திரு. நாகலிங்கம் சிவகணேசன்
163 வ/வ/397 திரு. முத்தையா தங்கராசா
164 வ/வ/399 திரு. சின்னையா சிவராசா
165 வ/வ/403 திரு. பூபாலசிங்கம் பாலசிங்கம்
166 வ/வ/405 திரு. பரமசாமி சிவானந்தராசா
167 வ/வ/406 திரு. சிதம்பரப்பிள்ளை அற்புதராசா
168 வ/வ/407 திரு. சின்னப்பொடி சிவசுப்பிரமணியம்
169 வ/வ/411 திரு. ஆறுமுகம் அமிர்தலிங்கம்
170 வ/வ/413 திரு. இராமநாதன் மகேஸ்வரன்
171 வ/வ/415 திரு. தம்பாப்பிள்ளை தருமரத்தினம்
172 வ/வ/416 திரு. நாகலிங்கம் நடராசா
173 வ/வ/417 திரு. சரவணமுத்து தனபாலசிங்கம்
174 வ/வ/418 திரு. கனகசபை தேவராசா
175 வ/வ/420 திரு. சிதம்பரப்பிள்ளை செல்வரத்தினம்
176 வ/வ/422 திரு. முருகப்பர் துரைராசா
177 வ/வ/423 திரு. பொன்னுத்துரை மனோகரசிங்கம்
178 வ/வ/432 திரு. சின்னக்குட்டி பூபாலசிங்கம்
179 வ/வ/440 திரு. இராமலிங்கம் மாணிக்கவாசகர்
180 வ/வ/443 திரு. இரத்தினம் தர்மு
181 வ/வ/447 திரு. இராமு கணேசன்
182 வ/வ/448 திருமதி. தையல்நாயகி நவரத்தினராசா

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2005

183 வ/வ/452 திரு. ஜெயமணி ஜெபநேசர்
184 வ/வ/456 திரு. தம்பையா கதிர்காமநாதன்
185 வ/வ/458 திரு. சின்னத்தம்பி மயில்வாகனம்
186 வ/வ/460 திரு. கந்தையா முருகையா
187 வ/வ/464 திரு. துரைச்சாமி சித்திரவேல்
188 வ/வ/465 திரு. மாசிலாமணி நடராசா
189 வ/வ/469 திரு. செல்லையா தளையசிங்கம்
190 வ/வ/473 திரு. சிதம்பரப்பிள்ளை சின்னராசா
191 வ/வ/476 திரு. வீரையா இராசேஸ்வரன்
192 வ/வ/482 திரு. தியாகராசா இலட்சுமிகாந்தன்
193 வ/வ/483 திரு. கனகசபை அமிர்தலிங்கம்
194 வ/வ/484 திரு. ஏகாம்பரம் சேதுபதி
195 வ/வ/487 திரு. சின்னத்தம்பி பாலசிங்கம்
196 வ/வ/489 திரு. பெருமாள்பிள்ளை பரமசிவம்
197 வ/வ/490 திரு. சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை
198 வ/வ/491 திரு. திருஞானம் ரவிராசா
199 வ/வ/492 திரு. நடராசா தர்மலிங்கம்
200 வ/வ/494 திரு. எம் நடராசன்
201 வ/வ/495 திரு. செல்லத்துரை பவளசேனன்
202 வ/வ/500 திரு. கந்தையா இராசலிங்கம்
203 வ/வ/501 திரு. சிவபாதசுந்தரம் ஞானசம்பந்தர்
204 வ/வ/502 திரு. அழகசாமி இராமசுவாமி
205 வ/வ/504 திரு. வைத்திலிங்கம் பாலசுப்பிரமணியம்
206 வ/வ/505 திரு. செல்வம் இராமச்சந்திரன்
207 வ/வ/506 திரு. தியாகநாகலிங்கம் கணேசலிங்கம்
208 வ/வ/509 திரு. கந்தையா நடராசா
209 வ/வ/510 திருமதி. பூமணி தில்லைநடராசா
210 வ/வ/513 திரு. சண்முகநாதன் குகனேஸ்வரன்
211 வ/வ/516 திரு. சண்முகநாதன் தேவராசா
212 வ/வ/517 திருமதி. லூர்த்துவசந்தா அமிர்தலிங்கம்
213 வ/வ/520 திரு. அருளம்பலம் குலசேகரம்
214 வ/வ/521 திரு. வேலாயுதம் ஜெகநாதபிள்ளை
215 வ/வ523 திரு. கனகரட்ணம் மல்லிகராசா
216 வ/வ/524 திரு. சிங்கராயர் ஜெயராஜா
217 வ/வ/526 திரு. விநாயகமூர்த்தி குகானந்தராஜா
218 வ/வ/528 திரு. கதிரவேலு தனபாலசிங்கம்
219 வ/வ/529 திரு. கணவதிப்பிள்ளை இரத்தினசிங்கம்
220 வ/வ/532 திரு. அருணாசலம் சந்திரசேகரம்
221 வ/வ/533 திருமதி. நிர்மலாதேவி விஷயகுமார்
222 வ/வ/534 திருமதி. ஸ்ரீரஞ்சினி நமோகுமாராய
223 வ/வ/536 திரு. நல்லையா ஞானசுந்தரம்
224 வ/வ/537 திரு. அண்ணாமலை கிருஷ்ணசாமி
225 வ/வ/538 திரு. சின்னத்தம்பி தியாகராசா
226 வ/வ/539 திரு. ஆறுமுகம் தெய்வேந்திரம்பிள்ளை
227 வ/வ/541 திரு. சேனாதிராசா நடேசபிள்ளை
228 வ/வ/542 திரு. சுப்பிரமணியம் செல்வநாயகம்
229 வ/வ/543 திரு. வீரவாகு ஞானப்பிரகாசம்
230 வ/வ/545 திருமதி. சிவமணி ஞானப்பிரகாசம்
231 வ/வ/546 திரு. செல்லையா கனகசபை
232 வ/வ/548 திரு. விநாசி இராசதுரை
233 வ/வ/550 திரு. முத்துச்சாமி நடராசா
234 வ/வ/551 திரு. ஆறுமுகம் நாகேந்திரன்
235 வ/வ/552 திரு. ஸ்ரீகண்டு சண்முகநாதன்
236 வ/வ/554 திருமதி. புனிதவதி மகாலிங்கம்
237 வ/வ/555 திரு. வைத்தி கோபாலசிங்கம்
238 வ/வ/556 திரு. சிவகுரு கணேசமூர்த்தி
239 வ/வ/558 திரு. மணியம் நடராசா
240 வ/வ/559 திரு. மயில்வாகனம் அமிர்தலிங்கம்
241 வ/வ/560 திரு. கந்தையா சிதம்பரநாதன்
242 வ/வ/562 திரு. முருகேசு தவராசா
243 வ/வ/563 திருமதி. அன்னபூரணம் இந்திரராஜா
244 வ/வ/564 திரு. இராசையா கிருஷ்ணானந்தன்
245 வ/வ/567 திரு. நல்லையா சுப்பிரமணியம்
246 வ/வ/568 திரு. சண்முகம் பாலசிங்கம்
247 வ/வ/570 திரு. குமாராத்தை செல்வராசா
248 வ/வ/571 திரு. குருநாதபிள்ளை நாகராசா
249 வ/வ/573 திரு. முத்துச்சாமி மகேந்திரன்
250 வ/வ/575 திரு. பேதுரு செல்வநாயகம்
251 வ/வ/576 திரு. சிதம்பரப்பிள்ளை அமிர்தலிங்கம்
252 வ/வ/580 திரு. சுப்பிரமணியம் செல்வராசா
253 வ/வ/581 திரு. நாகமணி யோகராசா
254 வ/வ/583 திரு. பாலசிங்கம் வேலுப்பிள்ளை
255 வ/வ/584 திரு. சுந்தரம்பிள்ளை இராஜன்
256 வ/வ/586 திரு. அந்தோனிப்பிள்ளை இம்மனுவல் யோசெப்
257 வ/வ/590 திரு. சின்னத்தம்பி கந்தசாமி
258 வ/வ/592 திரு. வேலாயுதம் புண்ணியம்
259 வ/வ/593 திருமதி. லில்லிபுளோறா நடேசமூர்த்தி
260 வ/வ/596 திரு. சண்முகம் திருச்செல்வம்
261 வ/வ/597 திரு. கனகலிங்கம் மகேந்திரன்
262 வ/வ/598 திரு. அருளானந்தம் தர்மராஜா
263 வ/வ/599 திரு. ஏகாம்பரம் சிவலிங்கம்
264 வ/வ/601 திரு. பழனியாண்டிப்பிள்ளை முருகராஜ்
265 வ/வ/605 திரு. கதிரவேலு பாலசிங்கம்
266 வ/வ/608 திரு. முடியப்பு அருள்நாதன்
267 வ/வ/609 திரு. கதிரவேலு மகேந்திரராசா
268 வ/வ/611 திரு. நல்லதம்பி துரைசிங்கம்
269 வ/வ/612 திரு. துரைராசா சாந்தகுமார்
270 வ/வ/614 திரு. சந்தேயினர் விமலநாதன்
271 வ/வ/615 திரு. சிவசிதம்பரம் சந்திரசேகரம்
272 வ/வ/616 திரு. வேலுப்பிள்ளை ஜயம்பிள்ளை
273 வ/வ/620 திரு. சின்னத்துரை சிவநாதன்
274 வ/வ/623 திருமதி. புனிதவதி தர்மலிங்கம்
275 வ/வ/625 திரு. ஆரியர் பாக்கியநாதன்
276 வ/வ/626 திரு. கனகசபை சிவலிங்கம்
277 வ/வ/628 திரு. நாகலிங்கம் யோகராசா
278 வ/வ/629 திரு. சுவாமிநாதன் இராசநாயகம்
279 வ/வ/630 திரு. சோமசுந்தரம் சிவராசா
280 வ/வ/631 திரு. சின்னத்தம்பி குணநாயகம்
281 வ/வ/632 திரு. சுப்பையா சுப்பிரமணியம்
282 வ/வ/633 திரு. நெல்லியர் சிவராசா
283 வ/வ/636 திருமதி. பத்மினி ரமணி
284 வ/வ/637 திரு. சபாபதிப்பிள்ளை செல்லத்துரை
285 வ/வ/640 திரு. காங்கேசு முத்துராசா
286 வ/வ/641 திரு. பெருமாள் பெரியசாமி
287 வ/வ/645 திரு. சிவஞானம் சோதிலிங்கம்
288 வ/வ/647 திரு. இராசையா செல்வரத்தினம்
289 வ/வ/648 திரு. பொன்னம்பலம் பிள்ளையினார்
290 வ/வ/650 திரு. மகாலிங்கம் ரவிச்சந்திரன்
291 வ/வ/653 திரு. செல்லத்துரை செந்தில்நாதன்
292 வ/வ/654 திரு. செல்லத்துரை சிவபாதம்
293 வ/வ/656 திரு. தம்பாப்பிள்ளை நடராசா
294 வ/வ/657 திரு. கா தேவராசன்
295 வ/வ/659 திரு. மயில்வாகனம் அமிர்தலிங்கம்
296 வ/வ/660 திரு. இரத்தினசபாபதி விக்னேஸ்வரன்
297 வ/வ/661 திரு. காசிப்பிள்ளை செல்வராசா
298 வ/வ/663 திரு. கதிர்காமு சேனாதிராசா
299 வ/வ/666 திரு. சிதம்பரப்பிள்ளை தியாகராசா
300 வ/வ/667 திரு. சின்னையா சிவசேகரம்
301 வ/வ/670 திருமதி. மல்லிகாதேவி சிவசுப்பிரமணியம்
302 வ/வ/673 திருமதி. மகேஸ்வரி பாக்கியநாதன்
303 வ/வ/679 திருமதி. நித்தியாதேவி தெய்வநாயகம்
304 வ/வ/682 திரு. வீரசிங்கம் சிவபாதம்
305 வ/வ/683 திரு. தர்மலிங்கம் சிவபாலன்
306 வ/வ/684 திரு. கந்தையா புலேந்திரன்
307 வ/வ/687 திரு. அருளம்பலம் சண்முகநாதன்
308 வ/வ/692 திரு. மயில்வாகனம் செல்வநாயகம்
309 வ/வ/694 திரு. நல்லசேகரம் இராசகுலசிங்கம்
310 வ/வ/695 திரு. நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்
311 வ/வ/698 செல்வன். முருகேசு நகுலேஸ்வரன்
312 வ/வ/700 திரு. மயில்வாகனம் உதயகுமார்
313 வ/வ/701 திரு. வேலுப்பிள்ளை தங்கராசா
314 வ/வ/702 திரு. குணசேகரி ரகுகுலநாதன்
315 வ/வ/706 திரு. கணபதிப்பிள்ளை பொன்னையா
316 வ/வ/709 திரு. வேலுப்பிள்ளைகுருக்கள் யோகராசகுருக்கள்
317 வ/வ/711 திரு. முத்தையா பாக்கியநாதன்
318 வ/வ/714 திருமதி. தவமணி பரமேஸ்வரன்
319 வ/வ/715 திரு. காசிப்பிள்ளை தேவராசா
320 வ/வ/716 திரு. வீரவாகு தர்மலிங்கம்
321 வ/வ/717 திரு. தர்மலிங்கம் முத்துலிங்கம்
322 வ/வ/720 திரு. அண்ணாமலை சிவகுரு
323 வ/வ/724 திரு. ஜயம்பிள்ளை சிவராசா
324 வ/வ/726 திரு. கறுப்பையா நடராசா
325 வ/வ/727 திரு. விநாயகமூர்த்தி கணேசலிங்கம்

## வாசிப்புப்பழக்கம் மனிதனை சமூக உணர்வுடையவனாக மாற்றுகிறது

### யாழ்.நூலக விழிப்புணர்வு நிறுவனத் தலைவர்

வாசிப்புப்பழக்கம் இல்லாதிருக்கும் போது எமது வட்டம் மிகச் சிறியதாகவே இருக்கின்றது. அங்கே நாம் மிகவும் கர்வமுடையவராகவும், மனிதப் பண்பு குறைந்தவர்களாகவும் இருப்போம். பல்வேறு நூல்களையும் வாசிக்க வாசிக்க எமது வட்டம் பெரிதாகும். எமது அறியாமைகள் அகலும். பரந்த வாசிப்புப் பழக்கம் மட்டுமே ஒருவரை சமூக உணர்வுடன் கூடிய மனிதராக உருவாக்குகின்றது. எமது மனதை இலேசாதனதாக மாற்றி விடுகின்றது என்று கூறினார் நூலக விழிப்புணர்வு நிறுவகத் தலைவர் அ.ஸ்ரீகாந்த லட்சுமி.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, நூலக விழிப்புணர்வு நிறுவகம் யாழ்ப்பாணப் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் அறிமுகம் செய்து வைத்த 'நூலுக்கோர் மாலை' என்ற நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே அ.ஸ்ரீகாந்தலட்சுமி இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், கவிஞர் சோ.பத்மநாதன் உட்பட பலர் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சியில் - செல்வி அ.ஸ்ரீகாந்தலட்சுமி தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

யாழ்ப்பாண மாவட்ட மக்கள் கல்வியறிவில் உயர்ந்தவர்கள் என்ற கருத்து உண்டு. இந்த எண்ணக்கருத்தை சற்று ஆராய முயலும் போது, விரக்தியும் வேதனையுமே எங்கள் மத்தியில் மிஞ்சி நிற்பதனை உணர முடிகின்றது. பொதுவாகவே யாழ்ப்பாண சமூகம் கல்வியில் உயர்ந்து நிற்கின்றது என்று கூறினாலும், அது வாசிப்பில் பின் நிற்கின்றது என்பதே உண்மையாகும். இந்த முரண்பாடு ஏன்? இது ஆராயப்படல் வேண்டும். கல்வி கற்றல் என்பது வேறு. அறிவைத் தேடுவது என்பது வேறு. கல்வி மட்டங்கள் வரையறைக்குட்பட்டது. ஆனால் அறிவு அப்படியல்ல.

எம்மிடம் தராதரப்பத்திரங்களுக்குக் குறைவில்லை. எமது கல்வியும், எமது அக்கறைகளும் அவற்றை நிறையவே தந்துள்ளது. கல்வி தனிமனித திறமையையும், பொருளாதாரத்தில் உயர்வினையும் தரும் என்றால் இன்று நாம் வளர்ச்சியின் உச்சியில் நின்றிருக்கவேண்டும்.

ஆனால் யதார்த்தில் அப்படியில்லையே. இங்கு இந்த முரண்பாடு ஏன்? எமது திறமை சமூக மேம்பாட்டுக்கு உதவக் கூடியதாக, சமூக உணர்வுடன் கூடியதாக இருக்கவேண்டும். அதற்கேற்ப எமது அறிவு சமூக விழிப்புணர்வுடையதாக விரிவடைய வேண்டும். ஆனால் இங்கே நாம் எல்லோருமே தனித்தனியாக வாழும் அளவுக்கு எமது கல்விக் கொள்கைகள் அமைந்து விட்டன. மறுபக்கத்தில் இந்தக் குறைபாட்டை நிவர்த்திக்கக் கூடியதான வகையில் வாசிப்புப் பழக்கமும் இல்லாது போய்விட்டது. வாசிப்பதற்கு மிக உகந்த இடம் நூல் நிலையங்கள் என்பது மறுப்பதற்கில்லை. பொதுவாக நூலகங்களை ஒவ்வொரு பெரிய மனங்களும் சந்தித்துக் கொள்ளும் இடம் என்றும் குறிப்பிடுவார்கள்.

எமது நூலக விழிப்புணர்வு நிறுவகம் வாசிப் புப்பழக்கத்தை தூண்டுவதற்காக இவ்வாறான நிகழ்வுகளை மாதாந்தம் நடாத்தத் திட்ட மிட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நிகழ்வில் கவிஞர் சோ.பத்மநாதனால் குலாத்தி (தந்தையற்றவன்) என்ற நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. (31)

## தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சால்வை, தாமரைப்பூவுக்கு தடை!

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியற் கட்சிகளின் சின்னங்கள் தவிர வேறெந்தச் சின்னத்தையும் பயன்படுத்தி தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள இடமளிப்பதில்லை என தேர்தல் ஆணையாளர் முடிவு செய்துள்ளார்.

அரசியற் கட்சிகள் பல்வேறு சின்னங்களைப் பயன்படுத்தி பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதானால் தேர்தல் ஆணையாளர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடங்கள், வேட்பாளர் பயணம் செய்யும் வாகனங்கள் தவிர வேறு இடங்களில் பல்வேறு சின்னங்களைப் பயன்படுத்தி தேர்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கெதிராக செயற்படுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் தேர்தல் ஆணையாளர் பொலிஸாருக்கு அறிவித்தல் விடுத்துள்ளார்.

இந்த முடிவின்படி சால்வை மற்றும் தாமரைபூ போன்றவற்றை பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது

அதேநேரம், அரசியற் கட்சிகள் தங்கள் கட்சியின் தேர்தல் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## மீன்பிடி உபகரணம் அன்பளிப்பு

வடமாராட்சி

வடமாரட்சிப் பகுதியிலுள்ள கொட்டடி, சுப்பர்மடம், எரிஞ்ச அம்மன் கோவில் ஆகிய கிராமங்களில் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர்களுக்கு அறிவழிப் போராட்டக்குழு மீன்பிடி உபகரணங்களை வழங்கவுள்ளது. (17)

## 233 கொத்தணி வாக்குச் சாவடிகள் வடக்கு - கிழக்கில் அமைக்கப்படும்!

கொழும்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக- யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 233 கொத்தணிவாக்குச் சாவடிகள் அமைக்கப்படுமென தேர்தல் திணைக்களத்தின் உதவித் தேர்தல் ஆணையாளர் லசிங்க பீரிஸ் தெரிவித்தார்.

அமைக்கப்படவுள்ள அனைத்து கொத்தணி வாக்குச் சாவடிகளிலும், உள்ளூர் மற்றும் வெளியூர் கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவாரெனவும் அவர் தெரிவித்தார்.

கொத்தணி வாக்குச்சாவடிகள், அரசாங்க கட்டடங்கள் மற்றும் தற்காலிக கொட்டகைகளில் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, வடக்கு, கிழக்கில் தேர்தல் நடைபெறுவது குறித்து ஆராய்வதற்காக அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவிற்குமிடையே இன்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. (தே)

## வேர்ல்ட்விஸன் பணியாளர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

மட்டக்களப்பு

உலக தரிசன நிறுவனத்தால் பட்டிப்பளை, வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி பிரதேசங்களில் பணிபுரியும் தமது பணியாளர்களுக்கு நேற்று முன்தினம் 100 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. அத்துடன் பட்டிருப்பு தேசிய பாடசாலையில் கல்வி பயிலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு தொகையான மாணவர்களுக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

இதுவரையில் மட்டு - அம்பாறை மாவட்டங்களில் உலக தரிசன நிறுவனத்தால் 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளதாக உலக தரிசன நிறுவனத்தின் வடக்கு - கிழக்கு மாகாண நிறை வேற்றுப் பணிப்பாளர் எஸ். சுதர்சனன் தெரிவித்தார்.

இதேவேளை சுனாமியால் பாதிக்கப்பட்ட மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேசத்திலுள்ள சமுத்திரபுரக் கிராமத்தில் இந்த நிறுவனத்தால் சிறுவர்களுக்கான விளையாட்டுப் பூங்கா, அமைக்கும் பணிகள் சிறுவர் நலன் பாதுகாப்பு இணைப்பு அதிகாரி அருண் ஆரோக்கியநாதன் தலைமையின் கீழ் நடைபெற்று வருகின்றன.



பண்ணாகம் அம்பாள் கலைமன்ற கலாசார மண்டபத்தை இளைப்பாறிய ஆசிரியை பண்டிதை இரத்தினம் சுப்பிரமணியம் நாடாவை வெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.